# ஸ்ரீ நாராயண குரு



1854 — 1928

# ஸ்ரீ நாராயண குரு

[சிறு வாழ்க்கை சரித்திரம்]

முதற் பதிப்பு

திரு. கெ. மாதவன், ஆர்டிஸ்ட்
மலையாளத்தில் இயற்றிய

ஸ்ரீ நாராயண குருதேவன்' என்ற
நூலின் தமிழாக்கம்.

ஆக்கம் செய்தவர்.

திரு. எஸ். அரோணிமூஸ்.

# Sree Narayana Guru

(Biography)

Author in Malayalam : Sri. K. Madhavan, Artist

Translated into Tamil by Sri. S. Aronimoos

Published by : Tmt. G. Saroja

3-C. Doraisamy Naicken Garden

Kothaval Chavadi Street

Saidapet Madras-15

Ist impression : September—1989

No. of Copies : 5000

Copy right Reserved

---

Printed at : Guardian Press, Madras.

Price : Rs. 20/-

# ஆசியுரை

உலகில் சமதர்ம சமுதாயம் மலர்ந்திட, சமுதாய சீர்திருத்தச் செம்மலாய்—சான்றாண்மை மிக்குடைய சமரச ஞானியாய்—நலிந்தோர்க்கு ஏற்றமும் நல்வாழ்வும் அளித்து அவர்கள் வாழ்வில் ஒளி வெள்ளம் பாய்ச்சிய கர்மயோகியாய்—வாழ்ந்து, 'வாழ்ந்து' காட்டிய மெய் ஞானி திரு. நாராயண குரு ஆவார்.

குருதேவர் இந்த உலகுக்கு வழங்கிய கருத்துக் கருவூலங்கள்—சிந்தனைச் செல்வங்கள்—தத்துவச் சுடர்கள்—கொள்கை முழக்கங்கள் அனைத்தும் உயிர்ப்புள்ளவை; உலக மக்களுக்கு உன்னத வழிகாட்டிகளாய்த் திகழ்பவை.

போதனைகள் மட்டும் அல்ல; அந்த போதனைகளையே சாதனைகளாக மாற்றிய மகத்தான மாபுருஷர் நமது குருதேவர்.

மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குருதேவர் பற்றிய நூல்கள் ஏராளம் உள்ளன. ஆனால் தமிழில்...... ?

தேனினும் இனிய தெய்வத் தமிழில், குருதேவர் பற்றிய நூல்கள் பல்கிப் பெருகி வெளிவர வேண்டும் என்று விரும்புகிறோம். அதன் கன்னி முயற்சியே—இச் சிறு நூல்.

'ஸ்ரீ நாராயண குருதேவன்' என்னும் தலைப்பில் ஆர்டிஸ்ட் திரு. கெ. மாதவன் என்னும் கலை நலம்மிக்க பெரியார் மலையாளத்தில் செய்துள்ள நூலை, இனிமையும் எடுப்பும் தோன்ற நல்ல தமிழில் நல்லறிவாளர் திரு. S. அரோணிமூஸ் அவர்கள் மொழி பெயர்த்து நூலாக்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

பல பணிகளுக்கிடையே குருதேவர் பற்றிய அருள் நூலை படைத்தளித்த அவர், மேன்மேலும் இத்தகைய நல்லப் நூல்களை எழுதி குருதேவர் பணிகளில் உபகரிக்கவும், அவர் நீண்ட ஆயுளும் நிறை புகழும் பெற்று வாழவும் வேண்டுகிறோம்.

சென்னை-112

31-8-'89

தவத்திரு சித்ருபானந்த சுவாமி
செயலாளர்
ஸ்ரீ நாராயண மந்திரம்.

நாஞ்சில். கி. மனோகரன்
வருவாய்த்துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
நாள் 27—8—1989

# வாழ்த்துரை

சமுதாய சீர்திருத்தத்தின் விடிவெள்ளி என்றும், ''தீண்டாமை'' எனும் தீமையைக் களைந்தெறிய பாடு பட்டு வெற்றி பெற்ற மாபெரும் புரட்சி வீரர் எனப் பெயர் பெற்றவரும் ஒன்றே குலம், ஒருவனே கடவுள் ஒரே ஜாதி என்ற மனிதாபிமான, எல்லைக் கோடுகளைத் தாண்டி மானிட சாதியின் தன்மான, இணக்கமான தலை நிமிர்ந்த வாழ்வு எனும் ஒளிவிளக்கை ஏற்றி வைத்தவர், சிந்தனையாளர், திருமிகு நாராயண குரு அவர்கள் ஆவார்கள் !

தமிழகத்திற்கு ஒரு பெரியார்—கேரளத்திற்கு ஒரு நாராயண குரு—இது ஒரு காலகட்டம் வரை; இப்போது இருவரும் உலக மக்களுக்கு, நிற பேதம், இன பேதம், மத பேதம் போன்ற மாறுபாடுகளால் கொடுமைகளாக் கப்பட்ட தலைவரின் இதயங்களிலும் வீற்றிருக்கிறார்கள்.

பெரியாரைப் பற்றி கேரளம் தெரிய வேண்டும். குருவைப்பற்றி தமிழகம் புரியவேண்டும். இரண்டு மாநிலங்களின் மூலம் இருவரைப் பற்றி நாநிலம் தெரிந்து கொள்ளவேண்டும்! அந்த இருபெரும் தத்துவ மேதை களின் கருத்துரைகள், சேதிகள் எங்கணும் எதிரொலிக்க வேண்டும். இதுவே என் அவா! வேண்டுகோள்.

தமிழக முதல்வர்கள் அண்ணாவும், இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் இவர்களைப்பற்றி நன்கு தெரிந்தவர்கள்! எனவே கருத்துப் பரிவர்த்தனைக்கு நாடு

தயாராகட்டும் குரு, வெல்லட்டும் — குறிக்கோள் தழைக்கட்டும்.

'ஸ்ரீ நாராயண குரு' என்ற தலைப்பில் திரு. K. மாதவன் ஆர்டிஸ்ட் அவர்கள் மலையாளத்தில் தீட்டிய, குருதேவரின் ஆழ்ந்த சிந்தனைகளை உள்ளடக்கிய புத்தகத்தை திரு. S. அரோணிமுஸ் அவர்கள் தமிழாக்கம் செய்த பிரதியை ஓரளவிற்கு படித்துப் பார்க்கின்ற வாய்ப்பினை பெற்றேன்.

குரு அவர்களின் கவிதைகளை, கட்டுரைகளை விரும்பி அவைகளில் தனது உள்ளத்தை பறிகொடுத்திருக்கிறார், மொழி ஆக்கம் செய்த ஆசிரியர் என்பதை நூலை நுகர்ந்தாலே புரிந்து கொள்ளலாம்.

இலாவகமான முறையில், எளிய நடையில் குரு அவர்களின் சிந்தனைகளை வரிசைப்படுத்தியிருக்கும் முறை அலாதியானது. உலகைத் தூய்மைப்படுத்தி, உள்ளங்களில் தேங்கிக்கிடக்கும் அறியாமையை அகற்றிட குரு அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நூலாசிரியர் தனது அன்பு காணிக்கையைச் செலுத்தியுள்ளார்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற குரு அவர்களின் இலட்சியங்களுக்கு, ஏடு ஆக்கம் செய்த திரு. S. அரோணிமூஸ் அவர்கள் புதிய உயிரூட்டம் தந்துள்ளார்.

ஆங்கிலத்திலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டால் மானிடசாதிக்கு மிகவும் பயன்படும். நூலாசிரியருக்கு என் நல்வாழ்த்துக்கள்.

**நாஞ்சில் கி. மனோகரன்**
ஒப்பம்.
வருவாய்த்துறை அமைச்சர்.

# பணிந்துரை

உலக வரலாற்றைப் புரட்டினால் ஒவ்வொரு கால கட்டத்திலும் உலகின் வெவ்வேறு பகுதிகளில் திவ்விய மகான்கள் தோன்றி இன்னல்களில் உழலுகின்ற மக்க ளுக்கு ஈடேற்றம் வழங்கி அவர்கள் வாழ்க்கையை முன்னேற்ற தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தி ருப்பதைக் காணலாம். அவர்களுள் சிறப்பாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், புத்தபிரான். இயேசுகிறிஸ்து, நபிகள் நாயகம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இத்தொடரில் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியா வின் தென் கோடியாம் கேரள நாட்டின் தலை நகரான திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள செம்பழந்தி என்ற சிறு கிராமத்தில் வயல்வாரம் எனும் குடிசையில் அவத ரித்த ஒரு மகானாக போற்றப்படுகிறார் ஸ்ரீ நாராயண குருதேவர். ஸ்ரீ நாராயண குருவிற்கும் ஏனைய அவ தாரங்களுக்கும் ஒரு வேற்றுமையைக் காணலாம். அவர்கள் தாங்கள்தான் கடவுள்; தங்களைத் தவிர இறைவன் இல்லை எனக்கூறிப் போந்தனர். ஆனால் ஸ்ரீ நாராயண குரு தன்னைக் கடவுள் என பறை சாற்றவில்லை, தனது பிறப்பு முதல் இறுதி மூச்சுவரையிலும் உணர்வு இழந்து விட்ட நலிந்த மக்களுக்கு வாழ்வில் ஏற்றம் ஏற்பட தம்மை அர்ப்பணித்து, மறுமலர்ச்சியை—எழுச்சியை—புரட்சியை உருவாக்கிய பெருந்தகையாவர். உடலளவில் அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும், உள்ள உணர்வு வழி நம்முடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரை உலகறியச் செய்வது நமது கடமை. இந்த உயரிய நோக்குடன் ''ஸ்ரீ நாராயண குரு'' எனும் இச்சிறு நூலை தமிழில் ஆக்கம் செய்து குருதேவரின் மலரடிகளில் காணிக்கையாக்குகிறேன்.

ஸ்ரீ நாராயண குருதேவரைப் பற்றிய நூல்கள், ஏராள மாக வரையப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் பெரும் பகுதி மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே வெளி

வந்துள்ளன. குருதேவரைப் பற்றி தமிழில் ஒரு சிறு நூல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மற்றும் ஏனைய சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் 135-வது ஜெயந்தி விழாவில் வெளியிடுவது, தமிழக மக்களுக்கு குருதேவரை மேலும் அறிமுகம் செய்வதற்கும் அன்னாரின் எழுச்சிமிக்க தத்துவச்சுடரை மக்கள் நலனுக்காக வழங்குவதற்கும் பயன்படும் என சென்னை வெப்பேரி ஸ்ரீ நாராயண மந்திரம் செயலர் தவத்திரு சித்ருபானந்த ஸ்வாமிகளும் தவத்திரு அருபானந்த ஸ்வாமிகளும் என்னிடம் கூறினார்கள். திரு. கெ. மாதவன் ஆர்டிஸ்ட் அவர்கள் மலையாளத்தில் இயற்றிய ''ஸ்ரீ நாராயண குருதேவன்'' என்ற சிறு நூலைத் தமிழில் ஆக்கம் செய்தல் நலம் என கோரினர். அதன் விளைவே இந்த எளிய படைப்பு.

மொழி ஆக்கம் என்பது வெறும் சொல்லாலே சிறப்பதல்ல என உணர்ந்தேன். சொல்லின் பொருளும், வழங்கும மரபும், பயன்பட்டுவரும் வகையும் தெரிந்தோர்க்குமட்டுமே இந்தப் பணி சிறப்படையும் என்பது உறுதி. மேலும் நாம் கையாளும் சொற்கள் நம்மைக் கையாண்டுவிடாமல் கடமையை ஆற்றும் கருவூலமே மொழி ஆக்கம் என்பது அறிஞர்கள் கூற்று.

மலையாள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு ஆக்கம் செய்வது எளிது என தோன்றிய எனக்கு, இதில் ஏற்பட்ட சிக்கல் சற்று அச்சத்தை ஏற்படுத்தியது. சொல்லுக்குச் சொல் நேரிடையாகவே மொழி பெயர்க்காமல் பொருளுக்குப் பொருள் பொருந்திவரும் வகையில் ஆக்கம் செய்வது சாலச்சிறந்தது என எண்ணி அவ்வாறே பல இடங்களிலும் செய்துள்ளேன். குருதேவர் ஸமஸ்கிருத மொழியில் இயற்றிய பாடல்களில் வரும் சொற்கள் பொருள் சிதைவு ஏற்படக்கூடாது என அஞ்சி அவ்வாறே வழங்கியுள்ளேன்.

இது எனது முதல் முயற்சியாகும்.

இன்னூலில் பதின்மூன்று அதிகாரங்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் முதல் பதினொன்று, மொழி ஆக்கம் செய்த பகுதிகள் ஆகும். எஞ்சிய இரண்டு அதிகாரங்களும் குருதேவரின் அற்புதச் சித்திகள் பற்றியும், தமிழ் நாட்டில் குருதேவரின் தொண்டு பற்றியும் சித்தரிக்கின்றன. மேலும், குருதேவரின் வாழ்க்கைக் குறிப்பினைத் தொகுத்துத் தனியாக வழங்கியுள்ளேன்.

இந்நூல் குருதேவரின் ஒரு முழு வாழ்க்கை சரித்திரமன்று; குருதேவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளையும் அன்னாரின் தீஞ்சுவை தேவாமிருத கருத்தினையும், தத்துவச் சிந்தனைகளையும் தாமே ஆத்ம சோதனை செய்து புடம் போட்ட தங்கம்போல் தூய்மைப்படுத்திய மக்கள் தொண்டுகளையும் இந்நூல் சித்தரிக்கிறது.

இந்தப் பணியைத் தொடங்கியபின், இடர்கள் பல ஏற்பட்டது எனக்கு; இன்னல்களை இன்பங்களாக மாற்றியது குருதேவரின் அருள்மட்டுமே.

இன்னூலின் அதிகாரம் 13-ல் உள்ள ''தமிழ் நாட்டில் குருதேவரின் தொண்டு'' என்னும் தேனூறும் தமிழ் படைப்பு முழுவதும் காஞ்சி தந்த முத்து புலவர் திரு. சி. ஈ. எஸ். பெருமாள் அவர்களுடையது. சிறப்புமிக்க அன்னாரின் இந்தக் கட்டுரை மெய்சிலிர்க்கவைக்கும் அழகான — அருமையான—நயமான—வளமான இனிமையான—சிறந்த படைப்பாகும். மேலும் இப் புத்தகத்திற்கான கையெழுத்துப் பிரதி முழுவதையும் நுண்ணாய்வு செய்து திருத்தங்கள் செய்து முழுமைப்படுத்திய பெருமை திரு பெருமாள் அவர்களையே சாரும். எனக்கு அச்சம் அல்லது தயக்கம் ஏற்பட்ட போதெல்லாம் 'நாம் இருக்க பயம் ஏன்' என ஆறுதல் கூறி ஆக்கமும் ஊக்கமும் அளித்த அந்த தமிழ்ச் செம்மலுக்கு எனது உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

பகவத்கீதை மற்றும் உபநிடதங்கள் ஆகியவற்றில் இருந்து கற்றறிந்த தத்துவச்சுடர்களை மூல நூலிலிருந்து

ஆக்கம் செய்யும்போது ஏற்பட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் தந்து தெளிவுறச் செய்த பெருமகனார் டாக்டர் திரு. சதானந்தன் அவர்கள் ஆவார். இவர் குருதேவரைப் பற்றிய ஏராளமான நூல்களை இயற்றுவதற்கு ஊக்கம் அளித்தவராவர். இப் பெருமகனாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு மூலகாரணமாக இருந்தவர்கள், தவத்திரு சித்ரூபானந்த ஸ்வாமிகள், தவத்திரு அரூபானந்தா ஸ்வாமிகள் ஆகியோர் ஆவர். இவ்விரட்டையர் சென்னை ஸ்ரீ நாராயண மந்திரத்தின் மறுமலர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் தங்களை அர்ப்பணித்து, அயராது உழைக்கும் குருதேவரின் துறவிச் சங்கத்தின் தவச் செல்வர்களே. குருதேவர் தத்துவ முழக்கமான ''ஒரே ஜாதி; ஒரே மதம்; ஒரே கடவுள்—மனிதருக்கு'' என்னும் அற்புதச் சுடரொளி, எல்லா இல்லங்களிலும் ஓங்கி ஜொலிக்க—அவர்கள் ஆற்றும் தொண்டு சிறக்க வேண்டும் என குருதேவரை வணங்கி வேண்டுகிறேன்.

எனது இந்த எளிய படைப்பினை இதய பூர்வமாக வாழ்த்திடும் தமிழகத்தின் தானைத் தலைவர்—தன்னிகரில்லா தமிழ்ப் பெருந்தகை—தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் என்றும் மறவேன். நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி நல்வாழ்த்தினை நல்கிச் சிறப்பித்திடும் தித்திக்கும் தீந்தமிழ்ச் செல்வர்—நற்றமிழ்க் காவலர்—நாஞ்சிலார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்தப் புத்தகத்தை உரிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்த கார்டியன் பிரஸ் உரிமையாளர் திரு. செ. வர்க்கீஸ் அவர்களுக்கும் நான் நன்றி நவில்கின்றேன்.

சென்னை-112,
29—8—89

எஸ். அரோணிமூஸ்
தமிழாக்க நூலாசிரியர்

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | ஆசியுரை | iii |
| | வாழ்த்துரை | v |
| | பணிந்துரை | vii |
| 2. | பிறப்பும் கல்வியும் | 8 |
| 3. | இலட்சியமும் மார்க்கமும் | 23 |
| 4. | தவம் | 33 |
| 5. | குருதேவரும் சமூக மறுமலர்ச்சியும் | 39 |
| 6. | குருதேவரும் கோயில் நிர்மாணித்தலும் | 58 |
| 7. | குருதேவரும் ஒரே ஜாதியும் | 66 |
| 8. | குருதேவர் கண்ட ஒரே மதம் | 71 |
| 9. | குருதேவர் கண்ட ஒரே கடவுள் | 79 |
| 10. | குருதேவரின் தர்ம உபதேசங்கள் | 85 |
| 11, | மகாசமாதி | 95 |
| 12. | குருதேவரின் அற்புதங்கள் | 110 |
| 13. | தமிழ்நாட்டில் குருதேவரின் தொண்டுகள் | 118 |

# ஸ்ரீ நாராயண குருதேவர்

"ஓம் பிரம்மணே மூர்த்திமதே
ஸ்ரீதானாம் சுத்திகேதவே
நாராயண யதீந்த்ராய
தஸ்மை ஸ்ரீகுருவே நம !"

அதிக்ர்ரம் - I

## குரு

உலகம் தொடங்கிய நாள்முதல் இன்றுவரை இடைவிடாத அதன் இயக்கம், மாற்றங்களையும், புதுமைகளையும், விஞ்ஞானத்தின் புரட்சிமிக்க படைப்புகளையும் ஏற்படுத்தி உள்ளது. அதற்காக நமது முனிவர்களும், கவிச்சக்கரவர்த்திகளும், தத்துவ மேதைகளும் சாஸ்திர ஆசிரியர்களும் நமக்கு வழங்கியுள்ள படைப்புகள் என்றும் அழியாதவைகளாகும். இப்படியாக இன்றைய உலகம் இருபதாம் நூற்றுண்டைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. உட்புறமும் வெளியிலும் இதுவரை அதன் இயக்கத்தை ஆத்மீய உணர்வுடன் நோக்குங்கால், வத உபநிடதங்கள், வால்மீகி, வியாசர், காளிதாசன் கிய மகான்களின் வரலாற்றுச் சிறப்புகளை ஊடுருவி ருட்சுடர் ஒளிர்விட்டுப் பிரகாசிப்பதைக் காணலாம். ாரதநாட்டில் ஸ்ரீசங்கராச்சாரியருக்குப்பின், பல முனீசுவரர்களும் அவதரித்துள்ளனர். அவர்களில்ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவர், ஸ்வாமி விவேகானந்தர், ரமணமகர்ஷி, ஸ்ரீ அரவிந்த கோஷ், தயானந்த ஸரஸ்வதி, ஸ்ரீ நாராயண குருதேவர் ஸ்ரீ சட்டம்பி ஸ்வாமி திருவடிகள் ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர். கேரளாவில் ஆதிசங்கரருக்குப் பின்தோன்றிய ஒரு மகாத்மாவாக ஸ்ரீ நாராயண

பரம ஹம்சர் திகழ்ந்தார். ஆழ்ந்த கருத்துக்களும் சாதாரண மனிதர்களுக்குப் புரிந்துகொள்ளமுடியாத, ஆனால் மானிட வாழ்க்கைக்கு மிக முக்கிய் தேவைகள் என உணர்த்தக் கூடிய வேத சாஸ்திரங்களும், உபநிடதங்களும் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டிருந்ததால் அதன் பொருள் என்னவென்று சமஸ்கிருத மொழி கற்றறியாதவர்களுக்கு புலப்படாமல் இருந்தது. ஸ்ரீ நாராயண குரு அவதரித்த பின், அந்த மகான் வேத சாஸ்திரங்கள் மற்றும் உபநிடதங்களிலிருந்து புரிந்துகொண்ட கருத்துக்கள் மற்றும் அவைகளிலிருந்து பெற்ற ஆன்ம அனுபூதிச் செல்வங்களை தன் சொந்த வாழ்க்கையில் வெளிப்படுத்தியது மட்டுமின்றி, சாதாரண மனிதர்கள்கூட படித்து புரிந்து கொள்ளுமளவிற்கு சரஸ்வதிதேவியின் அற்புத மொழி ஆற்றலின் வாயிலாக உன்னத எழில் காப்பியங்களாக படைத்துள்ளார். உலக பிரசித்திபெற்ற கவிதைகளான குருதேவரின் "ஆத்மோபதேச சதகம்", "தர்சன மாலா", "தைவ பத்து" ஜனனீ, நவரத்ன மஞ்சரி போன்ற படைப்புகள் அன்னாரின் ஒப்புயர்வற்ற அறிவாற்றலின் சுடரொளிகளாகத் திகழ்கின்றன.

காலப்போக்கில் எண்ணற்ற பிறப்புகள் நடக்கின்ற போதிலும் புனிதவேளையில் அவதரித்து வாழ்க்கையினை தன் ஸத்கர்மத்தால் தூய்மைப்படுத்தி ஏற்றமிகும் லட்சியங்களால் ஏனையோர்க்கு வழிகாட்டியாக திகழ்ந்த மகான்கள் உலகில் மிக சொற்பமே. தத்துவ ஞானத்தின் மகிமை புரிந்தவர்களுக்குமட்டும்தான் தத்துவஞா[illegible] சித்திக்கான அனுஷ்டானங்கள் செய்வதற்கும் அதனா[illegible] ஞானியாகி இறைவன் பதம் அடைவதற்கும் உள்[illegible] பேறு கிடைத்துள்ளது. ஸ்ரீ நாராயண குருதேவர் தமக்குள் தாமே ஆத்மானுபூதி காண முற்படுகின்றார்.

"இதம் சரீரம் களந்தேய:
க்ஷேத்திர மித்திய பீதியதே
ஏதத்தியோ வேத்திதம் ப்ராகு:
க்ஷேத்திரஞ இதி தத் வித:

க்ஷேத்திரஞும் சாபிமாம் விதி
சர்வக்ஷே த்திரேசு பாரத
க்ஷேத்திர க்ஷேத்திரஞயோர் ஞானம்
யத்தன் ஞானம் மதம் மம '', - கீதை

இந்த உடல் ஒரு கோயில் எனவும், அதில் குடி கொண்டிருக்கும் ஜோதிர்மயமான ஜீவன் இறைவனின் ஒரு அம்சமே எனவும் உணர்ந்திருந்த குரு அந்த மனித கோவிலில் உள்ள ஆத்மச்சுடரொளியை தத்துவங்கள் வாயிலாக மனதை உயிருட்டம் பெற முயற்சிக்கிறார்.

'' மகா பூதான்ய ஹங்காரோ
புத்திரவ்ய க்த மேவச
இந்திரியாணி : தசைகம்ச
பஞ்ச சேந்திரிய கோசர:

இச்சா துவேஷம் சுகம் துக்கம்
சம்காத சேதனா திருதி
ஏதல் க்ஷேத்ரம் சமாசேன
சவிகாரம் மிருதா கிருதம் '' - கீதை

இந்த உடலானது பஞ்ச பூதங்கள், ஆங்காரம், மகிமை, தெளிவற்ற நிலை ஆகியவற்றின் அடிப்படையிலானது எனவும் புலன்கள், மனம், ஒலி, ஸ்பர்சம், சுகம், துக்கம் போன்றவைகளுடனும் கூடியதாக உள்ளது எனவும் சொந்தமாக அறிந்த குரு '' விஷய வைராக்கிய '' பாவனை பெற முயன்றார். அதன் காரணமாக அஞ்ஞானம் அகன்று ஞானியாக மாறத் தேவையான மனப்பக்குவம் குருவிடம் உருவானது.

அமானித்துவ் மதம் பித்வ
மகிம்சா க்ஷாந்திராஜ் ஜவம்
ஆசார்யோபாசனம் சௌசம்
ஸ்தைரிய மாத்ம வினிக்கிரக :

இந்திரியதர் தேஷீ வைராக்கிய
மனஹங்கார ஏவச
ஜன்ம மிருத்தியூ ஜரா வியாதி
துகத்தோஷானு தர்சனம்,

அசக்திரன பிஷுக்ன
புத்திரதார கிருஹாதிஷு
நித்யம் சஸமசித்தத்துவ
மிஷ்டாநிஷ்டோப பத்திஷு

மயிசானன்னிய யோகேய
பக்திரவ்ய பிசாரிணி
விவிக்த தேச ஸேவித்வ
மரதிர் ஜனஸம் ஸதி

ஆத்யாத்ம ஞான நித்தித்துவம்
தத்துவ ஞான தர்சனம்
ஏதல் ஞான மிதி ப்ரோக்த
மஞ்ஞானம் யததோன்யதா'' கீதை-அ.13

ஒருவர் தன் உயர்ந்த பண்புகளை அவர்தாமே புகழ்ந்து கூறக்கூடாது. ஆஷாடபூதி வேஷம் பூண்டு தன் மகிமையை விளம்பரப்படுத்தக்கூடாது. மனத்தாலும் செயலாலும் பிறருக்கு தீங்கு இழைக்கலாகாது. பிறர் தமக்கு இழைத்த தீங்கிற்காக எதிர்த்து செயலாற்றலாகாது. மனம், மொழி, செயல் இவைகளில் பொய்மை இல்லாமல் இருத்தல் வேண்டும். பேரின்ப மோட்சத்தை அடைய அறிவுரை வழங்கும் குருவிற்குப் பணிவிடை புரிந்து அன்னாருக் மகிழ்ச்சி ஊட்டவேண்டும். உடல் தூய்மையும் மன தூய்மையும் உள்ளவனாக இருத்தல் வேண்டும். நற்செயல் களில் மட்டும் நிலையான உறுதிவேண்டும். உடல், புலன் கள், மனம் ஆகியவற்றினை மோட்சம் அடையும் வழியில் மட்டும் செலுத்தவேண்டும். இறுமாப்பு கொள்ளா இருத்தல் வேண்டும். பிறப்பு, இறப்பு, முதுமை ஆகியவற்றில் துன்பத்தையும் பயனின்மையையும் காண்க. குழந்தைகள், மனைவி, வீடு இவற்றில் விருப்பம் இருத்தல்

ஆகாது. தாரம் மற்றும் குழந்தைகளின் இன்ப துன்பங் களில் நாட்டம் செலுத்தாமல் இருக்க வேண்டும். வேண்டுதல் வேண்டாமை இவற்றில் ஒரே மனத்துடன் சிறிதும் கோப மின்றி செயல்படுக. சர்வ வல்லமையும் பரபிரம்ம சொரூபனுமாகிய இறைவனிடம் பக்தியுள்ள வனாக இருத்தல் வேண்டும். சுத்தியும் மன அருட் பிரசாதத்தை வழங்கும் படியாகவும் செயல்படுக. விவேக மற்றவர்களுடன் நாட்டம் இல்லாமல் இருப்பது, ஆத்மாவின்பால் நாட்டமுள்ள ஞானத்தில் எப்பொழுதும் நாட்டம்செலுத்துவது, தத்துவஞானம் ஒன்றைக்கொண்டு மட்டும் தான் மோட்சம் அடையமுடியும் என்ற திடமான நம்பிக்கையுள்ளவனாக இருத்தல் என்ற கீதையின் இருபது தத்துவஞான உபதேசங்களை தன் வாழ்க்கையில் சான்று பகர்ந்து ஒரு ரிஷியாகத் திகழ குருதேவருக்கு முடிந்தது. புத்தபிரான், நபிகள் நாயகம், ஏசுகிறிஸ்து ஆகிய மகான் களின் கர்ம மார்க்கங்களும் இதுவாகத்தான் இருந்தது என உணர்வுடைய சிந்தனையாளருக்கு புரிந்து கொள்ள முடியும். வாழ்க்கையின் தொடக்கம்முதல் செயல் நெறி களில் புறத்தூய்மையும் மனத்தூய்மையும் உருவாக்க இயலும். அதற்குப்பின் ஆசனங்கள் புரிந்து பிராணாயாம யோக நிஷ்டைகளால் தன் உடம்பை நோயின்மையாக்கி தியானசமாதி மூலமாக மனித எல்லை மீறிய நிலைமை ஏற்பட ஏதுவாகும். இந்த சித்திகள் பிறவி மற்றும் கர்மம் மூலம் தூய்மை பெற்றவர்களுக்கு மட்டும் தான் கிடைத் துள்ளன.

இளம் வயது முதல் இறைவன் கருணையால் ஒரு யுவயோகியாகித் திகழ்ந்த ஸ்ரீ நாராயண குருதேவர், ஒரு மெய்யறிவாளருக்குரிய ஆற்றல் பெற்று விளங்கியதால் தான் பிற்காலத்தில் மனிதனுக்கு அப்பாற்ப்பட்ட இயல் புடைய சித்தனாக, ஓர் பண்டிதசிரோமணியாக நாம் அன்னாரை பார்க்கமுடிகிறது. யார் இந்த ஞானயோகி ?

தனக்கென சிறிதளவேனும் வெளிப்படையாக லாபத்தை இச்சிக்காமல், எவ்வித சுயநலநோக்கமுமின்றி,

வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் ஆத்ம சொரூபமான இறைவன் திருவடிகளை நாடுபவன் தான் ஞானயோகி. எவ்வித துன்பத்திலும் மனம் தளராமல் இருத்தல் இன்பத்திலும் இச்சையில்லாமல் இருத்தல், தமக்கு தேவையானது கிடைத்துவிட்டால் புகழ்பாடுவதும், தேவையற்றது கிடைத்துவிட்டால் தூற்றுவதும் செய்யாமல், எதிலும் பற்றற்று இருப்பவனே ஞானியென்பவரின் உண்மையான நிலை.

ஒரு ஆமையானது தன் உறுப்புகளை பிறர் தொந்தரவு ஏற்படுமே என அஞ்சி எல்லா வெளிப்பாகங்களிலுமிருந்து உட்புறமாக ஈர்த்து அசையாமல் இருப்பதுபோல் ஒரு யோகி தனது புலன்களை உள்ளடக்கி தனது மனக்கட்டுப் பாட்டின் கீழ் நிலைகொள்ளச் செய்யும் அமைதியான நிலைக்கு ஞானயோகியின் நிலை எனலாம்.

இப்படியாக மனதில் ஏற்படும் ஆசைகளை தியாக உணர்வுடன் உதறித்தள்ளி மனித எல்லைக்கு அப்பாற் பட்ட உணர்வுக்கு தன்னை இட்டுச் செல்லும்போது பிரம ஞானியான அந்த அருட்ச் செயல்வீரன் எப்போதும் அலட்சியம் கொண்டவனைப்போல் தோன்றுவான். இன்ப துன்பங்களில் சம நிலைமேற்கொண்டும், மண், பொன் இவற்றினை ஒன்றென எண்ணியும், விருப்பு வெறுப்பின்றி புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும், மானத்திலும் அவமானத்தி லும் ஒரே கையாளுமுறை மேற்கொண்டு, நண்பர்களையும் பகைவர்களையும் ஒன்றாக எண்ணுபவனே எல்லா குணங் களுக்கும் அப்பாற்பட்டவன். இப்படிப்பட்ட ஆத்ம நிஷ்டைகளைக் கையாண்டு நிலையான மன நிலையை அமைத்து சமாதி நிலை அடைந்து அதினின்று விழித்து பேரொளியுடன் ஏராளம் சித்திகள் தாமே கைவரப் பெற்றவராய்த் திகழ்ந்த ஒரு ரிஷியாக இருந்தார் ஸ்ரீ நாராயண குருதேவர். வாழ்வின் இறுதிநாட்களில் ஆசிரமத்தில் வாழ்ந்து, மனித சமூகத்தில் நிலவிய அறியாமையையும், தீயபழக்க வழக்கங்களையும் எதிர்த்து சமூக நீதியும், சகோதரத்துவ ஒற்றுமையும் உருவாக்க

அன்னார் தன் வாழ்நாளில் ஆற்றிய தொண்டு சரித்திர உண்மைகளாகும். இங்ஙனம் ஆத்ம ஒற்றுமை படைத்த வருக்கு எதிர்ப்பு என ஒன்றும் இருப்பதில்லை. அனைத்து இடையூறுகளையும் வெல்வதற்கு வல்லமைபடைத்த அந்த மகரிஷி இவ்வாறு கூறியுள்ளார்.

''ஸ்ரீ புத்தரின் காலத்தில் கொலைகள் அதிகமாக நடந்திருந்ததால் கொல்லாமை என்ற தர்மத்திற்கு புத்த பிரான் முக்கியத்துவம் அளித்தார். முகம்மது நபியின் காலத்தில் அரேபியாவில் சகோதரத்துவத்திற்கு அவசியம் ஏற்பட்டிருக்கலாம். எனவேதான் நபிகள் நாயகம் தான் போதித்த சமயத்தில் சகோதரத்து வத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறார். இன்று பாரதநாட்டின் தேவை என்ன! ஜாதிகள் மத்தியிலும், சமயங்கள் மத்தியிலும் நிலவுகின்ற போட்டி மனப் பான்மைக்கு முற்றுப் புள்ளி வைப்பதுதான். சமமான புத்தியுடனும் சமமான பக்தியுடனும் எல்லோரும் எல்லா சமயத் தத்துவங்களையும் கற்றறிய வேண்டும். அப்படி பெற்ற அறிவினை அன்பு வழியில், ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்ய முற்படவேண்டும். அப்போது புரியும், போட்டி சமயங்களால் அன்று; மாறாக அகந்தை யால்தான் ஏற்பட்டது என்று. சமய மாற்றங்களும் அப்போது நின்றுவிடும்''. இப்படியாக ஜாதி மற்றும் சமயங்களிடையே அறியாமை எனும் இருளில் ஏற்பட்ட பூசல்களில் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஸ்ரீ நாராயண பரமஹம்சரின் வாழ்நாளில் ஈடேற வேண்டி இருந்தது. அப்போது இருந்த சூழ்நிலைகள், அந்த ரிஷியின் பிறப்பின் அவசியத்தை உணர்த்துவதாக அமைந்தது.

அதிகாரம் - II

# பிறப்பும் கல்வியும்

ஸ்ரீ நாராயணகுரு கேரள நாட்டின் தலைநகரான திருவனந்தபுரம் நகருக்கு சுமார் ஏழு மைல்களுக்கு வடக்கு செம்பழந்தி என்ற கிராமத்தில் 1854-ஆம் ஆண்டு ஆகஸ்டு 28-ம் நாள் சதய நட்சத்திரத்தன்று அவதரித்தார். செம்பழந்தியில், மணக்கல் என்று அழைக்கப்படும் பகவதி அம்மன் கோவில் இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது. அந்த கோவிலின் வடமேற்குப் பகுதியில் ஒரு நிலம் உண்டு. அதன் பெயர் 'வயல் வாரம்' என்பதாகும். அங்கு இப்பொழுதும் ஒரு சிறு குடிசை காணலாம். கூரை, தென்னம் கீற்றுகளால் வேயப்பட்டதாகும். முன் பக்கம் மூங்கில் கழிகள்கொண்ட இந்த சிறு வீடு மூன்று அறைகள் கொண்டதாகும். அறைகளுக்கு கதவுகள் தவிர சாளரம் எதுவும் இல்லை. இந்த சிறிய குடிசையில் உலகில் நிரந்தரமாக செழித்தோங்கவேண்டியது மட்டுமின்றி மாந்தர் அனைவர்க்கும் விலைமதிப்பற்ற சகோதர உணர்வுடன் கூடிய அறிவுச்சுடரெனும் அமிர்தினையும், உபதேசங்களையும், அறிவுரைகளையும் வழங்கிய ஸ்ரீ நாராயண குருதேவர் அவதரித்தார். செம்பழந்தியில் இந்த புண்ணிய ஸ்தலம் இன்று எழிலும், தூய்மையும் வாய்ந்த வழிபாடு கேந்திரமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது.

குருதேவரின் தாய் தந்தையருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. குருதேவர் மட்டும் ஆண குழந்தையாகவும் எஞ்சிய மூவரும் பெண் குழந்தைகளாகவும் இருந்தனர். தந்தையான மாடன் ஆசான் சமஸ்கிருத மொழியில் போதுமான அறிவு பெற்றிருந்தார். அவர்தம் செல்வங்களை கல்வி பயிற்றுவிப்பதில் மிகுந்த ஆர்வம்கொண்டிருந்தார். குருதேவரின் தாயாரான குட்டிஅம்மை நற்பண்புகொண்டவராகவும் இறை பக்தி உடையவராகவும் இருந்தார்.

குருவிற்கு ராமன் வைத்தியர் என்றும், கிருஷ்ணன் வைத்தியர் என்றும் இரு மாமன்மார்கள் இருந்தார்கள். கிருஷ்ணன் வைத்தியர் ஆயுர்வேத சிகிச்சை அளிப்பதில் வல்லவராக இருந்தார். அவர் ஓர் ஆசிரியராகவும் இருந்தார். அக்காலத்தில் உயர் ஜாதிக்காரர்களின் தலைவர்கள், தங்களை சார்ந்த சமூகத்தவரின் முன்னேற்றத்திற்கு மட்டும் உழைத்திருந்ததால், அவர்கள் கீழ் பணி புரிந்த புலயர் போன்ற இனத்தவர் வளம் பெற்றுவாழ விரும்பவில்லை. கூடியவரை இந்த சமூகத்தவரை தொலைவில் நிற்கச்செய்தனர். நலிவுற்ற இந்த இனத்தவருக்கு தீண்டாமையையும், சுத்தமின்மையையும் கடைபிடிப்பதற்கு கற்பனைவழங்கி அதற்கு ஆக்கம் அளித்த பிரமுகர்களில் குருதேவரின் மாமாவும் ஒருவராக இருந்தார்.

குழந்தைக்கு இளமையில் ''நாராயணன்'' என பெயர் சூட்டப்பட்டிருந்தும் ''நாணு'' என்றுதான் குடும்ப அங்கத்தினர்களும் மற்றவர்களும் அவரை செல்லமாக அழைத்தனர். ஓரே நோக்கம், சிறிதும் பீதி அடையாமை, ஜீவகாருண்யம் போன்ற நற்பண்புகள் தமது இளம்வயதிலே ஒளி வீசியதைக் காணவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. விரத காலங்களில் பூசைக்காக நமது இல்லங்களில் சாமான்கள் சேர்த்துவைப்பதுண்டல்லவா ? ஒருநாள் குருதேவரின் வீட்டில் அதற்காக பழம் மற்றும் இனிப்பு பண்டங்கள் கொண்ட பொருட்கள் வாங்கிவைத்திருந்தார்கள். ஆனால் பூசை தொடங்குவதற்கு முன்னமே கதாநாயகனான குரு குழந்தைப் பருவத்தில் அவற்றை எடுத்துத்தின்றுவிடுவராம். இதற்காக அன்னாரை வீட்டார் கண்டிக்கவோ அல்லது வருத்தத்துடன் சொன்னாலோ அவர் புன்சிரிப்புடன் ''நான் மகிழ்ச்சி அடைந்தால், இறைவனும் மகிழ்ச்சி அடைவார்'' என மறுமொழி கூறுவாராம். இதனைத் தடுப்பதற்கு முயல்பவரை, தனது வாதத்திறமையால் தோற்கடிக்க அந்த குழந்தை முயன்றிருந்தது.

தீண்டப்படாதவர் என்று சொல்லப்பட்ட கீழ் ஜாதிக்காரர்கள், வீட்டிற்கு வெளியே எங்கேயாவது நிற்பதை கதாநாயகனான குரு பார்த்துவிட்டால், அவர்கள் அருகாமையில் ஓடிச்செல்வார். பின்னர் அவர்கள் அனைவரையும் தொட்ட பின் குளிக்காமலேயே தமது சொந்த வீட்டின் சமையல் அறைக்கு ஓடிச்செல்வார். மேலும் பெண்களையும் அளவுக்குமீறி சுத்தத்தை கடைப் பிடிக்கவேண்டும் என முரட்டுப்பிடிவாதம் கொள்பவரையும் தொட்டுக் களங்கப்படுத்துவதில் அலாதியான இன்பமும் மகிழ்ச்சியும் கண்டார். இப்படியாக குருதேவரின் களங்கமற்ற அன்புள்ளத்தில் தூய்மையான எண்ணங்கள் இளம் வயதிலேயே துளிர்விட்டன.

குழந்தையான குருவிற்கு ஆறுவயது மட்டும் தான் அப்போது ஆகி இருந்தது. அன்றொரு நாள் தனது வீட்டில் ஒரு மரணம் ஏற்பட்டது. பூதஉடலை தகனம் செய்து அந்திமக்கிரியைகள் எல்லாம் முடிந்த மறுநாள் குழந்தைய்யை வீட்டில் காணவில்லை. வீட்டில் இருந்த அனைவரும் பயந்து குழந்தையைத் தேட முயன்றனர். சற்றுபின்னர் பண்ணையில் பணி புரிந்த ஒரு தொழிலாளி குருதேவர் வீட்டிற்குவந்தான். நாணு குழந்தை அண்மையிலுள்ள சிறுகாட்டில் உள்ள முள்புதர்களுக்கிடையில் தன்னந்தனியாக இருப்பதை கண்ட விவரத்தை தெரிவித்தான். உடனே பலர் அங்கு ஓடிச்சென்று குழந்தையை தூக்கி வீட்டிற்குக் கொண்டு சேர்த்தனர். எதற்காக தன்னிச்சையாக காட்டிற்குச் சென்று இருந்தாய் என குழந்தையிடம் வினவியதற்கு, நாணு மறுமொழியாக ''நேற்று முன்தினம் இங்கு ஒரு மரணம் ஏற்பட்ட போது நீங்கள் அனைவரும் அழுது மிகவும் கவலையடைந்ததை கண்டேன். நேற்று நீங்கள் எல்லோரும் சிரித்து மகிழ்ந்தீர்கள். அதை பார்த்த பின்தான் நான் காட்டிற்குச் சென்று இருந்து விட்டேன்'' எனக் கூறினார்.

சிறுவயதில் தனது கல்வியின் ஆரம்ப காலத்தில் ஒரு நாள் 'நாணு' தன் உடன் படிக்கும் மாணவர்களுடன்

பள்ளியிலிருந்து தன்து வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியில் காவி உடைஅணிந்த ஒரு துறவியை அவர்கள் கண்ணுற்றனர். அன்னாரின் தனிச் சிறப்புடைய வேடத்தைப் பார்த்து வியப்பும் புதுமையும் அவர்கள் மனதில் தோன்றியது. மாறுபட்ட மனப் பான்மையிலும், குறும்பு சேஷ்டையிலுமிருந்த சில மாணவர்கள் துறவியின்மேல் கற்களை வீசினார்கள். உடன்பயிலும் மாணவர்களின் இந்த கொடிய சுற்றும் இரக்கமற்ற செயலைப் பார்த்து, வருங்கால துறவிகளுக் கான தர்மசங்கத்தின் தலமைப்பீடத்தை அழகுபடுத்த விருக்கும் குருதேவர் மிகவும் மனம் வருந்தினார். இந்த ஈனச்செயல் புரிந்தவர்களைக் கண்டிக்கவோ தடுக்கவோ இயலாமல் கதறி அழுதுவிட்டார். இதைக்கண்டு மனம் கலங்கிய துறவி அவர் அருகில் சென்று ஆறுதல் சொல்லி குழந்தையை தன் தோளில் தூக்கி அவரது வீட்டில் சேர்த்தார். இதுபோன்ற ஜீவகாருண்யமும் இரக்க மனப்பான்மையும் கொண்ட செயல்கள் குருதேவரின் பிற்கால வாழ்க்கைக்கு அடித்தளங்களாக அமைந்திருந்தன என சொல்லத் தேவையில்லை.

இளமைப்பருவம் எய்தியபோது சித்தரூபம், அமரம், பால பிரபோதம் போன்ற நூல்களை மனப்பாடமாக கற்க முயன்றார். படிப்பதை மிகவும் வேகமாக புரிந்து கொள்ளவும், புரிந்தவற்றை மனதில் ஊன்றி நிலைபெறச் செய்வதற்கான ஆற்றலும் திறமையும் இளம்வயதுமுதற் கொண்டே குருதேவருக்கு இயல்பாக அமைந்திருந்தது.

படிப்படியாக சமஸ்கிருதம், தமிழ் போன்ற மொழி களில் இயற்றப்பெற்ற காப்பியங்கள் மற்றும் சாஸ்திர நூல்களை மனப்பாடமாக்க முயன்றார். வயது முதிர்ச்சி அடையாததாலும், மேற்படிப்பிற்கு உள்ளூரில் வசதி இல்லாமல் இருந்ததாலும் கதாநாயகனான இளைஞனுக்கு தொடர்ந்து கல்விபெற இயலாமற்போயிற்று.

பின்னர் தாய் தந்தையர் தம் விருப்பத்திற்கிணங்க, கால்நடைகளைப் பராமரிக்கும் பணியில் இளைஞர்

அமர்த்தப்பட்டார். வீட்டிலுள்ள கால்நடைகளை மேய்ப்பதற்காக அருகாமையில் இருந்த மலைச்சரிவுகளுக்கு அவற்றை கொண்டுசெல்லத் தொடங்கினார். குன்றுகளின் சரிவில் கால்நடைகளை புல் மேய விட்டபின், முந்திரி மரங்களின் கிளைகளில் தாவி ஏறி கவிதைகளை மனப்பாடம் செய்து கொண்டிருந்தார்.

இளைஞனாக இருக்கும்போதே குட்டையைப் போன்று கிணறுகள் தோண்டுவதும், தாமே வெற்றிலைக் கொடி பயிர்செய்து அதற்கு தண்ணீர் வார்ப்பதும் ஒரு பொழுதுபோக்காக மேற்கொண்டிருந்தார், குருதேவர்.

கால்நடைகளை மேய்ப்பதற்கு மட்டுமின்றி நிலத்தை உழுவதற்கும், சமயம் கிடைக்கும்போதெல்லாம் தனது தந்தை மற்றும் தாய்மாமாவின் மேற்பார்வையில் சமஸ்கிருதமும் வைத்திய நூல்களும் கற்றறிந்தார். நிலத்தை உழுவதற்கு மாட்டை பூட்டி கலப்பையைக் கையில் கொடுத்தால் எருதுகள் அதனை இழுத்துச் செல்லும் வழியே தாமும் செல்வதேயன்றி, அவற்றை அடித்துத் துன்புறுத்துவது இல்லை. நிலத்தைச் சரிவர உழவேண்டிய பழக்கம் இவருக்கு இருந்ததில்லை. வயது முதிர்ச்சி அடைந்த பின், இளமையிலிருந்த குண இயல்புகள் அனைத்தும் மறைந்து ஞானம் ஈட்டுவதற்கான ஆசைமிகுதியாகி அதற்கான புத்திக் கூர்மையும் ஏற்பட்டது. உயர் கல்வி பயில்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்ததால் சொந்தமாக புத்தகங்கள் திரட்டி படிப்பதற்கான நாட்டம் மனதில் ஏற்பட்டது. இத்துடன் வீட்டில் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளின்பால் நாட்டம் குறைந்தது. ஜீவகாருண்யம், அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வு, இரக்கமனப்பான்மை, ஆகிய உயரிய குணங்கள் தனது உள்ளத்தில் ஏற்படுத்திய குரு உடலையும், மனத்தையும் சுத்தமாக ஆக்கி காத்துக்கொள்ள ஆவல்கொண்டு காலம் தவறாமையைக் கடைபிடித்தார். காலையில் தினமும் குளிப்பது, விபூதி பயன்படுத்துவது, மந்திரம் ஓதுவது, கோவில் தரிசனம் செய்வது ஆகியவற்றில்

ஆர்வம். வளர்ந்தது காலப்போக்கில் தனிச்சிறப்புடைய உயர் குணங்களும் அவற்றில் குருவிடம் நாட்டமும் தென்பட்டது.

செம்பழந்தியிலுள்ள மணக்கல் கோவிலில் உற்சவங்கள் நடைபெறாத ஒரு காலம் இருந்தது. பயந்து யாரும் அங்கு செல்வது கிடையாது. இந்த காலப்பகுதியில் இளைஞனான குருவினை அம்மைநோய் தாக்கியது. தலைவலியும் ஜுரமும் தாங்கமுடியாமல் அவதிப்பட்டார். இதனை வீட்டில் யாரிடமும் தெரிவிக்காமல் தினமும் காலைக்கடன்கள் முடித்து குளித்து குரு மேற்கூறிய மணக்கல் பகவதி அம்மன் கோவிலில் வாழ்வை தொடங்கினார். நாட்பட அம்மை நோயின் அறிகுறிகள் உடலில் தோன்றியது. இருப்பினும் தினமும் குளிப்பதை அவர் நிறுத்தவில்லை. இதற்கிடையில் கோவில் வளாகத்தில் படர்ந்து வளர்ந்திருந்த முந்திரி மரக்கிளையில் உட்கார்ந்திருந்தபடி மேலத்தூர் பட்டதிரி இயற்றிய ''வைராக்கியோல் பாதகம்'' என்ற அபூர்வ நூலினின்றும் கவிதைகளை பாராயணம் செய்வதும், இரவுநேரம் வரும்போது தமக்கு பழக்கமில்லாத வீடுகளுக்கு நடந்துசென்று கிடைப்பதை பெற்று உண்டு நாட்கள் கழித்துக் கொண்டிருந்தார்.

நோயின் பிடியில் சிக்கி 18 நாட்கள் இந்த கோவிலில் தங்கி இருந்தபின், 19-ம் நாள் அம்மை குறைந்தபின் குளித்துவிட்டு தன் வீட்டிற்குச் சென்றார். அதுநாள்வரை காணாமல்போன குரு ஏதாவது உறவினர்கள் வீட்டிற்குச் சென்றிருக்கலாம் என்று எண்ணி இருந்த அவர் மாமா, கதாநாயகனைப் பார்த்து ''இது என்ன ? உன் முகத்திலும் உடம்பிலும் அம்மையின் தழும்புகள். எப்படி ஏற்பட்டது ?'' என வினவினார். அம்மை நோயினால் அவதிப்பட்டு பகவதி அம்மன் ஆலயத்தில் அன்றுவரை வாழ்ந்து வந்ததாக குருவிடமிருந்து தெரிந்த உடனே அவர் மாமா

விற்குத் தோன்றிய கோபம் மறைந்து அவர்பால் நன் மதிப்பும் அச்சமும் ஏற்பட்டன.

நேரம் தவறாமல் தினமும் வழக்கமாகச் செய்யும் கர்மநிஷ்டைகள் கடமை உணர்வுடன் செய்யப் பழகிய குருவிற்கு இளமைப்பருவம் எய்தியபோது, கருநாகப் பள்ளியிலுள்ள வாரணப்பள்ளி தரவாட்டில் சமஸ்கிருதம் பயில ஆசை ஏற்பட்டது. காலப்போக்கில் குடும்ப வாழ்க்கையைப்பற்றிய வெறுப்பும் அறநெறிகளை உறுதி யுடன் பின்பற்றும் ஆர்வமும் பெருகின. இளம்வயது முதற்கொண்டு அன்னாருக்கு கவிதை புனையும் ஆற்றல் ஏற்பட்டது. அன்னார் இயற்றிய பாடல்களை படித்தால் குருதேவரின் இதயத்தில் இருந்த எண்ணங்களை ஆராய வேறு எங்கும் செல்லவேண்டியதில்லை.

இளம்வயதிலேயே நற்குணங்களுடன் இறைப் பற்றுறு தியுடன் இருந்த அவர் பல ஸ்தோத்திரங்கள் இயற்றி உள்ளார். அந்த கவிதைகளில் ஒன்றான சண்முக ஸ்தோத்திர பரம்பரையில் இவ்வாறு காணலாம்.

'' கஷ்டமிக்க லயில் கிடந்நுழலுந்ந
தொக்கெ யுமங்கு ச -
ந்துஷ்டனாய் சுகமொடு கண்டுரஸி -
ச்சிரிக்குக யோக்கியமோ ?
க்லிஷ்ட தய்கொரிடம் கொடுக்கண
மென்னு நின்திருவுள்ளிலு -
ண்டி ஷ்டமெங்கி லடிக்க டுத்திடு
மெந்நிலோ குக பாஹிமாம்.''

துன்பம் நிறைந்த இந்த கலிகால வாழ்க்கையிலி ருந்து விடுதலைபெற அவர் விரும்பினார். அதற்காக அவர் என்ன அனுஷ்டானம் செய்தார் ?'

''அல்லிலும் பகலும் பவத் பத
பல்லவங்ஙளி லல்லயோ
சொல்லி இங்ஙனே சவும்மியமாம் முத -
லுள்ளடக்கி யிருப்பதும் ''

பகவானின் திருவடிகளில் உள்ளடக்கி இருந்து அந்த ஆத்ம நிஷ்டையில் குரு எதற்காக மனதை அர்ப்பணித்தார்? வேறு எதற்கும் இல்லை.

> '' கொல்லுவான் கொலையானைப்போலெ
> யணஞ்ஞிடும் மலமாயயே
> வெல்லுவாநொரு மந்திரமிங் நருளீடு
> ஷண்முக பாகிமாம். ''

இந்தக் கலியுகத்தில் நம் எல்லோரையும் கொலை செய்வதற்கு வலுவுள்ள ஒரு கொலையாளியைப்போல மாயை அதன் கவர்ச்சியின் சக்தியால் மனிதனுக்கு கவலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. அந்த பந்தத்திலிருந்து விடுதலைபெற குரு விரும்பினார். அந்த மாயையை எதிர்த்துப் போராடி வெற்றிபெறத் தேவையான மன வலிமைபெற பலனுள்ள மந்திர தீட்சையும் தேவையென குரு அறிந்திருந்தார் என்பது அவரது கவிதைப் பகுதியிலிருந்து புலனாகிறது.

> ''ஓமிதி பிரணவ பிரணஷ்ட: கலி
> பிரதோஷ மனஸ்ஸில் நி -
> ந்நோமனப்புது மேனி கண்டுகரம்
> கவிப்பதி நாசயா
> பூமணம் புத்த பூஜிதம் பெருமாறு
> மங்கி சரோருஹ
> நர்மனம் விதநோமி நாச விஹீன
> ஷண்முக பாகிமாம்.''

''ஓம்'' என்ற பிரணவம் மட்டுமே மிகவும் சிறந்த மந்திரமாக அவர் காண்கிறார். ''ஓமென்னு நீ ஸ்மரிக்காத்மன்'' என ஈஸாவாஸ்யோத உபனிஷத்திலும் குறிப்பு தரப்படுகிறது. இளம்வயதிலேயே குரு உபனிடதங்களை நன்றாக கற்றறிந்திருந்தார் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை. அனைத்து வேதங்களும் சென்றடையுமிடமும், அனைத்து தபஸ்ஸுகளின் இலட்சிய ஸ்தானமும், பிரம்மசாரிய

அனுஷ்டானத்துடன் கூடிய ஓங்கார தியானத்தால் பெறலாம் என கடோபனிஷத்தில் காணலாம்.

''ஏதத்தியே வாக்ஷரம் பிரம்ம
ஏதத்தியே வாக்ஷரம் பரம்
ஏதத்தியே வாக்ஷரம் ஞாத்வா
யோ யதச்சதி தஸ்யதத்'' எனவும், அதுபோன்று

''ஏததாலம் பனம் சிரேஷ்ட
மேத தாலம் பனம் பரம்
ஏத தாலம் பனம் ஞாத்துவா
பிரம்ம லோகே மகீயதே''

உபனிடத உபதேச மொழிகள் குரு நன்றாகக் கற்றபின் அதன் செயலறிவு படிப்பினைகளைத் தனது கவிதைகள் மூலம் ஒளியூட்டுகிறார்.

''ஓம் தத் சதிதி நிர்த்திஷ்டம்
பிரம்மாத் மைக்கிய முபாகதம்
கல்பனாதி விகீனம் ய-
த்தத் பரஞான மீர்யதே''.

விருப்புவெறுப்பின்றி ஜீவபிரம்ம ஐக்கியத்தினை அடைந்துள்ள அந்த பரஞானம், ''ஓம், தத், ஸத்'' என்று வழங்கப்பட்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால் இந்த மூன்று ஒலிகள்தான், ஞானத்தின் (பிரம்மத்தின்) புகழ் பெற்ற நாமங்களாக—வேதப்பிரமாண நூல்களில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மந்திர ஜெபத்தை தவிர துன்பக் கடலில் விழாமலிருக்க மற்றுமொரு வழியும் குரு காண்பித்துத் தருவதை கவனமாக கருத்திற்கொள்ளவேண்டி இருக்கிறது.

''எட்டு சுற்றொடு மோட்ச மார்க்க மடச்சு
மேவின குண்டலி
கெட்டறுத்து கிளர்ந்து மண்டலவும்
பிளர்ந்து பவத் பதம்

துஷ்டியோடு பிடிப்பதின்னரு ளுன்ன
 தென்னு பலாப்தியில்
ப்பெட்டு போகரு தின்னியும் பகவானே
 ஷண்முக பாகிமாம்.''

நிரந்தரமான ஆத்ம நிஷ்டையால் குண்டலினி சக்தியை உணர்த்த வேண்டி யிருக்கிறது என்ற உண்மையும் குரு ஞாபகப்படுத்துகிறார். இப்படியாக ஒரு கவிஞனாக மட்டுமல்ல, ஒரு யுவயோகியாகத் திகழத் தேவையான ஆத்ம ஈடேற்றத்தின் உறைவிடம் இளம்வயதிலேயே குருவில் உயிர் கொண்டிருந்தது. வேதாந்த தத்துவங்கள் உட்கொண்ட தமிழ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் இயற்றப்பெற்ற அனைத்து சமய நூல்களும் குருதேவர் மனப்பாடம் செய்திருந்தார் என்பதை அவர் படைத்த காப்பியங்களைப் பயில்பவர்களுக்கு நன்கு புலனாகும். அதுமட்டுமன்றி ஒரு நல்ல ஆயுர்வேத வைத்திய பரம் பரையில் பிறந்த குரு, அந்த சிகிச்சை முறையில் அபார தேர்ச்சி பெற்றிருந்தார். இந்த நாட்களில் விரதம் மற்றும் தியான அனுஷ்டானத்தில் ஆன்னாருக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

## குருவும் வாரணப்பள்ளியும்

குருதேவருக்கு இருபத்துமூன்று வயது. அந்த சந்தர்ப் பத்தில் வாரணப்பள்ளி தறவாட்டில் சமஸ்கிருத மொழி யில் உயர் கல்விபெற அவர்போக நேர்ந்தது. விசுவநாதர் கோவில் இதன் அருகாமையில்தான் அமைந்துள்ளது. அங்கு மாணவனாக இருந்த கதாநாயகனான குரு, எல்லா நாட்களிலும் இந்த கோவிலில் நடக்கும் ஆராதனை களில் கலந்துகொண்டிருந்தார்.

நாணு பக்தர் 1877-ம் ஆண்டில்தான் வாரணப் பள்ளிக்கு வந்தார். அன்று சமஸ்கிருத மொழியில் காப்பியம், சாஸ்திரம், தர்க்கம் மற்றும் இலக்கணம் ஆகியவற்றில் அறிவுபெற, பண்டிதராக இருந்த இராமன் பிள்ளையிடம் படிப்பதைத் தொடர்ந்தார். அத்துடன்

தனது ஆத்மீய வாழ்வும் வளர்ந்தது. ஒரு ஞானிக்கு ஏற்படக்கூடிய வாழ்வில் மாற்றம் அன்னாரிடம் அப்போது தென்பட்டது. அந்த நாட்களில் தலைமயிர் வளர்த்து குடுமி வைக்கும் பழக்கத்தை கதாநாயகன் மேற்கொண்டிருந்தார். எண்ணெய் படாததால் அந்த தலை மயிர், ஜடை தோன்றியிருந்தது. எவரிடமும் கூடுதலாக இணங்கிப் பழகாமல், ஒரு ஏகாந்த ஞானியைப்போல் காணப்பட்டார். மிகவும் எளிமையும் உயர்ந்த கொள்கைகளும் கொண்ட அவரது வாழ்க்கையில், நேரம் தவறாமை, உண்மை, வினயம், ஜீவகாருண்யம், எல்லாவற்றையும் சமமாக பாவிக்கும் தன்மை, ஆகிய உயரிய பண்புகள் குரு தேவரிடம் காணப்பட்டன. நாணு பக்தரின் துறவிக்கான இது போன்ற வாழ்க்கை நடைமுறைகள் அன்று அவருடன் பயின்ற பல முற்போக்கு மாணாக்கருக்கு அருவருப்பாக ஏற்பட்டது.

அன்றாடம் பிரம்ம முகூர்த்தத்தில் துயில் எழுந்து அதி காலையில் காலைக்கடன்கள் முடித்து நெற்றியில் விபூதி அணிந்து ஜெபம் தியானம் எல்லாம் முடித்தபின் பயின்ற பாடங்களை பற்றி சிந்தனை செய்து கொண்டிருப்பது அவரது வழக்கமாக இருந்தது. அவருடைய துறவி வாழ்க்கையில் அவ நம்பிக்கை ஏற்பட்ட பல மாணவ நண்பர்கள், கதாநாயகனின் துறவி வாழ்க்கையை பற்றி ஏளனமாக பேசுவதும் வழக்கமாக இருந்தது. இரவு நேரங்களில் தியானத்தில் மூழ்கி இருக்கும் போது குறும்புக்காரர்களான பல மாணவர்களின் தொந்தரவும் குருதேவருக்கு ஏற்பட்டதுண்டு. இருப்பினும் நாணு பக்தருக்கு யாரிடமும் மனவருத்தமோ, கோபதாபமோ ஏற்படவில்லை. அனைவரிடமும் சகோதரர் போன்று பழகி வந்தார். துறவி வாழ்க்கையை நோக்கி பயணம் மேற்கொள்ளும் போது அறியாமையில் உழலும் சாதாரண மக்களிடமிருந்து விவேக மற்ற செயல்களும் மாறுபட்ட கருத்துகளும் தாம் கேட்க வேண்டியிருக்கும் என அறிந்திருந்த குரு அவற்றை எல்லாம் பொறுமையுடன் தாங்கி தனது லட்சியத்தை அடைய தியாக உணர்வுடன் வாழ்ந்துவந்தார்.

கதாநாயகனான குருதேவர் ஒவ்வொரு நாளும் பாடங்கள் பயின்று கொண்டிருந்த போது மேலும் கூடுதலாக அறிவு பெற வேண்டுமென்ற பேரவா ஏற்பட்டது. படிப்பதற்கு வசதியாக சற்று மிகுதியான சமயம் தனக்கு ஒதுக்குமாறு அவருடைய ஆசிரியரிடம் பணிவுடன் வேண்டினார். அப்படியென்றால் உயர்வகுப்பு பாடங்களைக் கூட கவனத்துடன் பயின்று கொள்ள ஆசிரியர் அனுமதி வழங்கினார். அவ்வாறு தனது கல்வி நடந்து கொண்டிருந்த வேளையில் குருவிடம் அவ்வப்போது எழுந்த சந்தேகங்கட்கு நாணு பக்தனால் சிறப்பான விளக்கம் அளிக்க முடிந்திருந்தது. மற்றெந்த மாணவர்களிடத்திலும் காண முடியாத இந்த அற்புத குணத்தை கண்ணுற்ற ஆசிரியருக்கும் மற்ற மாணவர்களுக்கும் கதாநாயகனிடம் மிகுந்த மதிப்பும், பரிவும் ஏற்பட்டன. நாணு பக்தரின் ஜீவகாருண்ய மனப்பான்மை மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தன. அந்த நாட்களில் வாரணப்பள்ளி பண்ணையில் ஏராளமாக கால்நடைகளை வளர்த்து வந்தனர். அதனை பராமரிக்கும் பணியினை கதாநாயகன் ஏற்றார். காலைவேளையில் மற்றெல்லா மாணவர்களும் பாடங்கள் படித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நாணு பக்தர் கால்நடைகளுக்கு உணவளித்தல் போன்ற பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். முக்கால ஞானியின் நுட்ப அறிவு பெற்றிருந்த நாணுபக்தர் ஒருபோதும் புத்தகப்புழுவாக இருந்ததில்லை. ஒருமுறை கேள்வியுற்ற பாடம் அவரது மனத்தை விட்டு அகலாது பசு மரத்தாணி போன்று பதிந்திருந்தது.

மாணவர்களிடையே இலக்கிய ஆற்றலை வளர்க்கும் வகையில் அவரவர் விருப்பத்திற்கேற்ப இலக்கிய பட்டிமன்றங்கள் போன்ற சர்ச்சைகள் நடத்தியிருந்தனர். இவ்வாறு ஆழமான வேதாந்த தத்துவங்களைப்பற்றிய வாக்குவாதங்கள் நடக்கும்போது நாணு பக்தர் சற்று தொலைவிலிருந்து கவனமாக கேட்டுக்கொண்டிருந்தார். வாக்குவாதங்களின் முடிவில் சரியான விடை தெரிந்துகொள்ள

இயலாமல் வரும்போது, நாணு பக்தர் தனது அறிவுச் சுடரை சந்தர்ப்பங்களுக்கேற்ப தெரிவிக்கும் பொது சபையிலிருந்த இதர மாணவர்களையும் மற்றெல்லோரையும் திகைப்புறச் செய்தது. அவர்களின் புகழாரத்திற்கும் பாசத்திற்கும் தன்னை ஆட்படுத்திக்கொண்டார். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச நூல்களை பயிற்றுவிப்பதற்காக மாணவர்களிடையே இதுபோன்ற கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டன. இவற்றில் எல்லாம் நாணு பக்தர் காட்டிய ஆர்வம் அற்புதமாக இருந்தது.

அந்த காலத்தில் வாரணப்பள்ளி தறவாட்டில் வந்து கல்வி பயின்ற தென்திருவாங்கூர் மாணவர்கள் அங்குள்ள தாய்மார்களுக்கு விசேட நாட்களில் கசவு ஆடைகள் பரிசாக வழங்கிவந்தனர். ஆனால் நாணு பக்தருக்கு அவர்களுக்குப் பரிசாக வழங்குவதற்கு அவர் இயற்றிய அஷ்டகங்களும், தேவிஸ்தவ கவிதைகளும் தனது தியாக வாழ்வுமேயன்றி வேறு எதுவும் இருந்ததில்லை. ஆழமான தத்துவங்கள் உள்ளடக்கிய அன்னாரது மிக அழகான கவிதைகள் இப்போது ஸ்ரீ நாராயண குருதேவரின் புத்தகப் படைப்புகளில் காணலாம்.

குறுகியகாலத்தில், நாணுபக்தரிடம் தோன்றிய இயற்கைக்குமாறான வாழ்வின் தோற்றங்கள் அன்னாரை உடன் பயிலும் மணவர்களிடமிருந்து பிரித்து வாரணப்பள்ளியிலுள்ள குன்னத்துகோவிந்தப் பணிக்கரின் வீட்டில் வாழச்செய்தது. பக்தி வழிகளைக் கடைப்பிடிப்பதில் சிறந்து விளங்கினார், கோவிந்தப்பணிக்கர். அன்னார் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த யோகாசன முறைகள் மற்றும் தியான யோகாப்பியாசங்களை பெருமளவு கற்றுக்கொள்ள நாணுபக்தருக்கு வசதி ஏற்பட்டது. நள்ளிரவு நேரங்களில் குருதேவர் தியான நிஷ்டையில் மூழ்கி இருந்தபோது வெளிவந்த சில குரலொலிகள் கேட்டு தூக்கத்திலிருந்து உணர்ந்து கோவிந்த பணிக்கர் பார்த்தபோது அந்த அபூர்வ ஒலிகள் நாணுபக்தரிட

மிருந்து வந்ததாகும் என தெரிந்துகொண்டார். பிராணாயாமம் செய்து மூச்சு வேகத்தை கட்டுப்படுத்துதல், சொந்த முயற்சியால் பிராணனை சொந்தமாக்குதல் போன்ற ஆத்மீய பாதைக்கான நிஷ்டைகள் அந்த காலம் முதற்கொண்டே கதாநாயகனிடம் தென்பட்டன. அப்போது ஒருநாள் கோவிந்தப்பணிக்கரிடம் பேசிக் கொண்டிருந்தபோது கூறினார்: ''நமக்கு ஒரு செப்பு மொந்தை தேவை. இந்த உலக வாழ்க்கையில் ஒருதடவை மூழ்கி பார்க்க ஆசையாக இருக்கிறது. அதன் அடியில்உள்ள இரத்தினக் கற்களை செப்பு மொந்தையில் கொணர்ந்து உலக நன்மைக்காக காட்சிப் பொருளாக வைக்க வேண்டும்''. இவ்வாறு வருங்கால வாழ்க்கையைப்பற்றி தனது இதயத்திலிருந்து வெளிவந்த எண்ணச் சுடர்கள் குருவிடமிருந்து ஒளிர்விட்டன.

சுமார் இரண்டு ஆண்டுகள் வாரணப்பள்ளியில் கல்வி பயின்று கொண்டிருந்தபோது கதாநாயகனுக்கு திடீரென மூலவியாதியின் தொல்லை ஏற்பட்டது. போதிய சிகிச்சை அளிக்கப்படாததால் இரத்தப்போக்கு ஏற்பட்டது. அதனால் எல்லோருக்கும் மனவருத்தம் ஏற்பட்டது. செம்பழந்திக்கு விவரம் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. கதாபுருஷனின் மாமனாக இருந்த கிருஷ்ணன் வைத்தியர் வாரணப்பள்ளிக்கு விரைந்தார். நாணுபக்தருக்கு சில மருந்துகள் கொடுத்தார். அதனால் பெரிய குணம் எதுவும் ஏற்படவில்லை. உடனே நாணு பக்தரை செம்பழந்திக்கு அழைத்துக்கொண்டு வந்தனர். கொஞ்ச நாட்கள் சிகிச்சை பெற்றபின் அந்த வியாதி குணமடைந்தது.

வாரணப்பள்ளியில் சமஸ்கிருத மொழியில் மேற்படிப்பு படித்துக்கொண்டிருந்தபோது துறவியின் வாழ்க்கையையே பின்பற்றி இருந்தார். இருப்பினும் வேத சாஸ்திரங்களில் போதிய அறிவு பெற்றிருக்கவில்லை. இதனைப் பற்றி கதாநாயகன் நன்றாகப் புரிந்திருந்தார். எனவே ஒரு ஆத்மீக சிந்தனையாளனாக தேவையான

எண்ணங்கள் உள்ளத்தில் ஓலமிட்டுக்கொண்டிருந்தன. ''இனி என்ன ? இனி என்ன ?'' என்ற கேள்விக்கு விடை காணும் பொருட்டு இதயம் துடித்துக்கொண்டிருந்தது !

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு குண நலன்கள் பெற்று அவைகளுக்கேற்ப வாழ்க்கை நடைமுறைகளைப் பின்பற்றுவதாக இருக்கலாம். ஒவ்வொருவரும் அவரவர்கள் முன்னேற்றத்தைக் கருதி தனித் தனி வழிகளை அமைப்பவர்களாகவும் இருக்கலாம். இது எல்லாம் இயற்கையான குணநலன்களின் அடிப்படையில் அமைவதாகும். இந்த வேளையில் ஒவ்வொருவரும் கர்மம் செய்து அனுபவித்தபின், அதன்பலனாக இன்னொரு வருங்காலத்தை உருவாக்குகிறார்கள். இவ்வாறு யாராவது எவ்வித வழிகளை பின்பற்றினாலும் அவர்கள் அனைவரும் சென்றடையவேண்டிய இடத்திற்குதான் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருவன் சற்று வளைந்தே செல்பவனாக இருக்கலாம். மற்றொருவன் நேராக செல்பவனாக இருக்கலாம். எனின் அனைவருமே இறுதியில் சென்றடைவது இறைவனிடத்தில் அல்லது ஆத்ம ஸ்வருபத்தில்தான். அவனவன் கர்மம்தான், மனிதனை அவன் இவ்வுலகில் என்னிலையில் இருக்கிறான் என காண்பிக்கும் கருவி. ஒவ்வொருவரும் இன்று அல்லது நாளை அல்லது மற்றொருநாள் தனது சொந்த ஆத்ம ஸ்வருபத்தை கண்டறிந்தே தீருவார்கள். இந்த ஆத்மஸ்வரூபம் எங்கு சங்கமம் ஆகிறது என்பதை குருதேவரின் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன:

''சாதிக்கும் சகலம் சமஸ்த புவன -<br>
ங்ஙள்க்கும் ஹிதம் நல்கி நீ -<br>
சேதஸ்ஸிங்க விரிக்க கொண்டு ஜனனீ<br>
சைதன்ய மாயெப்பெழும்''

இந்த ஆத்மஸ்வரூபம் உயிருடன் மனதில் குடிகொண்டிருக்கிறது என குருதேவர் நன்கு தெரிந்திருந்தார். மனித ஆத்மாவின் இறைமேன்மை சனாதனதர்மத்தின்

மிக முக்கியமான ஒரு அம்சமாகும். அந்த திவ்விய மகிமை முழுமையான மனத்தூய்மையில் கலந்திருக்கிறது. இந்த பரிசுத்தமான மனத்தூய்மை பெறும்போது புலன்களை அடக்கும் சக்தி ஒருவருக்கு ஏற்படும். மிக நுட்பமான இந்த சைதன்னிய நிலை புலன்களைக் கடந்து ஒளிர் விட்டுக்கொண்டிருக்கும். அணுவைவிட மிக நுட்மான தும், அற்புதமானதைவிட மிக அற்புதமானதுமான இந்த ஆத்மா எல்லா ஜீவராசிகளின் இதயத்திலும் குடிகொண் டுள்ளது என உபனிடதங்கள் முழங்குகின்றன. இந்த ஆத்ம ஸ்வரூபத்தை அடைவதற்கான வழிகளைக் கண்டறிய குருதேவர் முயன்றார்.

அதிகாரம் III

# இலட்சியமும் மார்க்கமும்

இளமைப் பருவம் எய்திய உடன் வாழ்க்கையின் நோக்கம் எதுவாக இருக்கவேண்டுமெனவும் அந்த நோக் கத்தை அடையவேண்டிய வழி எதுவாக இருக்கவேண்டும் எனவும் குருதேவர் சிந்தனை செய்யத் தொடங்கினார். உலகியல் வாழ்க்கையில் இருந்து அவர் அகன்று அகன்று சென்றுகொண்டிருந்தார். ''ஏகரஸமாய் குணமொழாத் ததும்'' ''இவ்வுலகில் நன்மையுடன் தீமையும் மோதுதல்'' என்ற மனிதவாழ்க்கை மாறுபட்ட குணநலன்களைக் கொண்டதாகும். அவ்வாறு மாறுபட்ட குணங்களைக் கொண்ட மானிட வாழ்க்கைக்கு அடிப்படையாக ஒரு உண்மை உண்டல்லவா! வாழ்வின் அந்த உண்மையை உணராத மனிதனுக்கு வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையில் சந்தேகங்கள் ஏற்படுவது இயற்கையே. இந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு தனது வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயங்களையும் அலசி ஆராய்ந்து வாழ்வின் உண்மை நோக்கங்களை குருதேவர் கண்டறிந்தார்.

மனத்தின் அந்த எண்ண அலைகள்தான் தான் வடித்துள்ள கவிதைகளில் இழையோடுகிறது என்பது உள்ள உணர்வுடன் படிப்பவர்களுக்கு நன்கு புலனாகும். குருதேவர் ஒருபோதும் பணப்பொருள் மீது பற்று வைத்திருக்கவில்லை.

''பணம் பெண்ணிலும், மண்ணிலும் சென்னுபுக்கா-
சுவஸிச்சாத்த மோதம் குணம்கெட்டு
துக்கிச்சு போவான யக்கொல்லா''

என்ற காளி நாடகத்திலுள்ள எண்ணங்களிலிருந்து குருதேவரின் வழி, பொருள் ஆசையில் நிலைபெற்றிருக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. பின் அவ்வழி எவ்வழி ?

''பொருளென்னு முடம்பொடு மக்களுயி -
த்தி ரெனென்னு மிதராத்த யதார்த்தகம்
கரனின்னு களஞ்ஞு கரும்கடலில்
புரளாதெ பொதிஞ்ஞு பிடிப்பது நீ''

உடல் உறவு கொள்வதும் அதன் வழியாக குழந்தைகளை பெறுவதும் அவரது இலட்சியமாக இருக்கவில்லை. அவை அனைத்தும் அவருக்கு அர்த்தமற்றவைகளாக இருந்தது.

''ஜனகனு மம்ம யுமாத்ம சகி பிரிய
ஜ்ஜனவு மடுத்தயல் வாசிகளும் வினா
ஜனன மெடுத்து பரிஞ்ஞிடுமெப்பொழும்
தனியெ யிருப்பதினே தரமாய் வரு''
''அகமொரு தோஷ மொருத்தரோடு செய்வா -
கைமலரிங்க லறிஞ்ஞிடாதெ வண்ணம்
சகலமொழிச்சு தரேணமென்னுமே ஞான்
பகவதனுக்கிரக பாத்ரமாய் வரேணம்''

மானிட வாழ்வு நன்மை தீமைகள் கலந்தவையாகும். தீமைகளைத் தவிர்த்து நன்மைகளைச் செய்பவனே இறை

வனின் திருவடிகளில் சேரமுடியும், மனிதர்கள் அனைவரும் சுகத்தை நாடுகிறார்கள். சுகத்தைக் கண்டடைவதற்குத் தேடி அலைகிறார்கள்.

''சுகவுமொரிக்கலுமில்ல துக்கமல்லா
திக பரலோகவுமில்ல தெல்லுபோலும்
ஸகலமதிங்ஙனெ சாஸ்திரசம்மதம் ஞான்
பகலிரவொன்னு மறிஞ்ஞு தில்ல போற்றி''

ஆனால் குருதேவர், தனது வாழ்க்கையில் இன்பம் காணவிழையவில்லை. இவ்வுலகம் துக்கம் நிறைந்ததாகும். மனிதனைப் பல வழிகளிலும் பிரமை ஏற்படுத்துவது 'மாயை' யாகும். இந்த உலகியல் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதற்கு விரும்பினார் குருதேவர். உலகியல் வாழ்க்கை மாயையின் பிடியில் சிக்கியுள்ளது. ஆசாபாசங்கள் நிறைந்துள்ள இந்த லௌகீக உலகிலிருந்து விடுதலை பெறுவது சிரமமானதாகும். மனிதனின் ஆராய்ச்சிப் பகுதி விரிவடையுமளவிற்கு அவனது அறிவாற்றலும் பெருகும். ஒருவன் தனது அறிவாற்றலின் அளவிற்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்வான். அவை அனைத்தும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டுமென்பதில்லை. வாழ்க்கை மாறுபட்ட கருத்துக்கள் கொண்டதல்லவா! புத்திமான் தனது கடமையை நிறைவேற்றும் பொருட்டு அயலானின் இச்சைகளை நிறைவேற்ற தியாக மனப்பான்மையுடன் முன் செல்பவனாக இருக்கக்கூடும். அந்த வாழ்க்கை உண்மையை குருதேவரின் வாழ்க்கைப் பாதையில் நாம் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தன் அனுபவ பாடங்களை குருதேவர் தன் கவிதைகளில் விளக்குகிறார்.

''ஸ்துதி பறஞ்ஞிடு மெங்கிலானரதம்
முதிதரா குமசேஷ ஜனங்ஙளும்
அதுமினிக் கருதேண்டதில் நின்னெழும்
புதயலும் பதவேண்ட தயாநிதே''.

மக்களில் பெரும்பகுதியினரும், தன்னைப் பற்றி பிறர் புகழ்ச்சியாகப் பேசுவதைக் கேட்டு இன்புறுபவர்கள் ஆவர். புகழ்ச்சியாக கூறும் வார்த்தைகளுக்கும் இதயத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்காது. ''அருள் உள்ளவன்தான் மனிதன்'', கருணை உள்ளம்படைத்தவனே மனிதன் என இதயத்தால் தெரிந்துகொண்டவன் ஒருபோதும் தற்புகழ்ச்சியைக் கேட்டு அன்பு செலுத்துபவனாக இருக்கமாட்டான். மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள ஆதாரங்கள், அன்பு, பரிவு, ஜீவகாருண்யம், தன்னம்பிக்கை, போதுமென்ற மனப்பான்மை போன்ற இதயத்தின் நற்குணங்களாகும். மனிதர்கள் தற்புகழ்ச்சியைக் கேட்டு மயங்காமல் தன்னலமற்ற அன்பு, பரிவு, கருணை போன்ற உயர்ந்த குணநலன்களோடு ஒருவருக்கொருவர் நல்ல தர்மம் புரிந்து, ஒரு வயிற்றில் பிறந்த சகோதரர்கள் போன்று வாழும் வாழ்க்கையைத்தான் குருதேவர் உண்மையான வாழ்க்கை என காண்கின்றார். இந்த உடம்பு அழியக்கூடியதாகும்.

''தொலியு மெலும்பு மலம் துரந்த மந்த :
கலகளுமேந்து மகந்த யொன்னு காணுக!
பொலியுமித, ன்யபொலிஞ்ஞு பூர்ணமாகும்
வலியொரஹந்த வராவரம் தரேணம்''.

உடல் சம்பந்தமான காரியங்களில் பற்று மிகுதியாகும் போது, ஆணவத்திற்கு அடிப்படையாக இருப்பதால், அது மிகுந்த துன்பத்திற்குக் காரணமாக அமையும். மனத்திற்கு தினமும் சிந்திக்கும் மனப்பான்மை ஏற்பட்டு உணர்வு பூர்வமான சக்தி விரிவடையும்போது மட்டும் தான் மனிதன், தான் யார் ? என்பதை அறிந்து மெல்ல மெல்ல உண்மை வாழ்வினை அடைய முடியும். அதற்காக தன்னுள் ஏற்படும் கருத்து மோதல்களின் எதிரொலி தான் குருதேவரின் கவிதைகள்.

''மிழிமுன கொண்டு மயக்கி நாபியாகும்
குழியிலுருட்டி மறிப்பதின்னொ ருங்கி
கிழியுமெடுத்து வருன்ன மங்கமார்தன்
வழிகளிலிட்டு வலக்கொல மகேசா''

மனிதனின் எல்லா செயல்களுக்கும் அடிப்படையாக இருப்பது அவன் மனம்தான். ஒவ்வொரு மனத்தின் செயலும் அதன் வலிமையைப் பொறுத்திருக்கும். இந்த மனவலிமைக்கு அடிப்படை உடல் வலிமையாகும். குருதேவரைப் போன்ற ஒரு கர்மவீரருக்கு தனது கர்மங்களை உயிர்த் துடிப்பாகவும் ஆற்றல் மிக்கதாகவும் செய்வதற்கு பிரம்மசரியத்தின் மூலம் ஏற்படும் மனவலிமையும், உத்வேகமும், ஆத்ம கட்டுப்பாட்டு உணர்வும் இன்றியமையானவையாகும். ஒரு ஆத்மீக வாழ்வின் உட்பொருள் நம்மில் உதயமாவது கறையற்ற பிரம்மசரிய நிஷ்டையின் மூலமாகும். குருதேவரின் கர்ம வாழ்வில் உடல் சம்பந்தமான சுகத்திற்கோ கோபதாபங்களால் ஏற்படும் செயல்களுக்கோ அங்கு இடமில்லை. அதனால்தான் மேற்கூறிய முறையிலுள்ள கவிதைகள் குருதேவரிடமிருந்து உதயமானது. அதில் போற்றப்படும் அன்பு, மாமிச உறவினால் ஏற்பட்ட ஒன்றல்ல. அது அழிவற்றதாகும். அந்த அழிவற்ற அன்பின் திருவுருவமாக விளங்கினார் குருதேவர்.

மானிட வாழ்வின் முடிவு ஏற்படுமுன் உணர்வற்ற நிலை நீங்கி, உண்மை அறிவு ஏற்படவேண்டும். அதற்கான வழி என்னவென்று அறிய குருதேவரால் முடிந்திருந்தது. அதன் வழியில் சென்று அனுபவ சித்திகளை தான் பெறுவதற்கு அன்னாரின் தவநிஷ்டைகள் பிராப்தமானதாகும் என அன்னாரின் பிற்கால வாழ்க்கை தெளிவுறக் காட்டுகிறது. மனத்தின் அடிப்படையான மாற்றங்கள், குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலைக்கு வரவழைக்காமல் எவருமே ஆத்மீய வாழ்வின் குறிக்கோளை அடைய முடியாது.

மனத்தின் பிரமை அகன்று உள்உணர்வு ஏற்படுவ தற்கு வேண்டுதல் வேண்டாமை என்ற எண்ணம் நீங்கி, இன்ப துன்பங்களைப் பாராட்டாமல், விருப்பு வெறுப்பு களைச் சமநிலையில் கண்டு, மனத்தைக் குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இந்த யமநியமங்கள் மூலமாக புலனடக்கம் பெற்றுள்ள ஒரு சித்தரின் மனத்தில் ஏற்படும் எண்ணங்களை குருதேவர் மனக்கண்முன் காண்கிறார். என்ன அந்த அறிவு? அது எவ்வாறு ஏற்படுகிறது?

ஒருவன் தனது விருப்பத்திற்கேற்பத்தேவையான புத்த கங்கள் படிப்பதும் தான் கற்றவற்றை மற்றவர்களுக்கு புகட்டுவதும் அவசியமானதாகும். எனினும் அதனால் மட்டும் உண்மையான அறிவைப் பெற்றிடமுடியாது. நாம் பெற்றுள்ள அறிவுகளுடன் ஒற்றுமை ஏற்படாத காலம்வரை அந்த அறிவுகள் நமக்குச் சொந்தமானவை யல்ல. அது அழிந்து போகாததுமில்லை. அயலானை நேசிப்பது என்ற உண்மை நிலை, வெறும் சொற் பொழிவினால் மட்டும் பெறமுடியாது. ஆத்ம ஸ்வரூபத்தை இடைவிடாது மனத்திற்கொண்டு தியானித் தால் மட்டுமே உண்மையான அறிவினை அடைய முடியும். ஆபின் இந்த உண்மைநிலையைச் சாதாரண மனிதன் ஒருபோதும் அனுபவித்து பெறமுடியாது. பூரண அறிவை சாட்சியம் கூறுபவன் அந்த அறிவுடன் ஒன்று படுகிறான். அந்த அபிபாத தன்மையே குருதேவரின் மார்க்கமாகும். அங்கு மீண்டும் மீண்டும் ஏற்படும் இச்சை களுக்கு இடமில்லை.

ஒன்றுக்குப்பின் மற்றொன்றாக இடைவிடாது அணைந்து விடும் இச்சைகளில் மூழ்கி உழலுவதுதான் மானிடவாழ்க்கை. அதனால் உண்மை தத்துவம் ஒரு போதும் காணமுடிவதில்லை. இச்சைகளைத் துறந்தால் மட்டுமே உண்மை அனுபூதி வெளிவரும் என்ற பூரண நம்பிக்கை ஏற்படுவதால் உள் உணர்வு ஏற்பட்டு கோப

தாப குணங்கள் நீங்கியவனாக இருக்கவேண்டுமெனில் மனம், உடல் சம்பந்தமான எல்லா வியாபாரங்களி லிருந்து அகன்று அகன்று ஏகாந்தமான சிந்தையில் செல்ல வேண்டும்.

> ''பிரணவ முணர்ன்னு பிறப்பொழிஞ் ஞுவாழும்
> முனிஜன சேவையிது மூர்த்தி நிர்த்திடேணம்''
> ''பிரணவம் ஹ்ஸ்வரம வித்யாத ஸர்வஸ்ய
> இருதயே ஸ்திதம்''.

அனைத்து ஜீவராசிகளின் இதயத்திலும் வாழ்கின்ற இறைவன் பிரணவம் (ஓம்) ஆகும் என மனத்தில் எண்ணி, அந்த தியான வேள்வியில் சிந்தை இரண்டறக் கலக்கும் போது, தான் யார் என்ற உணர்வு ஏற்படும். இந்த விதமான மனப்பயிற்சிகள் குருதேவரில் நிலைத்தெழத் தொடங்கியபின், அவர் தனது இல்லத்தைத் துறந்து தான் விழைந்த இலட்சியத்தை அடையும்பொருட்டு திட விரதத்துடன் தவம்புரிவதற்கான வழிகளை ஆராயத் தொடங்கினார்.

## இல்வாழ்க்கை எனும் சமுத்திரத்தைத் தாண்டுதல்

வாரணப்பள்ளியில் தனது கல்வி படிப்பு முடிந்தபின் சொந்த ஊர் திரும்பிய நாணுபக்தன் பின்னர் சோம்பேறி யாக இராமல் அன்னியருக்கு உதவிபுரியும் பணியில் ஈடு பட்டார். முதலாவதாக தான் பெற்ற விஞ்ஞான அறிவினை மற்றவர்களுக்குப் புகட்டவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தமது ஊரில் உள்ள நல்ல மனம் படைத்த செல்வந்த நண்பர்களின் ஒத்துழைப்புடன் ஒரு கல்விக்கூடம் அமைத்தார். அங்கு ஜாதி, மத பேதமின்றி யார் வேண்டுமானாலும் கல்வி கற்கலாம். ஏராளமான மாணவர்கள் வரத்தொடங்கினார்கள். ஸம்ஸ்கிருதம் மற்றும் பகவத்கீதை பாராயணம் செய்ய ஏராளமான இளைஞர்கள் முன்வந்தனர். அதன் ஆசிரியர் நாணு பக்தன் தான். தன்னுடைய ஒவ்வொருநாள் வேலை

முடிந்தபின் ஓய்வு எடுப்பதும் அங்குதான். நள்ளிரவு நேரங்களில் அவர் மக்கள் நடமாட்டமில்லாத இடங் களிலோ கடற்கரையிலோ சென்று தியானத்தில் மூழ்கிவிடுவார். பிரமசரிய நிஷ்டைகளைக் கடினமாக பின்பற்ற வேண்டிய வேளையில் உடலை வருத்தி தேசப் பயணம் மேற்கொண்டார். உலக வாழ்க்கையின் ஆடம் பரங்களிலிருந்து விலகி ஏகாந்தத்திலும் தியானத்திலும் கழிந்த நாணுபக்தரின் வாழ்க்கை அத்தியாயத்தில், சோதனை ஏற்பட்டதைப் போன்று ஒரு யோசனை குடும் பத்தினர்களிடமிருந்து கேட்கத் துவங்கியது.

நாணு செம்பழந்தி வயல்வாரம் குடும்பத்திலுள்ள ஒரே ஆண் குழந்தை ஆவான். பிற்காலத்தில் குடும்பச்சுமை யை ஏற்றுநடத்துவதற்கு ஏற்றவகையில் நாணுவை ஒரு திருமண பந்தத்தில் ஏற்படுத்துவது எனக் கருதினார்கள். ஆனால் குடும்பத்திலுள்ளவர்களின் ஆசை எங்கே? நாணு பக்தரின் மனத்தில் ஏற்பட்டுள்ள சிந்தனை எங்கே? அந்தக் குடும்பத்தில் இரண்டு தலைவர்கள் இருந்தார்கள். அந்தக்காலத்தில் குடும்பத்தலைவரின் ஆணை, சுக்ரீவன் ஆணைக்கு ஒப்பானதாகும். குடும்பத் தலைவரான கிருஷ்ணன் வைத்தியர் ஒருநாள் மருமகனான நாணுபக்த னிடம் இந்த விவரத்தைக் கூறினார். சில நாட்களுக்குள் மணமகளையும் தேர்ந்தெடுத்தனர். மணமகள் தந்தை யான மாடனாசானின் அனந்தரவளின் மகள்தான். திருமணத்திற்குத்தேவையான முன் ஏற்பாடுகள் நடந்தன. கதாநாயகனான நாணுபக்தன் வீட்டில் இருந்தபோது, அவருக்காக அவர் விரும்பாததும் அவருக்குத் தெரிவிக்கப் படாததுமான முன் ஏற்பாடுகள்.

அந்த சந்தர்ப்பத்தில் நாணுபக்தன் நடத்திவந்த பள்ளிக்கூடத்தில் ஏராளமாக வேலை இருந்தது. அதற்குப் பின் செம்பழந்திக்கும் அதன் அருகாமையில் உள்ள இல்லங்களில் சென்று படிப்பில் பின்தங்கி இருந்த மாண வர்களிடம் அவர்கள் முன்னேற தேவையான அறிவுரைகள்

வழங்கியும், உடல் தூய்மையாக வைத்திருப்பதின் அவசியத்தையும் கல்வியிலும் தொழிலிலும் ஆர்வம் ஏற்பட்டால் மட்டுமே மனித சமுதாயம் தழைத்தோங்கமுடியும் என்பன போன்ற முற்போக்கான போதனைகளை வழங்கியும் நாணுபக்தன் ஏராளமான நேரத்தை செலவழித்தார். சேவைமனப்பான்மையும், தியாக உணர்வும் கொண்ட இவர், இரவு நேரங்களில் தனிமையில் தியானத்திலும், தமது வாழ்க்கையில் ஏற்படும் இடர்களை எவ்வாறு தாண்டி முன் செல்வது என்பன போன்றவற்றையும் சிந்தித்து தீர்மானங்கள் மேற்கொண்டார். ஒரு மிகக் கடினமான தவத்தை மேற்கொள்ளவேண்டும் என்று ஆர்வம் நாணுபக்தரின் இதயத்தில் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்தது. உலக இச்சைகளில் மிகத் தீவிரமான வெறுப்பும் விரோதமும் வளர்ந்து வந்தன. சாதாரண மக்களின் வாழ்க்கையும் அவர்கள் லட்சியமும் நாணுபக்தரின் பார்வையில் பொய்யான தோற்றமாகத் தோன்றின.

குடும்பத்திலுள்ள மக்கள் நாணுபக்தனின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் செய்யவும் முகூர்த்தம் நிச்சயம் செய்வதற்கு ஒருநாள்முன் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் அவர் செம்பழந்தியினின்றும் காணாமல் போய் விட்டார். குடும்ப அங்கத்தினர்கள் எவருமே எதிர் பார்க்காத சம்பவமாக இருந்தது இது. அந்த இரவில் நாணுபக்தன் யாரும் அறியாமல் நேரடியாகச் சென்றது அகஸ்தியாருடம் மலை. அந்த இரவில் கொடிய வன விலங்குகளும் உள்ள அடர்த்தியான காடுகளையும் கடந்து முடிவில் கோட்டாறு வந்துசேர்ந்தார். அங்கு சில நாட்கள் தங்கிய பின் பிரயாண முடிவில் கடைசியாக நெய்யாற்றின் கரையில் வந்து சேர்ந்தார். அந்த நாட்களில் அவ்வூரில் பிரமுகராக இருந்தவர் புலிவாதுக்கல் வேலாயுதன் என்பவர் ஆவார். அன்னாரின் தொடர்பு குருதேவருக்குக் கிடைத்தது. நீண்ட இந்தப் பயணத்தின் ஆரம்பம் முதல் தூக்கமின்றியும், உணவின்றியும் ஏராளமான

நாட்கள் கழித்தார் குருதேவர். அவ்வாறு வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட சோதனையில் வெற்றி குருதேவரின் பால் நிகழ்ந்தது.

ஆத்மீக வாழ்விற்காக அர்ப்பணம் செய்த பலருக்கும் தங்கள் வாழ்க்கைப் பாதையில் பல இன்னல்களும் இடையூறுகளும் நிகழ்வது இயற்கையே. அவை அனைத்தும் இறைவனின் திருவிளையாடல் என எண்ணி, அதில் ஒரு வேளை தோல்வி ஏற்பட்டாலும் அதனைப்பற்றி கவலைப்படாமல் எதிர்வரும் வாழ்க்கை அனுபவங்களை ஆலசி ஆராய்ந்து விவேகத்துடன் உண்மையைக் கண்டறிந்து முன்னேற்றப் பாதையில் சென்றால் இறைவன் சன்னிதியில் எவரும் சென்றடையமுடியும் என்ற பேருண்மைக்கு குருதேவரின் வாழ்க்கை ஒரு சான்றாக அமைந்திருந்தது.

நாட்கள் சென்றன. நாணுபக்தர் நெய்யாற்றின் கரையில்தான் இருக்கிறார் என்ற செய்தி செம்பழந்தியில் எவ்வாறோ தெரிந்தது. நாணுபக்தர் விரும்பிய வாழ்க்கையை நடத்துவது தமக்கும் விருப்பம்தான் எனவும் தாயர்ரான குட்டி அம்மாள் உடல் நலமின்றி படுக்கையில் இருப்பதால், உடனே ஊருக்குத் திரும்பி வருமாறும் தந்தையான மாடன் ஆசானிடமிருந்து தகவல் வந்திருந்தது. தாயார் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். கடமை குருதேவரை செம்பழந்திக்கு அழைத்தது. தாயார் சன்னிதியில் சென்றார். தாயார் நோயினால் அவதியுற்றதைகண்ட குருதேவரின் மனம் நொந்தது. தேவையான எல்லா மருந்துகளும் தாயாருக்குக் கொடுத்து அன்னைக்கு ஆற்ற வேண்டிய பணிவிடைகளையும் செய்து அவர் அருகாமையில் இருந்திருந்தார். நோய் குறையவில்லை. மாறாக களைப்புகூடியது. இந்த சந்தர்ப்பத்தில் ஒருநாள் நோய் மிகவும் கடுமையான நிலையை அடைந்து குரு சன்னிதியில் அந்தப்புனிதவதி இறைபதம் அடைந்தார். இவ்வளவு நாட்களிலும் நாணுபக்தர் தன் அன்னைக்குச் செய்யவேண்டிய சம்ரட்சணைகளைச் செய்வதில் கடமை உணர்வுடன்

தீவிரமாக் ஈடுபட்டிருந்தது நினைவில் கொள்ள வேண்டியதாகும்.

இதற்குப் பின் நாணுபக்தரின் உறைவிடம், குடிசைகளும் மக்கள் நடமாட்டமற்ற இடங்களுமாக இருந்தன. இக்காலத்தில் வேளி மலையிலும் பின்னர் முட்டக்காடு, குன்னம் பாறை குகையிலும், அருவிப்புறத்திலும் தவ நிஷ்டையில் கழித்தார். இது 1880-வது ஆண்டு ஒட்டிய காலத்தில் நிகழ்ந்தது. தந்தையான மாடன் ஆசான் இந்த வருடத்தில் மரணம் எய்தினார். இந்த விவரம் தெரிவிப்பதற்கு செம்பழந்தியிலிருந்து ஆட்கள் அருவிப்புறம் சென்று அடையுமுன்னரே ''மாடன் ஆசான் காலமாகிவிட்டார்'' என அருகாமையில் இருந்த நாணி ஆசானிடம் குருதேவர் கூறிக்கொண்டிருந்தார். இத்துடன் குருதேவர் தனது உலகியல் வாழ்வு எனும் பெருங் கடலைத் தாண்டிவிட்டார்.

அதிகாரம் IV

# தவம்

பிரணாயாமம் போன்ற யோக நிஷ்டைகள் வேத நூல்களிலிருந்து பயின்றாலும் அவற்றைச் சொந்த அனுபவ வாயிலாகத் தெரிந்து வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவதற்கு,அந்த மார்க்கத்தினைப் பின்பற்றி பயிற்சி பெற்று சித்தராக மாறிய ஒரு தத்துவஞானியின் அறிவுரைகள் எப்பொழுதும் தெய்வீகமாகப் பெற வேண்டியவையாகும். அந்த உண்மைகளை ஸ்ரீ நாராயண குரு தெரிந்திருந்தார். இந்த புனிதர்களின் தொடர்பு, தூய்மையான வாழ்க்கை நெறிமுறைகளை பின்பற்றி சத்துவ குண நலன்களில் ஒளிர் விடும் ஒரு உண்மை பக்தனால் மட்டுமே பெற முடியும். ஸ்ரீ நாராயண குரு பிறந்த சூழ்நிலையும், வளர்ந்து வந்த வாழ்க்கை நிஷ்டைகளும் யோக

நிஷ்டைகள் பயின்ற ஒரு குருவினைத் தரிசிப்பதற்கும் அவரிடமிருந்து அறிவுரை பெறுவதற்கும் முற்றிலும் தகுதி உடையனவாக இருந்தன.

ஸ்ரீ அய்யாஸ்வாமிகள் என்று பெயர் பெற்ற ஒரு யோகியின் தொடர்பு குருவிற்கு கிடைத்தது. ஸ்ரீ அய்யாஸ்வாமிகள் செங்கற்பட்டில் பிறந்து சுப்பராயப் பணிக்கர் என அழைக்கப்பட்டிருந்தார். ஒரு பக்தனான இவர் யோக நிஷ்டைகளில் பெரும் புலமை பெற்றிருந்தார். சுப்பராயப் பணிக்கர் பெற்றிருந்த சித்தியின் மகிமை அவ்வமயம் அரசாட்சி புரிந்திருந்த ஸ்வாதி திருநாள் மன்னருக்கு மிகவும் கவர்ந்தது. அன்னாருக்குப் பின் மூலம் திருநாள் மன்னர் ஆட்சியின் போது பெரும் புகழ் பெற்றிருந்த சுப்பராயர் தைக்காட்டு ரெசிடன்ஸியின் மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டார். அதன்பின் சுப்பராயரும் குடும்பத்தினருடன் திருவனந்தபுரத்தில் வந்து குடி அமர்ந்தார். ஒரு சிவபக்தராக இருந்த இவர் பின்னர் அய்யாஸ்வாமிகள் என்ற திருநாமத்தில் மாட்சிமை பெற்று விளங்கினார்.

ஸ்ரீ அய்யாஸ்வாமிகளின் சித்தி வைபவம் பெயர் பெற்று விளங்கியதால் அன்னாருக்கு ஏராளமான சீடர்கள் தோன்றினார்கள். அவர்களில் திரு. குஞ்ஞன் பிள்ளை சட்டம்பி ஒருவராக இருந்தார். இந்நாட்களில் திரு. நாணு பக்தர் ஐந்து தெங்கு எனும் ஊரிலும் கடற்கரையிலும் ஏகாந்தத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அவ்வமயம் உடன் பயின்ற மாணவரான பெருநெல்லி கிருஷ்ணன் வைத்தியரை ஸ்ரீ நாணு பக்தர் சந்திக்க நேர்ந்தது. வைத்தியர் நாணு பக்தரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு தங்கி இருந்த போது ஒருநாள் திரு. குஞ்ஞன் பிள்ளை சட்டம்பி கிருஷ்ணன் வைத்தியரின் விருந்தினராக வருகை தந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அங்கு தங்கி இருந்த ஸ்ரீ நாணு பக்தரை ஸ்ரீ குஞ்ஞன் பிள்ளை சட்டம்பி முதலாவதாகச் சந்தித்தார். முதல் சந்திப்பிலேயே

அவர்கள் இருவரும் உண்மை நண்பர்களாக ஆகிவிட்ட னர். ஒரு போதும் பிரிந்து செல்ல முடியாத ஆத்மீய நண் பர்களாயினர். ஒரே இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்யும் தத்துவ ஞானிகளாக மாறினர். இதற்குப் பின் னர்தான் திரு. குஞ்ஞன் பிள்ளை சட்டம்பியுடன் நாணு பக்தன் திரு. அய்யாஸ்வாமிகளைச் சென்று சந்தித்தார். அன்று தான் திரு. அய்யாஸ்வாமிகள் நாணு பக்தருக்கு ஆத்மீய குருவாகிறார். அதற்குப் பின் தவம் மேற்கொள் வதற்கான பேறு அன்னாருக்குக் கிட்டியது. குருதேவர் தனது வாலிப பருவத்திலேயே இந்த வழியில் செல்வதற் கான சாஸ்திர நுணுக்கங்கள் கற்றறிந்திருந்தார் என அன் னார் இயற்றிய கவிதைகளிலிருந்து புலனுகும். குருவின் சுப்பிரமணிய கீர்த்தனத்தில் ஒரு பகுதியில் இதனை விளக் குகிறுர். இவ்வாறு யோக சாஸ்திரங்களை இளம் வயதில் தெரிந்து கொண்ட பின்னரும் அதனை வாழ்க்கையில் செயல்முறைப் படுத்துவதற்கு ஒரு குருவின் ஆசீர்வாதமும் ஆணையும் தேவையாக இருந்தன என குருதேவரின் வாழ்க்கையினை அலசி ஆராயும் சிந்தனையாளர்களுக்கு இது வெள்ளிடைமலை எனத் தெரிந்து கொள்வர்.

திரு. அய்யா ஸ்வாமிகளிடம் அருள் ஆசியும் அறி வுரையும் பெற்ற பின் திரு நாணு பக்தரும், திரு குஞ்ஞன் பிள்ளை சட்டம்பியும் குரு சன்னதியிலிருந்து விடை பெற் றனர். இருவரும் சேர்ந்து ஒரு தேசயாத்திரை மேற்கொள் வதற்காக தேவையான ஏற்பாடுகள் செய்தனர். யாத் திரைச் செலவுக்கும் உணவு மற்றும் பானங்கள் அருந்து வதற்கும் தேவையான பணம் எதுவுமின்றி இருவரும் கள் வனால் திருட முடியாத நிரந்தர சாந்தி என்ற நிதியும் காமம் வீசும் அம்பினால் காயம் எதுவும் ஏற்படாத மனப் பேரொளியும் மட்டும் இருந்தன. இவர்கள் மேற்கொண்ட அந்த புனிதப்பயணம் மிகவும் நினைவிற்கொள்ளவேண்டிய தாக இருந்தது. இவ்விரு மாமேதைகளும் ஒன்றுசேர்ந்து நெடுந்தூரம் சென்று எந்த இடரொன்றில்லாமல் எல்லா இடங்களுக்கும் கால்நடையாகவே பிச்சை பெற்று பய

ணம் செய்தனர். கோவில்கள் என தெரிந்திருந்த எல்லா இடங்களையும் அவர்கள் தரிசித்தார்கள். இருவரும் பிச்சைக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற ஆசையும் இந்த நாட்களில் நிறைவேற்றப்பட்டது. யாத்திரையின் போது பலர் மொழிந்த வசை வார்த்தைகளையும் பொறுமையுடன் கேட்டு அமைதியுடன் செல்ல வேண்டியிருந்தது. இந்த நாட்டுப் பயணத்தால் ஏராளமான நபர்களை தொடர்பு கொண்டு பழகுவதற்கு மட்டுமின்றி தன் சொந்த குணநலன்களை தியாகம்செய்து பெற்ற வெற்றியினை தாமாகவே சோதனை செய்து தெரிந்துகொள்ளவும் முடிந்திருந்தது. இவ்வாறு சத்திய சோதனை வாயிலாக வாழ்க்கையை நடத்திய இவ்விரண்டு தியாக மூர்த்திகளும் இறுதியில் கன்னியாகுமரி அருகில் உள்ள மருத்துவா மலையை வந்தடைந்தனர்.

'பிள்ளைத்தடம்' என்பது மருத்துவா மலையின் மிக உயரமான இடத்தில் கற்பாறைகளால் உருவாக்கப்பட்ட ஒரு குகையாகும். தமிழ் நாட்டின் தென் பகுதியில் அமைந்துள்ள இந்த மலையில் ஏராளமான மூலிகை மருந்துச் செடிகள் வளர்ந்து வருவதால் இதற்கு ''மருத்துவாமலை'' எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியிலுள்ள ''விவேகானந்தா பாறை''க்குச் செல்வதற்கு இங்கிருந்து சுமார் ஐந்து மைல்கள் தூரமுண்டு. மருத்துவாமலையின் மிகவும் உயர்ந்த பகுதியில் ஏராளமான கருப்புநிற பனை மரங்கள் கூட்டமாக நிற்பதைக் காணலாம். இங்குதான் ''பிள்ளைத் தடம்'' உள்ளது. இந்த குகையின் முன்பாகம் கடலை நோக்கி அமைந்துள்ளது. தூய்மையான காற்று இங்கு சுலபமாக கிடைக்கிறது. தியான நிஷ்டையில் மூழ்கி இருக்கும் போது புயல்காற்று தொல்லை தராதவாறு இயற்கையாகவே அமைந்துள்ளது ''பிள்ளைத்தடம்''. இந்த குகை பழங்காலங்களில் முனீஸ்வரர்கள் தவம் புரிந்து வந்த இடமாக இருந்திருக்கலாம் என கருதவேண்டி இருக்கிறது. இங்கு தியான நிஷ்டையில் இருப்பவர்களுக்கு புசிப்ப

திற்குத் தேவையான அடபதியன் கிழங்கு, சுதாவேரி, காட்டுக்கொடி, பலவகையான கனிகள் மற்றும் பாறை யின் விரிசலிலிருந்து வரும் ஊற்றுநீர் சுலபமாகக் கிடைக் கும். நாணுபக்தர் குஞ்ஞன்பிள்ளை சட்டம்பியுடன் 1882-ஆம் ஆண்டிற்குப் பின்தான் இங்கு வந்திருந்தார். நாணுபக்தர் தவம் மேற்கொண்டபின், தனது ஆத்ம நண்பருக்கு சர்வமங்களம் உண்டாக ஆசி வழங்கியபின் திரு. குஞ்ஞன்பிள்ளை சட்டம்பி அன்னாரிடமிருந்து விடை பெற்றார்.

மருத்துவாமலையில் ''பிள்ளைத் தடம்'' என்ற குகையில் தவநிஷ்டையிலிருந்த ஸ்ரீநாராயண குருவின் அனுஷ்டான காலம் சரிவர தெரியவில்லையாயினும் குரு வின் கவிதைகளை ஊன்றிப் படிப்பவர்கள் அதனை ஓரளவு புரிந்துகொள்ளலாம். யோகம் சித்தவிருத்திக்கு உகந்ததல்ல எனவும் அந்த மனம் ஆத்மாவில் ஐக்கிய மாகும்பொழுது சமாதி நிலையை எய்தமுடியும் எனவும் குருவின் கவிதைகள் போதிக்கின்றன.

சங்கற்பங்களால் நிறைந்துள்ள மனம் சஞ்சலம் அடையும் தன்மை பெற்றதாகும். அது தேவையற்ற அனைத்திற்கும் காரண பூதமாக முடியும். அவ்வாறு மனம் என்னென்ன பொருட்கள்பால் தாவுகின்றதோ, அப்போது அதனைக் கட்டுப்படுத்தி ஆத்மாவில் மட்டுமே நிலைபெறச் செய்யவேண்டும். அவ்வாறு மன மலர் எடுத்து மகேச பூஜை செய்யும் மனிதருக்கு வேறு எதுவும் செய்யத் தேவையில்லை. அந்த பூஜையின் மிக உயர்ந்த நிலையில் ஜடப்பொருட்களுக்கு அறிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் இல்லை எனவும் ஆத்மாமட்டுமே அந்த நிலையை பெறமுடியும் எனவும் அப்போதுதான் சஞ்சலமற்ற குண நிலை அடையமுடியும் எனவும் குருதேவர் காண்கிறார். எப்பொழுது மனம் எனும் வண்டு ஆத்மானந்தம் என்ற தேனின் தீஞ்சுவையைச் சுவைத்து அசையாத நிலையினை எய்துமோ அந்த ஆத்ம நிலை குண, பாவங்களுக்கு அப்பாற்பட்டதாக் மாறும். அவ்வாறு பெற்ற ஆத்ம

ஞானத்தால் சமாதி நிலையைப்பெற்ற குருதேவர் அந் நிலையிலிருந்து உணர்வுபெற்று ஒரு சித்தனாக, மருத் துவாமலையிலுள்ள பிள்ளைத்தடத்திலிருந்து இறங்கி கேரளாவிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் தனிமை யாக பிரயாணம் மேற்கொண்டார். அன்று அன்னாரின் தோற்றத்தில் ஒரு ஜோதிர்மயமான ஒரு அற்புத பேரொளி யைக் கண்ணுற்ற மக்கள், அந்த மகான் சொன்ன வார்த் தைகளை ஊன்றிப் பின்பற்றவும் அதன் வழியாக தங்கள் வாழ்க்கையில் ஒரு புதுமையை ஏற்படுத்தவும் முயன்றனர்.

ஸ்ரீநாராயண குருதேவரின் பிறப்பு முதல் இதுவரை யிலுள்ள அன்னாரின் வாழ்க்கையில் மனிதனுக்கு அப் பாற்பட்ட பல குண நலன்கள் தென்பட்டிருந்தன என அறிந்து கொள்ளலாம். அகண்டமான இந்த ஆத்ம ஈடேற்றத்திற்கு குருதேவருக்கு வழிவகுத்தது, அவர் இது வரை பெற்ற விசேட குணங்களில் மிக உயர்ந்த குண மான தூய்மையான பிரம்மசரிய நிஷ்டையும், தியாக மனப்பான்மையுமாகும். எந்த அளவிற்கு ஆத்ம ஈடேற் றம் தேவையோ அதனைப் பெறுவதற்குத் தேவையான தியாகத்தைப் புரியத் துணிவும் பரிவும் தேவை என குரு தேவரின் வாழ்க்கை நமக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது.

ஒருவருக்குப் பேரின்ப ஞானம் பெருகுமளவிற்கு அவர் மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்கு ஏற்றம் பெற்றவ ராகத் திகழ்கிறார். எனவே தான் குருதேவர் 'ஒருவர் தமது ஆத்ம இன்பத்திற்காக செய்பவை மற்றவர்களுக்கும் நன்மை பயப்பதாக இருத்தல் வேண்டும்' என மொழிந் துள்ளார். இந்த ஆத்ம இன்பம் அனுபவ வாயிலாக பெற்றவர்களுக்கு மட்டும் தான் அதனைப் பிறருக்கு எடுத் துரைக்க முடியும். அவர்கள் மட்டுமே மனித குலத்தின் பேரின்ப ஞானியாகத்திகழ முடிந்துள்ளது. அவர்கள் தாம் அழிவிலா பரம்பொருளின் திருஉருவங்கள் ஆவார்கள்.

அடர்ந்த காட்டில் தனிமையில் வளர்ந்து வரும் செடி யில் முளைவிட்ட பூவில் தேனும் நறுமணமும் இருந்தால்

அந்த தேனைச் சுவைப்பதற்கு நெடுந்தூரத்திலிருந்தும் தேனீக்கள் வருவது இயற்கையே. அது போன்று தான், அழிவற்ற ஆத்மீக சக்தி பெற்ற குருத்துவம் உள்ள பெரு மகனார்களும் ஆவார்கள்

அதிகாரம் V

# குருதேவரும், சமுதாய சீர்திருத்தமும்

எட்டு யோக நிஷ்டைகள் வாயிலாக சமாதி பயிற்சி பெற்று அதனின்று சித்தனாக மாறி ஜீவன் முத்தி பெற்ற மகான்களுக்கு இவ்வுலகில் ஆற்ற வேண்டியது அல்லது பெற வேண்டியது எதுவுமே இல்லை. எனினும் கருமம் கைகூடுமாகில் அதன் முழுமையை அடைய உலக நன்மையை எண்ணி அறியாமையில் உழலுகின்ற மக்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பது இயற்கையே. ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையின் நோக்கம் இதுவாகத் தான் இருந்தது.

அப்பழுக்கற்ற குண நலன் பெற்ற குரு தனது எஞ்சிய வாழ்நாட்களில் அவர் கண்ணுற்ற சமூக வாழ்க்கையின் சீர்கேடுகளைக் களைவதுதான் தமது தலையாய கடமை என எண்ணினார். சுற்றுப் புறங்களில் அவர் கண்ட காட்சி என்ன? அன்று வாழ்ந்திருந்த இந்து மதத்தைச் சார்ந்த மக்கள், அவர்ணர் எனவும் சவர்ணர் எனவும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து வாழ்ந்தனர். சவர்ணர் பகுதியை சார்ந்த மக்கள், அவர்ணர்களை தாழ்ந்தவர்கள் எனக் கருதினர். அவர்கள் சுதந்திரமாக கல்வி கற்கவோ, வேத சாஸ்திரங்களைப் பயிலவோ கூடாது என தடை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் கோவில்கள் நிறுவலாகாது. அங்கு பிரதிஷ்டை மற்றும் பூஜைகள் எதுவும் நடத்தலாகாது. அவை அனைத்தும் சவர்ணர்கள் மட்டுமே

நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் என்ற சமூகநிலை நில வியது. அவர்ணர்கள் இந்த செயல்களைச் செய்ய தடை விதிக்கப் பட்ட சமூகக் கட்டுப்பாடுகள் வேரூன்றி இருந் தன.

ஸ்ரீநாராயண குருதேவரின் பிறப்புக்கு முன்னரே பின்பற்றப்பட்டுவந்த மூட பழக்க வழக்கங்கள் காலப் போக்கில் வளர்ந்து அன்னாரின் வாழ்நாட்களில் கொடூர மான நிலையை அடைந்து கோரத்தாண்டவ ரூபம் பெற்றிருந்தன. குருதேவர் சித்தனாக கேரளாவின் எல்லா பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்ட போதெல் லாம் இந்த மூடப்பேயின் நிர்வாண தாண்டவத்தைக் கண்டு கண்கலங்கினார். சமூக வாழ்க்கையில் நிலவும் துயரூட்டும் இந்நிலை குருதேவரைச் சிந்திக்கவைத்தது. தீர்க்கதரிசியாக இருந்த குரு இந்த மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டுமானால் ஒரு சமூக கூட்டமைப்பு தேவை என உணர்ந்தார். தன்னம்பிக்கை ஏற்பட்டபின் தனிப் பட்டவர்களிடமும் சமூகத்தவரோடும் இரண்டறக் கலந்து அவர்களைத் தன்பால் ஈர்த்தார். கூட்டமைப்பு கொண்டு சொந்த பலம் பெறும் மக்களுக்கு மட்டுமே சமூக வாழ்க்கையில் வெற்றிகள் ஈட்டமுடியும். சமூகத் தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டால் அன்றி மானிட வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்ல இயலாது எனப் புரிந்து கொண்டார்.

மனிதனின் முன்னேற்றப் பாதையில் அவனுக்கு அடிக் கடி ஏற்படும் மூடப்பழக்கவழக்க உணர்வுகள் தடைக்கற்க ளாக ஆகிவிடுகின்றன. இந்த தடைகளைப் பொறுமை யுடனும் துணிவுடனும் எதிர்கொண்டு புரட்சிமிக்க உன்னத சமூகநீதியை நிலைநாட்ட மன உறுதி கொண்ட மக்கள் சமூகத்தை மிக விரைவில் உருவாக்க குருதேவருக்கு முடிந்தது. அந்தக் கூட்டமைப்புக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கி சவர்ணரின் அடக்குமுறைக்கு சமாதிகட்ட குரு தேவர் உறுதி பூண்டார். முக்கால ஞானியாகத் திகழ்ந்த

குருவிற்கு, கேரளத்தின் பல பகுதிகளில் தன்னை நம்பிக் கையுடன் போற்றி, ஆராதனை புரியும் மக்கள் சமூகத்தை தன்பால் ஈர்க்க முடிந்தது. தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு வாழ்க்கை நெறிமுறைகளையும், மனத் தூய்மையையும் வழங்கி சவர்ண அடக்குமுறையைத் தகர்த்துத் தரை மட்டமாக்குவதற்குத் தேவையான திட்டத்தை உருவாக் கும் கர்மவீரராக மாறினார். அதன் முதற்கட்டம், கோவில் நிர்மாணமும் தேவதை பிரதிஷ்டையுமாக இருந்தன.

திருவனந்தபுரம் நகரின் கிழக்கில் குடிகொண்டுள்ள அருவிப்புரம் எனும் இடத்தில்தான் குருதேவரின் முதலா வதான கோவில் நிர்மாணமும் பிரதிஷ்டையும் நடந்தன. குருவிடம் நம்பிக்கை வைத்திருந்த பக்தர்களின் துணை யுடன் உருவாக்கப்பட்ட கோவிலில், முதலாவதாக அவர் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தார். அன்றுவரை சவர்ணர் களுக்கு மட்டுமே கோவில் பிரதிஷ்டை செய்ய உரிமை இருந்தது. அவர்ணர்கள் அது செய்யக் கூடாது. ஒரு அவர்ணன் கோயில்பிரதிஷ்டை செய்தால் என்ன தவறு? மன உறுதிபெற்ற குருதேவர் கோயில் பிரதிஷ்டை மட்டு மல்ல அங்கு செய்தது. 'ஜாதிவேற்றுமை,மத துவேஷமின்றி அனைவரும் சகோதரர்களாக வாழும் மூன்மாதிரி ஸ்தா பனமாகுமிது'' என்ற உலக சகோதரத்துவ தத்துவத்தை அருவிப்புரத்தில் உருவாக்கப்பட்ட கோயிலின் வாசலில் எழுதி வைத்தார்.

மனிதன் பிறக்கும்போது ஏற்றத்தாழ்வின்றி இருப்ப தால் அவன் சுதந்திரமாக வாழ்வதற்கும் இறைவழிபாடு நடத்துவதற்கும் தடை விதிக்க வேறு எந்த நபருக்கும் உரிமை இல்லை. அனைவரும் சகோதரர்களே. ஒருவன் வாழும்போது மற்றவர்களையும் வாழவிட வேண்டும். இந்த ஒரே உலக சகோதரத்துவ முழக்கத்தை குருதேவர் அருவிப்புரம் கோவில் பிரதிஷ்டை மூலமாக உலகிற்கு அருளினார். சவர்ணர்களின் அடக்குமுறைக்கு ஆணி

அடித்தாற்போல் குருதேவரின் இந்த அதிர் முழக்கம் அமைந்திருந்தது. பொறாமையில் பித்துப் பிடித்த பிராமணர் ஒருவர் குருதேவரிடம் வந்து ''நம்பூதிரிகளைத் தவிர வேறு யாருக்காவது சிவ பிரதிஷ்டை செய்ய உரிமையுண்டா?'' என வினவினார். குருதேவர் மறுமொழியாக, ''நாம் நம்பூதிரி சிவனைப் பிரதிஷ்டை செய்யவில்லை'' என கூறி அந்த பிராமணரின் நாவை அடக்கினார்.

அதற்குப்பின் கேரளாவின் தெற்குப் பகுதியிலிருந்து வடக்குவரை ஏராளமான கோவில்கள் பக்தப் பெருமக்களால் நிறுவப்பட்டு வந்தன. அவற்றில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப தேவ பிரதிஷ்டைகள் குருதேவரால் நிறைவேற்றப்பட்டன. கேரளத்தில் மட்டுமின்றி, தமிழ்நாடு, மங்கலாபுரம், ஸ்ரீலங்கா முதலிய இடங்களிலும் கோவில்கள் கட்டி பிரதிஷ்டை செய்வதற்கு குருதேவருக்கு முடிந்தது.

அவர்ணர்கள் கோவில்கள் அமைத்து பிரதிஷ்டை கர்மங்கள் நடத்தத் துவங்கியபின் சவர்ணர்களுக்கு தங்கள் சொந்தக் கோவில்களில் வருவாய் குறையத்தொடங்கியது. குருதேவர் பிரதிஷ்டை செய்த அனைத்துக் கோவில்களிலும் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் வழிபாடு நடத்துவதற்கு எவ்வித தடையுமில்லை. கோவில்கள் மட்டுமின்றி சில இடங்களில் ஆசிரமங்களும் அமைத்தார். சவர்ணர்களுடன் அவர்கள் கல்வி கற்பதற்கு பள்ளிகளில் அந்நாட்களில் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததால் கல்வி பெற்று விஞ்ஞான அறிவுபெற்று சுதந்திர வாழ்க்கை நடத்த ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை தத்துவத்தின் அடிப்படையில் குருதேவர் ஆசிரமங்கள் அருகாமையில் கல்விச் சாலைகளையும் நிறுவினார்.

மக்களிடம் ஒற்றுமை உணர்வையும் விஞ்ஞான வேட்கையையும் தூண்டுவதற்கு அடிக்கடி சம்மேளனங்கள்

அமைக்க வேண்டும் என அவர் விரும்பினார். சம்மேள னங்கள் நடைபெறும்போது மதம், இடைவிடாது பின் பற்ற வேண்டிய நெறிமுறைகள், கல்வி, தொழில், விவசாயம், வாணிபம், கைத்தொழில் ஆகியவை வளர்ச்சி அடைய தேவையான வழிமுறைகள், ஆடம்பரத்தைக் குறைத்து சிக்கனத்தை கையாள்வேண்டிய முக்கியத்துவம் ஆகியவை பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி சமூகத் தினருக்கு குருதேவர் அறிவுரை வழங்கினார். சமூகத்தி லுள்ள நபர்கள் சோம்பலாக இருந்து வாழ்க்கை நடத்து வதை தர்ம நெறிகளுக்கும் சட்டத்திற்கும் புறம்பானது எனவும், அது செய்பலாகாது எனவும், சமூக வாழ்க்கை யில் ஆண் பெண் இரு பாலருக்கும் புகட்டும் வகையில் சமுதாய கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினார். சுறுசுறுப்புடன் கடமைகளை ஆற்றினால் அன்றி வறுமை யிலிருந்து விடுதலைபெற்று செல்வச் செழிப்புடன் வாழ இயலாது என அருளினார் குருதேவர்.

வாதங்கள் மேற்கொண்டு வெற்றிபெறுவதல்ல வாழ்க்கையின் நோக்கம். மனிதர்களான நமது ஒவ்வொரு வரின் வாழ்வின் நோக்கமும் உண்மையை கண்டறிவதும், அறிந்தவற்றை பிறருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற தர்ம உணர்வும் ஏற்படவேண்டுமென்பதே. மனிதரில் அறிவுபடைத்தவர்கள் துன்புறுத்துவதற்கோ தீமை செய்யவோ முற்படமாட்டார்கள். அறிவு குறைந்தவர் களிடம் நாம் பரிவுடன் பழகவேண்டும். நாம் பதிலுக்கு கோபம் கொள்ளலாகாது. நமது கடமை என்னவென்று சரிவர புரிந்துகொண்டு அவற்றை ஒழுங்காக நிறை வேற்றினால் நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இதுபோன்று தியாக மனப்பான்மை அனைவருக்கும் மிகவும் அவசியமானதாகும். கல்விச் சாலைகளில் குழந்தைகள் தியாககுணம் படைத்தவர்களாக இருக்க பயிற்சி அளிப்பது மிகவும் தேவையானதாகும் என குரு தேவர் அருளி இருந்தார்.

## வர்க்கலையில் குருதேவர்

குருதேவர் **1904**ம் வருடத்தில் வர்க்கலையிலுள்ள சிவகிரி குன்றிற்கு எழுந்தருளினார். அந்தக் குன்றின் இயற்கை எழில் குருவின் இதயத்திற்கு மகிழ்ச்சி வழங்கும் வகையில் கவர்ந்தது. அந்த குன்றிற்கு வருகை தந்தபின் ஒரு பகுதியில் ஒரு சிறு ஓலைக் குடிசை அமைத்து அதில் ஓய்வெடுக்கவும், அன்றாட கடமைகளைச் செய்யவும் தொடங்கினார். அந்தக் குடிசையின் நாற்புறமும் ஏராளமான செடிகளை தாமே நட்டு வளர்த்து வருவது குருவின் அன்றாட பணிகளில் ஒன்றாக இருந்தது. அவர் அடிக்கடி அருவிப்புரத்துக்குச் சென்றிருந்தார். குருதேவர் சிவகிரி குன்றில் இருந்த நாட்களில் அன்னாரைத் தரிசிக்கவந்த பக்தர்களிடம் அந்த குன்றின் இயற்கை எழிலையும் அதன் அருகாமையில் உள்ள ஆற்றின் கரையில் குளிப்பதற்கான நீர் ஊற்று வசதியையும் கருத்திற்கொண்டு, சிவகிரியில் ஒரு ஆசிரமம் அமைப்பது அவசியம் எனக் கூறி இருந்தார்.

நாட்கள் செல்லச் செல்ல பக்தப் பெருமக்களின் உதவியால் சிவகிரி குன்றின் ஓர் பகுதி குருதேவரின் பெயரில் அரசாங்கத்திடமிருந்து பட்டாவாகப் பெறப்பெற்றது. அருகாமையில் உள்ள எஞ்சிய பகுதியினை அருகாமையில் வசித்து வந்த பக்தர்கள் இலவசமாக குருதேவருக்கு வழங்கினார்கள். மனித சமூகத்தில் ஒற்றுமை உணர்வும் கூட்டுறவு சக்தியும் விஞ்ஞான அறிவும் பரவிட பக்தர்களின் உள்ளுணர்வை ஊக்குவிக்க தொலை தூர நோக்குடன் கூடிய ஒரு திட்டத்திற்கு வழிகோலுவதாக இது அமைந்திருந்தது. மகானான குருதேவரின் அன்றைய முயற்சி இது என அன்னாரின் பிற்கால வாழ்க்கை நிரூபித்து விட்டது.

சிவகிரியில் ஒரு மடமும் ஆசிரமமும் நிறுவவேண்டும் என்று தீர்மானம் செய்தபின், குருதேவரிடம் பக்தி செலுத்திய ஆதரவாளர்களிடமிருந்து தாராள நன்கொடைகள் குருவின் பெயருக்கு வரத் தொடங்கின. குருதேவரும் அவ

ரது சீடர்களும் முயன்று அதற்கான வேலைகள் துவக்கப் பட்டன. வர்க்கலை ஜனார்த்தன கோவில் அருகாமை யில் உள்ள பாபநாசக்கரையில், ஆடி மாத அம்மாவாஸை தினத்தில், மூதாதையர்களுக்குப் பலிகொடுக்கும் சடங்கு வசதியும் ஆசையும் உள்ளவர்கள் சிவகிரியிலும் நடத்த லாமே! அதில் என்ன தவறு உள்ளது? என்றார் குருதேவர். மகாத்மாவான குருதேவரின் திருவாய் மொழிக்கிணங்க அன்று முதல் இன்று வரை சிவகிரியில் வைத்து பலி அர்ப்பிக்கும் சடங்கு நிகழ்ந்து வருகிறது.

1908-ம் ஆண்டில் சிவகிரி குன்றின் மிக உயர்ந்த பகுதி யில் ஒரு சிவன் கோவில் அமைக்க வசதி ஏற்பட்டது. ஏராளமான பக்தர்கள் அங்கு வந்து வழிபாடு நடத்தினர். அதனால் தான் அந்த குன்றிற்கு சிவகிரி குன்று என பெயர் வந்தது. அந்த சிவன் கோவில் இருந்த இடத்தில் தான் இப்போது குருதேவரின் சமாதி மண்டபம் அமைக்கப் பெற்றுள்ளது. குருதேவரின் ஞாபகார்த்தமாக நிரந்தர மாக நிறுவப்பட்ட அந்த பிரம்மாண்டமான மகா சமாதி மண்டபம் சாந்தியும் அமைதியும் அளிக்கிறது. அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின், ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதற்கு ஒரு கல்விக் கூடமும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு இரவு பள்ளிக் கூடமும் ஏற்படுத்தி நடந்து வந்திருந்தது. 1909-ம் ஆண்டில் குருதேவரின் ஜெயந்தி நாள் அன்று சாரதா கோவில் அமைப்பதற்கு கால்கோல் விழா நிகழ்த்தப்பட்டு தொடர்ந்து விரைவில் கட்டி முடிக்கப் பட்டது. மிகுந்த அழகும், சுத்தமும் உறுதியும் கொண்ட எட்டு பட்டத்தின் அமைப்புடனான அந்த கோவிலின் வேலை முடிவுற்றது. தாமரையில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ சாரதாதேவியின் திரு உருவச்சிலையின் பிரதிஷ்டை நிகழ்ச்சி மாபெரும் விழாவாக 1912-ல் ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோக ஆண்டு விழாவுடன் விமரிசையாக சிவகிரியில் கொண் டாடப் பட்டது.

## மனித குணங்களுக்கு அப்பாற்பட்ட குருதேவர்

தவம் புரிந்த பின் ஒரு சித்தனாக கேரளாவின் மக்கள் சமூகத்தில் அற்புதமான கருத்துக்களை வழங்கியும், சங்க வலிமையால் ஈட்டும் அபார வெற்றியை தனது செயல்வழி யாக நிரூபித்து மற்றவர்களை கர்மவீரர்களாக மாற்றியும் ஸ்ரீ நாராயண குருதேவர் அனைத்து மக்களாலும் வணங் கப்பட்டவராகத் திகழ்ந்தார். எந்த இடத்திலும் நிரந்தர மாக தங்கும் பழக்கம் குருவிற்கு இருந்ததில்லை. பிரம்ம சரிய நிஷ்டையாலும், தவ வலிமையாலும் அவர் பெற் றிருந்த அபார சாந்தி சொல்லி முடியாது.

குருதேவர் எந்த மக்கள் கூட்டத்தில் சென்றாலும் ஒரு விசேஷ திவ்விய பேரொளி தனது தாமரை போன்ற முகத்திலிருந்து சுடர் விட்டது அனைவராலும் தரி சிக்க முடிந்தது. அவர் எங்கு சென்றாலும் வழிபடு வதற்கு ஏராளமான பக்தர்களின் கூட்டம் வருவதுண்டு. இவர்களில் பலர் நோயினால் பாதிக்கப்பட்டு அமைதி இழந்தவர்களும், மற்றும் சிலர் மன நோயினால் அவதிப் பட்டவர்களுமாக இருந்தனர். குருதேவரின் தரிசனம் பெற்று அன்னாரின் திருக்கரங்களால் பக்தியுடன் ஏதாவது பெற்று அருந்தினால் அது ஒரு அற்புத அரு மருந்து ஆக இருக்கும் எனவும் அவர்களது நோய் தீரும் எனவும் கருதி திடமான நம்பிக்கையும் அசைக்க முடியாத விசுவாசமும் கொண்டிருந்தனர். அவர்களின் இந்த ஆசை நிறை வேறும் பொருட்டு அவர்கள் விருப்பங்கள் குருதேவரின் அபார ஆற்றலால் நிறைவேற்றப்பட்டிருந்தன. கெட்ட பிசாசுகளின் தாங்கொணா தொல்லையால் மனச் சோர்வு அடைந்தவர்கள் குருதேவரின் தரிசனம் பெற்று அன்னா ரின் கையிலிருந்து பக்தியுடன் ஏதாவது வாங்கி அருந்தி னால் உடனே அதிலிருந்து விடுதலை பெற்றனர்.

இவ்வாறு தன்னை நாடிவந்த பக்தர்களின் எண்ணங் களையும் அபிலாஷைகளையும் குருதேவர் நிறைவேற்றி

னார். துர்தேவதைகளின் தொல்லையால் அவதிப்பட்டவர்களுக்கு அதிலிருந்து குணம் பெறவும், குழந்தைச் செல்வங்கள் இல்லையே என ஏங்கித் தவித்த தம்பதிகளுக்கு குருதேவரை நாடியபோதெல்லாம் அந்த பகானின் அருளால் குழந்தைகள் பெறவும் முடிந்திருந்தது. தன்னை நாடிவரும் பக்தர்களின் இதயத்தில் உள்ள எண்ணங்களையும் ஆசைகளையும் தாம் ஏற்கனவே தெரிந்துகொண்டு அதனை ஸம்பூஜ்ய குரு அவர்கள் வெளிப்படுத்தியபோது பக்த பெருமக்கள் ஆச்சரியமடைந்தனர். "எந்த உணவாகிலும் பக்தியுடன் வழங்கினால் அதை குருதேவர் அவர்கள் பெற்று சாப்பிடத் தயங்கவில்லை. சில வேளைகளில் புத்திகெட்ட சில மனிதர்கள் சிலர், உணவில் விஷம் கலந்து குருதேவருக்குப் படைத்தபோதும் அதனை அருந்தியதால் எவ்வித ஆபத்தும் அன்னாருக்கு ஏற்பட்டதில்லை. நீண்ட நாட்களாக குருதேவர் கடைப்பிடித்த பிரம்மசரிய நிஷ்டை, தவவலிமை ஆகியவற்றால் பெற்ற அபார சித்தி, இவை அனைத்தும் மனித சமூகத்தில் குருதேவரை ஒரு முன்மாதிரியான குருவாகவும், தலைவராகவும் அங்கீகரித்தது. அன்னாரின் நாவிலிருந்து உதிர்ந்த பொன்மொழிகள், மறுக்கமுடியாத ஆணைகளாகவும் திகழ்ந்தன.

SWAMINATHA

## ஆலுவா அத்வைதாசிரமம்

*1912*-ல் சிவகிரி சாரதாதேவியின் பிரதிஷ்டைக்குப் பின்னர் அந்தக் கோவிலில் புஷ்ப அர்ச்சனை மற்றும் வழிபாடும் நடத்தினால்போதும் என்று அருளியபின், குருதேவர் அங்கிருந்து வடக்கில் ஒரு பயணம் மேற்கொள்ள விரும்பினார். அன்னாரின் அடுத்த நோக்கம் ஆலுவா என்ற ஊரில் ஒரு அத்வைத ஆசிரமம் அமைப்பது என்பதாக இருந்தது. அன்றைய பயணத்தில் இடையில் குருதேவர் ஹரிப்பாடு என்ற இடத்தில் ஓய்வெடுத்தார். திருவடிகளின் எண்ணத்தினை அங்கிருந்த பக்தப் பெருமக்கள் புரிந்துகொண்டு ஆலுவாயில் ஒரு அத்வைத

ஆசிரமம் அமைப்பதற்குத் தேவையான இடம் வாங்கித் தருவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தனர். பின்னர் அங்கிருந்து சேர்த்தலை வழியாக பயணம் மேற்கொண்ட குருதேவருக்கு அத்வைதாசிரம கட்டிடப்பணி தொடங்கத் தேவையான நிதியை அங்குள்ள பக்தர்கள் நன்கொடை யாக அளித்தனர். அந்த வேளையில் தலைச்சேரி கோவி லில் இளநீர் அபிஷேகம் நடந்துகொண்டிருந்தது, அந்த விழாவின் தலைவர்கள் குருதேவரை அணுகி இளநீர் அபிஷேகத்தில் கலந்துகொண்டு வந்துள்ள பக்தர்களுக்கு ஆசி வழங்கக் கோரினர். குருதேவர் மகிழ்ச்சியுடன் இதற்கு இசைந்து விழாவில் கலந்துகொண்டார். அன்று பிரமிக்கத்தக்க அளவு மக்கள் கூட்டம் அங்கு காணப் பட்டது. காணிக்கையாக ஏராளமான பக்தர்கள் பணம் வழங்கினர். அந்த நிதியின் பெரும்பகுதி அத்வைதா சிரமம் அமைப்பதற்கு கோவில் நிர்வாகிகள் பரிவுடன் காணிக்கை ஆக்கினர்.

குருதேவர் தலைச்சேரியிலிருந்து அதற்குப்பின் ஆலுவா திரும்பினார். ஆசிரமம் அமைப்பதற்குப் பெரியார் கரை யில் தேவையான இடம் கிரயத்திற்குப் பெறுவதற்கு பக்தர்களின் தாராள உதவி குருதேவருக்குக் கிடைத்தது. 1912-ல் சிவகிரியிலிருந்து மேற்கொண்ட பயணம் ஆலுவா அத்வைதாசிரமம் அமைக்க மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

மனிதகுல நன்மைக்கான இலட்சியத்தின் ஒரு பகுதி யாக இருந்தது அத்வைதாசிரமம் ஸ்தாபித்தல். குருதேவர் தனது பிற்கால வாழ்க்கையில் ஆற்றிய தொண்டு முழு வதும் உலக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டிருந் தது. இவ்வாறான நற்பணிகள் வெற்றி அடைவதற் கான காரணம் அன்னாரின் பலன் கருதாச் செயல்களா கும். ஸ்வாமிஜி அவர்கள் மனத்தாலும், வார்த்தைக ளாலும், செயலாலும் மிகவும் தூய்மை உள்ளவராக விளங்கினார். தியாக உணர்வுடன் தன்னலம் கருதா

சேவை புரிந்ததால் மக்கள் அவரைக் குருவாகப் போற்றினார்கள் என்பது நினைவுகூர வேண்டியதாகும்.

ஆலுவா அத்வைதாசிரமத்தின் வேலை துரிதமாக நடைபெற்றது. *1913*-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சிவராத்திரி நாளன்று ஆலுவாயில் ஒரு பொது சம்மேளனம் குருதேவர் ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி அத்வைதாசிரமத்தில் ஒரு சமஸ்கிருத கல்விக்கூடமும் ஏற்படுத்தப்பட்டது. *1913*-ம் ஆண்டு அத்வைதாசிரம வேலை முடிவுற்றது.

## சம்பந்தி போஜனம்

"அனைவரும் ஆத்ம சகோதரர்கள் என்றே கூற வேண்டும். இதனை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்" என்ற குருதேவரின் தத்துவத்தை செயல் வடிவில் மெய்ப்பிக்க *1919*-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாள் அன்னாருக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தொடவோ, தீண்டவோ கூடாதவர்கள், கண்ணால் பார்த்தாலே பாவம் என்பவர்கள், சமபந்தியில் உண வருந்தாதவர்கள், ஆக பல்வேறு ஜாதி இயக்கங்கள் வேரூன்றி இருந்த காலம். இவ்வாறான சமூகவிரோத சக்திகளின் மத்தியில், "ஜாதி ஒன்றே உள்ளது, நாம் அனைவரும் ஆத்ம சகோதரர்களே" என்று வீரமுழக்கம் செய்தார் குருதேவர். இதனைச் செயல் வடிவத்தில் நிரூபிப்பதற்கு அன்றைய நன்னாளில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. திருவல்லா என்ற தாலுகாவில் மிகவும் ஏழ்மையில் வாழ்ந்த மிகப் பிற்பட்டோர் வகுப்பில் சேர்ந்த ஒரு நபராக இருந்தார் திரு. கிருஷ்ணன் வைத்தியர். அவர் அந்த நாட்களில் கல்வி அறிவுபெற்ற குருதேவ பக்தராக இருந்தார். தனது சமூகத்தார் அனுபவித்த சொல்லொண்ணாத் துயரத்திலிருந்தும் சுதந்திரமற்ற வாழ்க்கை

யிலிருந்தும் விடுதலைபெறுவதற்கு ''கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தால் என்ன'' என்று தனது நண்பராக இருந்த ஸரஸ கவிஞர் திருமூலீரிடம் வினவினார். அதற்கு ஈழவ சமூகத்தில் சேர்ந்தால் நல்லதல்லவா ? அதில் என்ன தவறு ? என்றார் மூலீர். 'அவ்வாறாயின் மிக்க மகிழ்ச்சி' என்றார் கிருஷ்ணன் வைத்தியர்.

குருதேவர் அந்த நாட்களில் ஆலுவாயில் ஓய்வு பெற்று வந்தார். ஸரஸ கவிஞர் மூலீர் ஒருநாள் குருதேவரை அணுகி கிருஷ்ணன் வைத்தியரின் எண்ணத்தை அன்னாரிடம் தெரிவித்தார். குருதேவர் இதை அறிந்து மகிழ்வடைந்தார். பின்னர் ஒருநாள் திருவல்லாயிலுள்ள கோட்டார் வீட்டில் குருதேவர் எழுந்தருளினார். கிருஷ்ணன் வைத்தியரையும் அவர் உறவினர்களையும் அங்கு வரவழைத்தார். அன்று ஜாதி மத வேற்றுமையின்றி அனைத்து மக்களின் ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றையதினம் வீட்டிற்குள் அறுசுவை உணவு விருந்து ஒன்றுக்கு இரகசியமாக ஏற்பாடாகி இருந்தது. பொதுக்கூட்டத்திற்கு மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. கூட்டத்திற்கு வேளை நெருங்கியது. குருதேவர் தலைமை தாங்கிட கூட்டம் தொடங்கியது. மூலீர் முதலிய பண்டிதர்கள் கூட்டத்தின் நோக்கம் பற்றி உரை நிகழ்த்தினர். கூட்டத்தினர் மகிழ்வுடன் சொற்பொழிவுகளைச் சுவைத்தனர். கூட்டம் முடிவுபெறும் நேரம் நெருங்கியது. குருதேவர் அந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் வைத்தியரையும் அவர் உடன்வந்த உறவினர்களையும் தமது அருகாமையில் வருமாறு அழைத்தார். பின்னர் இவ்வாறு அருளினார். ''உங்களுடைய கணிக்குறிப்புமுறை ஒழிக்கப்பட்டிருக்கிறது. இன்றுமுதல் நீங்கள் ஈழவ சமுதாயத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து இயங்கலாம். உங்களுக்கு எல்லா நலன்களும் வந்துசேரும்''. கிருஷ்ணன் வைத்தியருக்கும் உடன் வந்தவர்களுக்கும் குருதேவரின் அருள்வார்த்தைகள் கேள்வியுற்றபோது ஏற்பட்ட மகிழ்ச்சி அளவிற்கு அப்

பாற்பட்டதாக இருந்தது. பின்னர் அங்குகூடி இருந்த எல்லா இன மக்களும் சாதி மத பேதமின்றி சகோதரர்கள் போன்று ஒற்றுமையுடன் அங்கு தயார் செய்துவைக்கப் பட்டிருந்த அறுசுவை விருந்தினைப் பருகினர். விருந்தின் முடிவில் குருதேவர் இவ்வாறு அருளினார். ''1919-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் நாளாகிய இன்று ஒரு சுப தினமாகும். சமபந்தி போசன நாள்''.

## தாழ்த்தப்பட்டோர் வாழ்வில் மறுமலர்ச்சி

அர்ப்பணிப்பு மனப்பான்மையிலுள்ள உண்மையான ஒரு துறவி எந்த ஒரு பொருளின்பாலும் விசேட நாட்டம் செலுத்துபவராக இரார். எல்லா உயிரினங்களையும் சொந்த சகோதரர்கள் என எண்ணி சம நிலையில் தன் னலம் கருதாமல் வாழவேண்டியது தியாக உணர்வுடன் உள்ள துறவிகளின் கடமையாகும். ஒருகாலத்தில் மனிதர் களில் சிலர் அவர்கள் சுய இலாபத்திற்காக இறைவனின் பெயரில் செயற்கையாக உருவாக்கியதுதான் ஜாதிக் கோட்பாடுகள் என குருதேவர் உணர்ந்திருந்தார். இந்த மூடப்பழக்க வழக்கத்திற்கு ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். கண்ணால் பார்த்தால்கூட தீட்டு எனக் கருதப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை, முடிந்த அளவிற்கு மேம்படுத்த முற்படுவதுதான் குருதேவரின் அடுத்த திட்ட மாக இருந்தது.

முதலாவதாக திருவடிகள் பிரதிஷ்டை செய்து, அன்னாரின் சுயக்கட்டுப்பாட்டில் இயங்கும் எல்லா கோயில்களிலும் அவற்றுடன் இயங்கும் கல்விக் கூடங் களிலும் ஜாதி மத பேதமின்றி அனைவருக்கும், விசேஷ மாக ஹரிஜனங்களுக்கும் சுதந்திரமாகப் பிரவேசிக்கவும் வழிபாடு நடத்தவும் வசதி ஏற்படுத்தினார். இந்த சந்தர்ப்பத்தில் நெய்யாற்றின்கரை எனும் ஊரில் உள்ள ஊரூட்டம்பலத்தில் இருந்து பள்ளிக்கூடத்தில் தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சார்ந்த புலயர்களையும் பள்ளியில் சேர்த்து கல்வி அளிக்கவேண்டும் என கோரியிருந்தார்.

அதனை மறுத்த சவர்ணர்கள் புலயர்களை அடித்து மிகவும் துன்புறுத்தினார்கள். இதனை அறிந்த குருதேவர் உடனடியாக அன்று அங்கு சென்று அவர்களுக்கு தேவையான உதவி புரிந்து மனத்தைத்தேற்றினார். பின்னர் புலய வாலிபர்களை அருவிப்புறத்திற்கு வரவழைத்து அவர்களின் பிற்கால முன்னேற்றத்திற்கான முழுப்பொறுப்பும் தாமே மேற்கொண்டார். காலப்போக்கில் புலயர்களின் வலுபெருகியது. ஸ்ரீ அய்யன்காளியும் குருதேவரும் யோசனை செய்து அந்த சமூகத்தவர்களை வலுவடையச் செய்தனர்.

திருவடிகள் செங்ஙன்னூர், சங்ஙனாசேரி ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்த நாட்களில், ஸ்ரீதரஸ்வாமிகளின் ஆசிரமத்தில் ஒருநாள் ஓய்வு எடுத்தார். அன்று அந்த ஊரைச் சார்ந்த புலய வாலிபர்கள் பங்கேற்ற ஒரு கூட்டம் நடத்தினார். அதில் புலய மாணவர்களை மேடையில் அமரச் செய்தார். அவர்களில் புத்திக் கூர்மையுள்ள ஒரு மாணவனைச் சொற்பொழிவு நிகழ்த்த குருதேவர் கோரினார். அந்த வாலிபன் உற்சாகத்துடன் மேடையில் எழுந்து நின்று "பிரம்மஸ்ரீ நாராயண குருஸ்வாமிகளைத் தரிசிக்கக் கிடைத்த வாய்ப்பு எனது வாழ்நாளில் நான் பெற்ற பெரும்பேறு ஆகும். அன்னார் நீடூழி வாழ்க" என சொற்பொழிவு நிகழ்த்தினான். கூட்ட முடிவில் திருவடிகள் அங்கிருந்து பயணமானபோது அன்று சொற்பொழிவு ஆற்றிய புலய வாலிபனையும் உடன் அழைத்துச் சென்றார். இருவரும் செங்ஙன்னூரிலுள்ள ஒரு குடும்ப பக்தரின் வீட்டில் ஓய்வு எடுத்தனர். சற்றுநேரம் கழிந்தபின் உணவிற்கு வேளை வந்தது. குருதேவர் அந்தப் புலய வாலிபனுடன் அந்த வீட்டின் முன்பக்கமுள்ள வராந்தாவில் எல்லோரும் காணும் வகையில் உணவு அருந்தினார். இந்தச் சம்பவம் அன்று அங்கு கூடி இருந்த மக்களுக்கு அதிசயமும் குருதேவரின் அன்பு பாராட்டும் மனப்பான்மையும் கண்டு அவர்பால் மதிப்பு ஏற்பட்டது.

இது போன்ற செயல்களின் இறுதி முனைப்புப் பணி சிவகிரியில் நடைபெற்றது. அந்த நாட்களில் குருதேவர் சிவகிரியிலுள்ள தனது ஆசிரமத்தில் பறையர் சமூகத்தைச் சார்ந்த சில குழந்தைகளை வளர்த்து வந்தார். அவர்களுக்கு கல்வியுடன் தினமும் ஆற்றவேண்டிய தர்மங்கள், கோயில் வழிபாடு, தர்மபஞ்சகம், சுத்தி பஞ்சகம் ஆகியவைகளை கற்றுத் தரவும், அவற்றை கடைபிடிக்க வைக்கவும் செய்தார். அவர்கள் தினமும் இறைவழிபாடு செய்வதற்கு வேத தத்துவங்கள் அடங்கிய "தைவ தசகம்" எனும் பாடலை குருதேவர் இயற்றி கற்பித்தார். சிவகிரியில் மிகவும் தூய்மையான சூழ்நிலையில் வளர்ந்து வந்த அந்த பறையர் குழந்தைகள் பார்வைக்கு பிராமணர்கள் போன்று தோன்றினர். சமையல் கலையிலும் அவர்கள் திறமை பெற்றிருந்தார்கள். அப்போது ஆலுவா அத்வைதாசிரமத்தில் உள்ள சமஸ்கிருத பள்ளிக்கூடத்தில் பயின்றிருந்த மாணவர்களில் மிகவும் உயர்ந்த பண்பாளனாக திகழ்ந்தவன் ஒரு புலய வகுப்பைச்சார்ந்த டி. டி. கேசவசாஸ்திரியாக இருந்தார். அன்னார் அப்போது இருந்த சட்டமன்றத்தின் ஒரு உறுப்பினராகவும் அதன் துணைச் சபாநாயகராகவும் ஆவதற்கு முடிந்தது.

எந்த சமூகமாயினும் அவர்களின் பிற்பட்ட நிலைக்கு ஏற்றவாறு முன்னேற்றம் ஏற்படச் செய்வதற்கு அவர்களுக்குக் காலத்திற்கேற்ற கல்வியும் பொருளாதாரமும் கிடைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டால், சமூகத்தில் அவர்களின் துயர்களுக்கு ஒரு முடிவு ஏற்படுமென்பது உறுதியாகும். இத்தகு முன்னேற்றத்திற்கு, களங்கமின்றி அயலானுக்கு நன்மை புரிய நல்லெண்ணம் படைத்த சமூகம் இருந்தால் மட்டுமே இது கைக்கூடும். சமூக முன்னேற்றத்திற்கு இவ்வழியில் கர்மம் புரிந்து வழிநடத்தினார் ஸ்ரீ நாராயண குருதேவர்.

## மது விலக்கு மற்றும் தீண்டாமை ஒழித்தல்

முதிர்ந்த அனுபவம்பெற்ற மகாத்மாக்கள், மனிதரான நம்முடைய நன்மை தீமைகளைக் காண்பித்து நன்மையான

கர்மங்களை மட்டும் செய்யவும், தீமைகள் அல்லது தவ றான வழிகளைப் பின்பற்றாமல் இருக்கவும் அன்பாய் புத்திமதி கூறுவார்கள். ஆனால் மனிதனின் மனத்தில் நன்மை அல்லது நற்குணங்கள் செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்படாதவரை நேர் வழிக்கு செல்வான் என்று கூற முடியாது. நினைவுகள் நேர் வழிக்கு செல்ல வேண்டு மானால் மனம் பிரமை ஏற்படாதவாறு வளர்ச்சி ஏற்பட வேண்டும். அப்போதுதான் மகாத்மாக்களின் உலகம் உய்வதற்கான முற்போக்குச் செயல்கள் சமூகத்தில் பிரதி பலித்து நற்பயன்கள் ஏற்படுத்தும். அதைப்பற்றி தீவிர மாக யோசனை செய்த பின் தான் குருதேவர் 1921-ம் ஆண்டு தனது ஜயந்தி திருநாளில் மதுவிலக்கு பற்றிய தனது அருள்மொழிகளை உலக மக்களுக்கு அருளினார். ''மது அது விஷம். அதனைத் தயாரித்தல் கூடாது. வழங்கல் கூடாது; அருந்தல் கூடாது'' என்று.

அந்த நாட்களில் இந்தியன் தேசிய காங்கிரஸின் கொள்கை நிரலிலும் மகாத்மா காந்தி அடிகள் மது விலக்கை உட்படுத்தி இருந்தார். அதன் தீவிரச் செயல் வீரராகத் திகழ்ந்தார் திரு. டி. கெ. மாதவன் அவர்கள். அன்னார் குருதேவரின் சீடப் பிரமுகர்களில் ஒருவராக இருந்தார். ஸ்ரீ நாராயணகுரு, மகாத்மா காந்தி மற்றும் டி. கெ. மாதவன் ஆகியோரின் மதுவிலக்குக் கொள்கை ஒன்றாக இருந்ததால், மதுவிலக்கை அமுல்படுத்துவதில் நல்ல பயன் கிடைக்க வழி வகுத்தது. மனித சமூகத்தின் முன்னோடிகளே மகாத்மாக்கள், அவர்கள் வழங்கும் புத்திமதிகளைப் பின்பற்றுவது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். தனி மனிதன் சீர்திருந்தாமல் சமூக மாற்றம் ஏற்படாது என்பது உண்மை அன்றோ !

இந்த நாட்களில் மதுவிலக்கைப் போன்று மிகவும் முக்கியமாக இருந்த மற்றொரு பிரச்னை தீண்டாமை ஒழிப்பு. 1924-ல் நடந்த வைக்கம் போராட்டம் தீண் டாமை ஒழிப்புக்கான தீவிர நடவடிக்கையாக இருந்தது.

அதற்கு திரு. டி. கெ. மாதவன் அவர்கள் முனைப்புடன் ஈடுபட்டார். வைக்கம் சிவன் கோவில் சுற்றியுள்ள சாலையில் செல்ல ஈழவ குலமக்கள் தீண்டப்படாதவர்கள் என ஆணை வழங்கி அப்போதைய அரசாங்கம், அவர் களுக்கு அனுமதி மறுத்திருந்தது. இதுவே வைக்கம் போராட்டத்திற்கு முக்கிய காரணம். அப்போது இருந்த பிற்போக்கு மனம் படைத்த மக்கள், அரசுக்கு உறு துணையாக இருந்தனர்.

பொது மக்களிடமிருந்து வசூல் செய்த வரிப்பணத் தினால் உருவாக்கப்பட்ட சாலைகளில் நடந்து செல்வ தற்கு எல்லா மக்களுக்கும் உரிமை உண்டு என்ற தத்து வத்தின் அடிப்படையில், அன்றைய அறப் போராட்ட வீரர்கள் தீவிரமாகப் போராடினர். ஆனால் காலத்திற்கு ஏற்றவாறு ஏற்பட்ட சமூக போராட்டங்களின் நியாய மான முறையீடுகளையும் அறிவுசான்ற யோசனைகளை யும் தடைசெய்ய இயலாமல் 1903-ல் அரசும் பிற்போக் காளர்களும் வாபஸ் பெற்றனர். ஸ்ரீ நாராயண குரு தேவரின் நல்லாசியும், அருளும், மகாத்மா காந்தி அடி களின் முன்னிலையும், டி. கெ. மாதவன் அவர்களின் அஞ்சா நெஞ்சம் கொண்ட முயற்சியும் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் வெற்றியை ஈட்டிட உதவியது. பகுத்தறிவுத் தந்தை ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் வைக்கம் சென்று குருதேவருடன் தோளோடு தோள் நின்று முனைப்புடன் போராடினார். குருதேவரின் சமூக சீர்த்திருத்த திட்டங்கள் மிகவும் கவர்ந்தது. தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்தில் சிறை சென்றார். போராட்டம் வெற்றி பெற்றது. வைக்கம் வீரர் எனப் புகழ் பெற்றார்.

இந்தக் காலத்தில் கோவில்களில் வழிபாடு செய்ய சுதந்திரம் கிடைக்க அன்றைய சுதந்திரப் போராட்ட வீரர்களாக இருந்த திரு. சி. வி. குஞ்சுராமன், திரு. கெ. அய்யப்பன், S.N.D.P. யோகம் செயலராக இருந்த திரு.

என். குமாரன் ஆகியோர் உண்மையுடன் முயன்று வந்தனர். சமூகத்தில் தாண்டவமாடியிருந்த சம்த்துவ மின்மையை ஒழிப்பதற்கு மகான் ஸ்ரீ நாராயண குருதேவரின் யோசனைகளும் அறிவுரைகளும் வெல்ல முடியாத ஒரு சக்தியாக விளங்கியது என்பது நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

உலக மகாகவிஞர் ஸ்ரீ ரவீந்திர நாத தாகூர், மகாத்மா காந்தி அடிகள், ஸ்வாமி சிரத்தானந்தா ஆகியோர் இக்காலத்தில் சிவகிரிக்கு வருகை தந்து குருதேவரை தரிசித்தனர். 1922-ம் ஆண்டு ஸ்ரீ தாகூர் அவர்கள் அன்றைய திருவிதாங்கூர் வரும்போது குருதேவர் சிவகிரியில் ஓய்வு பெற்று வந்தார். திரு. தாகூர் சிவகிரியில் உள்ள வைதீக மடத்தில் வந்து சேர்ந்த நேரமும் குருதேவர் தியான அறையிலிருந்து வெளியே வந்த நேரமும் சரியாக இருந்தது. குருதேவர் கவிஞர் பெருமானை வரவேற்று விருந்து உபசரணைகள் செய்து, பூஜைக்குப் பின் இருவரும் அத்வைத வேதாந்தம் மற்றும் இதர விஷயங்களைக் குறித்து உரையாடினர். சிவகிரி தரிசனம் முடிந்து திரும்பும் போது ஸ்ரீ தாகூர் இவ்வாறு எழுதி வைத்தார். ''நான் உலகில் பல இடங்களுக்குப் பயணம் மேற் கொண்டிருக்கிறேன். அப்போது பல சித்தர்களையும் மகரிஷிகளையும் தரிசிக்கும் பேறு கிட்டியது. ஆனால் மலையாளத்தில் ஸ்ரீ நாராயண குருவை விடச் சிறந்தவரையோ அல்லது அன்னாருக்கு இணையான ஒரு மகா ஞானியையோ நான் எங்கும் பார்த்ததில்லை. ஏகாந்தத்தின் அழிவற்ற நெடுவானில் பதித்துள்ள அந்த மகானின் யோகக் கண்களும், சுயமாக தெய்வீக சைதன்னியம் ஒளிர்விடும் அன்னாரின் முகதேஜஸும் என்னால் ஒருபோதும் மறக்க இயலாது''.

1925-ம் ஆண்டு குருதேவரைத் தரிசிக்க தேசப் பிதா மகாத்மா காந்தி அடிகள் சிவகிரிக்கு வருகை தந்தார். அந்த சமயம் வைக்கம் அறப் போராட்டம் நடந்து

கொண்டிருந்தது. காந்திஅடிகள் வைக்கத்திலுள்ள போராட்ட அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தார். அறப் போராட்டம் பற்றிய விவரங்களை விசாரித்தறிந்த பின்னர், திருவனந்தபுரம் சென்று அன்று மாநிலத்தில் ஆட்சி புரிந்து வந்த ரீஜன்ட் இளவரசியைச் சந்தித்தார். அதற்குப் பின்னர் காந்தி அடிகள் சிவகிரி விஜயம் செய்தார். இரண்டு மகாத்மாக்களின் சந்திப்பு ஏற்பட்ட அந்த நாள், ஒரு சுப தினமாக இருந்தது. சிவகிரியில் காந்தியடிகள் இரண்டு நாட்கள் தங்கி குரு தேவருடன் பேச்சுகள் நடத்திய பின், மகிழ்ச்சி ததும்பிய மனத்துடன் அங்கிருந்து திரும்பினார். குருதேவருடன் தமக்கு ஏற்பட்ட சந்திப்பை பற்றி காந்தியடிகள் இவ்வாறு எழுதிவைத்துள்ளார். ''எழில்மிகு திருவிதாங்கூர் ராஜியத்தில் வந்த போது புண்ணிய ஆத்மாவான ஸ்ரீ நாராயண குரு ஸ்வாமிகளை தரிசிக்கக் கிடைத்த அரிய வாய்ப்பினை எனது வாழ்க்கையின் பெரும் பேறாக எண்ணுகிறேன். குருஸ்வாமிகளின் மகத்துவத்தைப் பற்றி ரீஜன்ட் இளவரசி அம்மையாரும் என்னிடம் கூறினார்கள்''.

அதிகாரம் VI

# குருதேவரும் கோயில் நிர்மாணித்தலும்

மானிட வாழ்க்கை என்பது விவகாரங்கள் நிறைந்த பிரச்னைகளின் கூட்டமாகும். ஒருவரின் அன்றாட வாழ்க்கையில் ஏராளமான வாழ்க்கைப் பிரச்னைகள் தோன்றுகிள்றன. அவற்றிற்கெல்லாம் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப மனிதன் செயல்படவேண்டும். அதற்கு முடியாத விவேகமற்ற மனிதன் வாழ்க்கையில் பல இன்னல்களையும் சந்திக்கின்றான். வெளி உலக வாழ்க்கையில் மூழ்கி உழலுகின்ற மனிதனுக்கு, சமயத்தில் திருப்தி ஏற்படாமல் போகலாம். வாழ்க்கையில் கொஞ்ச நேரமாவது திருப்தியான மனம் ஏற்படும் மனிதனுக்கு அமைதியும், ஆனந்தமும் ஏற்படும். இவ்வாறு ஏற்படும் அமைதியும், ஆனந்தமும் மனதின் நற்குணங்களாகும். இந்த நற்குணங்கள் மனித மனத்திலுள்ள முரட்டுக் குணங்களை ஒழித்தால் மட்டுமே ஏற்படும். மனித வாழ்க்கையின் மகிமையை எண்ணி தீய எண்ணங்களை உள்ளத்திலிருந்து அகற்றி, சற்றும் கலங்கமற்ற நற்குணத்தை ஒளிரவிடுவதற்காகவே, தினசரி வெளி உலக வாழ்க்கையில் இருந்து சற்று அகன்று கொஞ்ச நேரமாவது இறைவனைப் பற்றி சிந்திக்க வேண்டும் என கூறப்படுகிறது. மனித மனதில் ஏற்படும் தீய எண்ணங்களில் இருந்து விடுதலைப் பெற்று அதில் தூய எண்ணங்களை ஏற்படுத்த விசேஷ ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ஸ்ரீ நாராயண குருதேவரின் கோவில் நிர்மாண நோக்கமும் வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது என சிந்தனையாளர்களுக்குப் புலப்படும்.

கோயில்கள் கட்டுவதற்கு, பழங்கால கோவில்களை நிர்மாணிப்பதற்கு செலவிடப்படும் பணச்செலவினை ஒருபோதும் குருதேவர் ஒப்புக்கொள்ளவில்லை. கோவில்கள் அழகான அமைப்புகளாகத் திகழ வேண்டும். அவற்றின் பருமனைவிட மன அமைதியை வழங்கும் அழகினை கோவில்கள் ஏற்படுத்த வேண்டும். அங்கு பக்தர்கள் வந்து ஓய்வு பெறவும், கற்றறியவும், சொற்பொழிவு நிகழ்த்தவும் வசதி இருக்கவேண்டும். கோவில்களிள் அருகாமையில் கல்விக்கூடங்களும், தோட்டங்களும் ஏற்படுத்தி மாணவர்களுக்கு தொழில் கள் மேற்கொள்ள ஆவலைத் தூண்டும் வகையில் அவை அமைக்கப்பட வேண்டும். கோவில் வழிபாடு செய்ய வரும் பக்தர்களுக்கு குளிப்பதற்கு கோவில் குளம் அல் லது நீர் ஊற்று வேண்டும். அதன் அருகாமையில் ஒரு பூந் தோட்டமும், ஒரு நூல் நிலையமும் அமைத்தல் வேண்டும். கோவில்களில் வழிபட வரும் பக்தர்களுக்கு சற்று நேரம் நூல் நிலையத்திற்குச் சென்று அவர்கள் விரும்பும் புத்த கங்களை படிக்க வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு மாலை வேளைகளில் கோவில் தரிசனமும் அறிவியலும் பெற்று வீட்டுக்கு திரும்பும்போது அவர்களை அறியாமலேயே மகிழ்ச்சி ஏற்படும். இவ்வாறான வாழ்க்கை நடைமுறை, மனதிற்கும், உடலுக்கும் ஆரோக்கியம் ஏற்படுத்தும். இதுபோன்ற கருத்துக்கள் கர்மயோகியான குருதேவரால் அருளப்பெற்றவையாகும்.

பக்தர்கள் கோவில்களில் வழிபாடு மற்றும் நன் கொடையாக வழங்கும் நிதியை ஏழைகளுக்கு பயன் ஏற் படும் வகையில் செலவிடப்படவேண்டும் என குருதேவர் விரும்பினார். கோவில்கள் சுத்தமாக இருந்தால் மட் டுமே அங்கு வரும் பக்தர்களுக்கு தூய்மையான எண் ணங்கள் ஏற்படும். நல்ல எண்ணம் உள்ளவர்கள் மட் டுமே நன்மையான செயல்கள் செய்வார்கள். காய சிந்

தனையாளர்களுக்கு மட்டுமே இறைவன் நினைவு ஏற் படும். கோவிலில் ஒரு சிலையை பிரதிஷ்டை செய்யப் பட்டிருப்பதால் அங்கு வழிபட வருபவர்கள் அதனைப் பற்றி மட்டுமல்ல தங்கள் மனதில் கொள்வது, இறை வனைப் பற்றிய நினைவாகும். அவ்வாறு எண்ணம் பெருகி வருமளவிற்கு, மனதிற்கும் சரீரத்திற்கும் தெம் பூட்டி நற்குணங்கள் உருவாக வழிவகுக்கும்.

நூல் நிலையங்கள் அமைக்கும்போது, அனைத்து மதங்களின் நூல்களும் திரட்டிப் பேணுவதற்கும், அவற் றைப் படிப்பதற்கும் நாம் அக்கறை காட்ட வேண்டும். ஸ்ரீ நாராயண குருதேவரின் கோவில் நிர்மாண நோக்கம் இது போன்ற கொள்கை நோக்குடையதாக இருந்தது. கோவில் ஒரு ஆராதனை செய்யும் இடமாக மட்டும் இருத்தல் கூடாது. அது பக்தர்களுக்கு அறிவியல் மைய மாகவும் திகழ வேண்டும். மனிதனின் எல்லாவித வளர்ச்சிக்கும் அவை பயன்பட வேண்டும். இது போன்ற உயர் ஊட்டம் அளிக்கும் திட்டங்கள் மேலும் உருவாக்க வேண்டியுள்ளது. மனித சமுதாயத்தின் ஒரு பகுதி மக் களை சவர்ணர்கள் என தரக்குறைவாக நடத்தி அடக்கி ஆட்சி புரிந்த அந்தக் காலத்தில், கேரளாவின் பெரும் பகுதி மக்களால் போற்றி வணங்கப்பட்ட ஸ்ரீ நாராயண குருதேவர் சவர்ண சமுதாயத்தின் அறியாமை மற்றும் மூடப்பழக்க வழக்கங்கள்முன் அறிவொளி பரப்பும் கதி ரவனைப் போன்று விளங்கினார்.

குருதேவரின் முதலாவது கோவில் பிரதிஷ்டை 1888-ம் ஆண்டு அருவுப்புரத்தில் நிகழ்ந்தது. பின்னர் பக்தர் களின் வேண்டுகோளுக்கு இணங்க திருவடிகள் ஏராள மாக பிரதிஷ்டைகள் நடத்தினார்கள். அவற்றில் வர்க் கலை சிவகிரியில் உள்ள சாரதா கோவில், முட்டைக் காடு, குன்னம்பாறை சுப்பிரமணிய கோவில், ஆலுவா அத்வைதா பிரம்மம், சமஸ்கிருத பாடசாலை, கண்

ணணூர், கோழிக்கோடு, திருச்சூர், மங்களாபுரம், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சென்னை ஆகிய ஊர்களில் அமைக்கப் பெற்ற கோயில்களும், ஆசிரமங்களும் முக்கியம் வாய்ந்தவையாகும்.

நாளடைவில் குருதேவருக்கு ஏராளமான சீடர் செல்வங்கள் ஏற்பட்டது. அவர்களில் பிரமுகர்களான, ஸ்ரீ போதானந்த ஸ்வாமிகள், சிவலிங்க ஸ்வாமிகள், சங்கீத ஸ்வாமிகள், சாந்தலிங்க ஸ்வாமிகள், வைரவன், சாந்தி, கோவிந்தானந்த ஸ்வாமிகள், சச்சிதானந்த ஸ்வாமிகள், சங்கரானந்தா, பூர்ணானந்தா, மாதவானந்தா, நரசிங்கானந்தா, வித்யானந்தா, சத்யவிரத ஸ்வாமிகள், சைதன்ய ஸ்வாமிகள், ஸ்வாமி தர்ம தீர்த்தர், நடராஜ குரு, ஸ்ரீ நாராயண தீர்த்தர், குமார ஸ்வாமி, ஸ்வாமி அத்மானந்தா போன்ற பிறவிப் பெருமகனார்களும், திரு. சி.வி. குஞ்ஞீராமன், டி.கெ. மாதவன், சகோதரன் ஐயப்பன், ஏ.கெ. கோவிந்தராஜ் போன்ற மாபெரும் சீடர் செல்வங்களும் ஸ்ரீ நாராயண குருதேவருக்கு இருந்தார்கள்.

குருதேவரின் வாழ்நாளில் தலைச்சேரியில் வைத்து மூர்க்கோத்து குமாரன் அவர்களின் தலைமையில் 1926-ம் ஆண்டு குருதேவரின் உண்மைச் ஸ்வரூபத்தில் ஒரு பஞ்சலோகச் சிலை செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த ஆண்டு புரட்டாசித் திங்கள் விஜயதசமி நாளில் ஸ்ரீ நாராயண குருதேவரின் வாரிசாக ஸ்ரீ போதானந்த ஸ்வாமிகளை ஏராளமான பக்தர்கள், துறவிகள், பிரம்மச்சாரிகள் முன்னிலையில் சிவகிரி சாரதா கோவில் முன் திருவடிகள் வருகை தந்து அங்கு நிறுவப்பட்டிருந்த மண்டபத்தில் வைத்து அபிஷேகம் செய்தார். அந்த ஆண்டு முதலில், அன்று திருவாங்கூர் நாட்டை ஆட்சி புரிந்த திவான் வாட்ஸ் என்பவர் குருதேவரை சிவகிரியில் வந்து தரிசித்தார்.

குருதேவரின் வெளிநாட்டுப் பயண காலத்தின் முதற் பகுதியில் ஒரு முறை ஸ்ரீ சத்தியவிரத ஸ்வாமிகளுடன் இலங்கை சென்றிருந்தார். அன்று இலங்கையில் உள்ள தனது பக்தர்களைத் திரட்டி, அவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு, ''விஞ்ஞானோ தயம்'' என்ற பெயரில் ஒரு சபையை அமைத்து இயக்க தனது சீடர்களில் பிரமுகரான ஸ்ரீ சத்யவிரத ஸ்வாமி களுக்கு தேவையான அறிவுரைகள் வழங்கினார். அதன் விளைவாக காலப்போக்கில், இலங்கையில் ஒரு ஆசிர மம் ஏற்பட்டது. இந்த ''விஞ்ஞானோதய'' சபையின் அங்கத்தினர்கள் முயற்சியால் 4,000/- ரூபாய் பெறு மானமுள்ள நிலம் கிரையமாக குருதேவருக்கு காணிக் கையாக்கினார். இந்த இடத்திற்கு ''ஸ்ரீ நாராயணபுரம்'' எனும் பெயர் வழங்கினார். 1926-க்குப் பின் தமது இரண்டாவது வெளிநாட்டுப் பயணத்தின்போது, மீண்டும் ஒருமுறை இலங்கை விஜயம் செய்தார். அப் போது இலங்கை விஞ்ஞானோதய சபையைச் சார்ந்த பக்தர்கள் அந்த ஸ்தாபனம் ஏற்படுத்திய தரை சம்பந்த மான தஸ்தாவேஜுகளை மகிழ்ச்சியுடன் குருதேவர் சன் னிதியில் காணிக்கை வைத்தனர். இதனைக் கண்ணுற்ற குருதேவர் இவ்வாறு அருளினார்: ''நமக்கு பூமி எதற்கு? இதனால் நமக்கு என்ன பயன்? இது போன்ற உடமை களினால் சண்டைகளும், தகராறுகளும் எப்போதும் உண்டாகும். நிலாவையோ, நட்சத்திரங்களையோ எழுதி வைத்தால் எதுவும் கிடைக்காவிட்டாலும் ஆறு தலாவது நமக்கு ஏற்படும்.''. எனவே அந்த ஸ்தாபனத் தையும், சொத்துடமையையும் மக்கள் நன்மைக்கான ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அவர்களை செயல் வீரர் களாக திகழச் செய்ய அந்த சபா தலைவர்களிடம் ஆணையிட்டார்.

## குருதேவரும் சிவகிரி புனித யாத்திரையும்

1928-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 15-ம் நாள் குரு தேவர் கோட்டையம், நாகம்படம் சிவன் கோவிலில் வந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்த வேளை யில் திரு. டி.கெ. கிட்டன் ரைட்டரும், வல்லபசேரி கோவிந்தன் வைத்தியரும் மற்றும் சில பக்த நண்பர்களும் குருதேவ சன்னதியில் வந்தார்கள். சிவகிரிக்கு ஆண் டுக்கு ஒரு முறை யாத்ரீகர்கள் வந்து செல்ல தேவையான உத்தரவும் ஆசியும் வழங்கி, அது எவ்வாறு நடக்க வேண் டும் என்ற விதிமுறையினை கற்பிக்குமாறும் திருவடி களிடம் பணிவுடன் வேண்டினர் .

முக்கால ஞானியாக இருந்த குருதேவர் அவர்களிடம் அது தொடர்பாக சில கேள்விகள் கேட்டு மனநிறைவு பெற்ற பின், சிவகிரி புனித யாத்திரை மேற்கொள்ள அனுமதி வழங்கினார். அதற்குத் தேவையான அறிவுரை களும், தேதியையும் திருவடிகளே அருளினார்கள். திரு. டி.கெ. கிட்டன் ரைட்டர் குரு ஸ்வாமிகளின் அறிவுரை களை எழுதி எடுத்தார்.

யாத்ரிகர்கள் சிவகிரியில் வந்து சேர்வதை, வெள்ளை யர்களின் ஆண்டுத் துவக்கத்தில் ஆகட்டும், ஜனவரி முதல் தேதி அது நமது கணக்கில் மார்கழி மாதம் 16, 17 தேதிகளாக இருக்கும். அது நல்லது. நல்ல வேளை. யாத் ரீகர்கள் பத்து நாட்கள் விரதம் இருந்து புத்தபெருமா னின் ஐந்து தூய்மைகளை கடைப்பிடித்தால் போதும். உடல் தூய்மை, உணவு தூய்மை, மனத் தூய்மை, வாக் குத் தூய்மை, கர்மத் தூய்மை ஆகிய பஞ்ச சுத்திகள் ஆகும்.

''வெள்ளாடை குடும்பத்தாருடையதாகும். காவி உடை துறவிகளுடையது. கருப்பு ஆடையும் கரிப்பட்டவும் சபரிமலை யாத்ரிகர்களுடையது. சிவகிரி யாத்ரீகர் களுக்கு மஞ்சள் ஆடையாக இருக்கட்டும். ஸ்ரீ கிருஷ்ண ருடையதும், ஸ்ரீ புத்தபெருமானுடையதும் ஆன ஆடை. அது நல்லது. நன்றாக இருக்கும். சிவகிரி யாத்ரீகர் களுக்கு கட்டுகள் சுமந்து வரத்தேவையில்லை. செலவிற் கான பணம் மட்டும் வைத்திருக்க வேண்டும். யாத்திரை யின்போது சுத்தமான உணவு கிடைக்கும். சிவகிரியில் உணவு அளிக்க தேவையான வசதிகள் ஏற்படும்.''

குருதேவர் மீண்டும் தொடர்ந்து இவ்வாறு அருளி னார். ''தாடி வளர்க்கத் தேவையில்லை. உத்திராட்சம் கழுத்தில் அணிய வேண்டாம். வண்டியில் யாத்திரை செய்யலாம். நடந்துதான் வரவேண்டும் என்று நினைப் பவர்கள் அவ்வாறே செய்யட்டும். யாத்ரீகர்கள் சிக்கன மாக செலவு செய்ய வேண்டும். மஞ்சள் ஆடை என நாம் கூறியதற்கு, மஞ்சள் பட்டு வாங்க ஒருவரும் முன்வரக் கூடாது. கோடித் துணி கூட தேவையில்லை. அன்றாடம் பயன்படுத்தும் வெள்ளை ஆடையை மஞ்சளில் தோய்த்து உடுத்திய பின் சலவை செய்து மீண்டும் பயன்படுத்த லாம். யாத்திரை ஆடம்பரம் அற்றதாக இருத்தல் வேண்டும். எளிமையாக இருக்க வேண்டும். இறை ஸ்தோத்திரங்கள் பக்தியுடன் சொல்வது நல்லது. புனித யாத்திரை எனும் பெயரில் பகட்டு ஆடம்பரங்களும், வீண் ஜம்பங்களும் ஏற்படுத்தி ஸ்தாபனத்திற்கு ஒரு போதும் களங்கம் ஏற் படுத்தலாகாது. தேவையின்றி ஒரு காசுகூட செலவு செய்யக் கூடாது. நாம் எல்லோரும் பொருள் ஈட்டலாம். ஆனால் அதனை முழுவதுமாக செலவு செய்கிறோம். சிலர் இதற்காக கடன்கூட வாங்குவார்கள். அது தேவை யில்லை. பொருளாதாரத்திலும், தூய்மையை கடைப் பிடிப்பதிலும், கல்வியிலும், சமூகத்தின் பிற்பட்ட நிலை மாற வேண்டும். அதை மாற்ற வேண்டும்.

குருதேவர் சற்று யோசித்த பின் மீண்டும் தொடர்ந் தார்: ''ஆண்டுக்கொருமுறை கொஞ்சம் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மஞ்சளாடை அணிந்து பயணம் மேற்கொண்டு சிவகிரியில் வந்து சுற்றி நடந்து குளித்துப் புசித்து பணத்தை விரையம் செய்து வீட்டுக்குத் திரும் பினால் என்ன பலன்? ஒன்றுமில்லை. வீண் செலவும், தொந்தரவும்தான். அது கூடாது. எந்தவொரு செயலுக் கும் ஒரு நோக்கம் அல்லது கொள்கை வேண்டும்.''

இவ்வாறு இயம்பியபின் தனது கை விரல்களை ஒவ் வொன்றாக மடக்கி எண்ணிக்கொண்டு, கீழ்க் குறிப் பிட்ட எட்டு விஷயங்களை எழுதி வைக்க திரு. டி.கெ. கிட்டன் ரைட்டரிடம் கூறினார். 1. கல்வி. 2. சுத்தமாக இருத்தல். 3. இறைபக்தி. 4. சங்கம் அமைத்தல். 5. விவ சாயம். 6. வாணிபம். 7. கைத்தொழில். 8. தொழில் நுட்ப அனுபவம். இந்த விஷயங்களைப் பற்றி அறிஞர் கள் மற்றும் வல்லுனர்களைக் கொண்டு சொற்பொழிவு 'கள் யாத்திரீகர்கள் வரும் நாட்களில் நடத்தப்பட வேண்டும்.

குருதேவர் மீண்டும் தொடர்ந்து மக்கள் பொறுமை யுடன் இருந்து சொற்பொழிவுகளை செவி மடுக்க வேண் டும். கேட்டறிந்தவற்றை செயல்முறைப் படுத்த வேண் டும். அப்போதுதான் மக்களுக்கும், நாட்டுக்கும் முன் னேற்றம் ஏற்படும். வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு எடுத் துக்காட்டாக அமைக்க வேண்டும். புனித யாத்திரையின் முக்கிய நோக்கம் இதுவாக இருத்தல் வேண்டும். நாம் சொன்னதையெல்லாம் எழுதி எடுத்துவிட்டீர்களா? கிட்டன் ரைட்டர் ''எழுதினேன்'' என பதிலுரைத்தார். அப்படியானால் எழுதியவற்றை மீண்டும் படித்துக்காட் டுங்கள் என்றார் குருதேவர். ரைட்டர் முழுவதும் படித் தார். ஸ்வாமிஜி அதை கேட்டுக் கொண்டிருந்தார். முடி வில் ''நன்று.'' இவ்வாறு செய்ய வேண்டும். நன்மை உண்டாகும் என வாழ்த்துக் கூறி அருளாசி வழங்கினார்.

அதிகாரம் VII

# ஸ்ரீ நாராயண குருவும் ஒரே ஜாதியும்

மனிதனின் கர்மங்கள் அனைத்தும் அவனிடம் குடி கொண்டுள்ள குணங்களைச் சார்ந்திருக்கின்றன. இந்த குணங்கள் யாவும் மனிதனிடம் ஆட்கொண்டுள்ள உணர்ச்சிகளை சார்ந்திருக்கின்றது. இந்தப் பூவுலகில் நாம் காணும் அசையும், அசையா இயல்புகள் அனைத்தும் இயற்கையின் மாறுபட்ட உணர்ச்சி அசைவுகளின் சங்கமம் ஆகும். ஒவ்வொரு பொருளுக்கும் அவற்றின் குணநலன்களுக்கேற்ற மாறுபட்ட தோற்றம் ஏற்படுகிறது. எனினும் அவை அனைத்தும் அடிப்படையான ஒரே சக்தியின் மாறுபட்ட தோற்றங்களாகும். படைப்புக்கு முன் நாம் காணும் இந்த பிரபஞ்சம் புலன்களுக்கு அடிமையாக இருந்தது எனவும், அதனைத் தனது மாயா சக்தியால் ஒரு ஜால வித்தைக்காரன் போல் இறைவன் படைத்தான் எனவும் குருதேவர் கூறுகிறார். அவ்வாறு கண்ணால் காணப்படுகின்ற இந்தப் பூவுலகிலுள்ள ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்தால், அவை அனைத்தும் ஞானஸ்வரூபமான ஒரு சக்தியில் பிரிக்க இயலாமல் அமைந்துள்ளது எனக் காணலாம். இந்தக் கருத்துதான் பகவத்கீதையிலும் சொல்லப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனிடம் இவ்வாறு கூறுகிறார்: "அர்ஜுனா! என்னைவிட மேலானதாக வேறு எதுவுமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை. இப்பூவுலகில் உள்ள அனைத்துப் பொருட்களும், ஜீவராசிகளும் நூலில் கோத்த இரத்தினங்கள் போன்று என்னில் தங்கியுள்ளன."

ஸ்ரீ கிருஷ்ணன் இங்கு ஞானஸ்வரூபமாக இருக்கிறார். இவ்வுலகில் அந்த ஞானத்திலிருந்து மாறுபட்டதாக எதுவும் இல்லை. ஞானம் என்ற நூலில் கோர்த்த மாலையிலுள்ள மணிகள்தாம், இந்த பிரபஞ்சத்தில் காணப்படும் எல்லாம். பின் இரண்டு என்ற உணர்வு எங்கே உள்ளது? வேறுபட்ட உணர்வுகளால் நிறைந்திருந்தாலும் அவையனைத்தும் ஒன்றே. இந்த வாழ்க்கையின் உண்மையை புரிந்து கொள்ள முடியாத ஒரு மனித சமூகத்தை தான் குருதேவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மனித சமூகத்தில் ஒரு பகுதி மக்கள் * சவர்ணர்கள் எனவும், மற்றவர்கள் * அவர்ணர்கள் எனவும் கருதிவந்தனர். அவர்கள் மனிதர்களாக வாழ்வதற்கு உரிமையுள்ள மண்டலங்களில் சுதந்திரம் இன்மை எனும் சங்கிலியால் கட்டுண்டு இருக்கும் காட்சியை கண்டார் குருதேவர். மனிதர்கள் ஜாதியின் பெயரால் சமமின்மையை பாராட்டியிருந்தனர். ஜாதி என்றால் என்ன? எல்லாம் ஒன்றல்லவா. எந்த ஜாதியிலும் மனிதர்கள் உடம்பு, இரத்தம், தசை, கொழுப்பு இவற்றால் உண்டாக்கப்பட்டவர்கள்தாமே. அவனுடைய மனத்தில் ஏற்படும் உணர்ச்சிகள் அனைத்தும் உயிர் கொள்வது, ஒரே ஞான இந்திரியங்கள் மூலமாகத் தானே. உடலால் நடைபெறும் எல்லா வேலைகளும் ஜாதி வேற்றுமை என்ற மாறுபட்ட முறையிலா நடைபெறுகிறது? ஒரு போதும் இல்லை. மனிதர்களின் சரீரத்தர்மங்கள் அனைத்தும் ஒரே மாதிரியாகத்தான் நடைபெறுகிறது என்றால் பின் பல ஜாதிகள் எப்படி ஏற்பட்டது? ''மனிதனுக்கு ஜாதி ஒன்று மட்டுமே உள்ளது. பல ஜாதிகள் இல்லை'' என்ற குருதேவர் பொன் மொழி கவனத்திற் கொள்ளவேண்டும்.

* சவர்ணர்: உயர்ந்த குலத்தை சார்ந்தவர்கள். அவர்ணர்: தாழ்ந்த குலத்தை சார்ந்தவர்.

மனித சமூகத்தில் வெளிப்படையாக நிலைநாட்டப் படும் இந்த ஜாதி பேத எண்ணங்கள் அதனை அன்னி யரிடம் பரிவும், அன்புமில்லாத சுயநலமிகளின் ஆண வத்தால் உருவாக்கப்பட்டவை என குருதேவர் உணர்ந் தார்.

மனிதத் தன்மை உண்டாவது பிறவியால் அன்று. அது பலனை இச்சிக்காமல் இதயசுத்தி ஏற்படுத்துபவனுக்கு மட்டுமே கிடைக்கும் குணவிசேஷமாகும். அதனை உணர்ந்து எந்த நிமிடம் முதல் தெளிவு பெறுகிறானோ அந்த நேரம் முதல் அவனிடம் இருந்து வேற்றுமை உணர்ச்சி முற்றிலும் மறைந்துவிடும். ''நாம் அனைவரும் ஆத்ம சகோதரர்கள்'' என்ற ஸ்ரீ நாராயண குருதேவர் பொன்மொழிக்கு ஏற்ப செயல்படுவோம். அப்போது தான் மனிதனின் உயர்ந்த குணங்களை, அன்பு செலுத் தும் ஒரே மனித ஜாதியை நாம் காணமுடியும்.

''ஒரே ஜாதி ஒரே மதம், ஒரே கடவுள் — மனிதர்க்கு
ஒரே யோனி ஒரே ரூபம் வேற்றுமை எதுவுமில்லை
அதில்''

என்ற குருதேவரின் உலக சகோதாரத்துவ முழக்கம் மானிட ராசியின் தொடக்கம் முதல் இன்று வரை காணப்படும் அசைக்க முடியாத உண்மை ஆகும். எனி னும் மனிதர்களிடையே காலப்போக்கில் ஏற்படுகின்ற அறியாமையும் மூடப்பழக்க வழக்கங்களும், சமூக வாழ் வில் நிறவேற்றுஸ்மயும், சமத்துவமற்ற நிலையும் உரு வாக்கி உண்மை சத்தியத்தில் களங்கம் ஏற்படுத்தி வைதீ கத் தன்மை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறியாமையிலி ருந்து சமூகத்தைச் சீரமைக்க ஒரு கட்டுக்கோப்பான சமூக சக்தி ஏற்படவேண்டும். அவ்வாறான ஒரு சமூக பிரச்ச னைக்கு விதை விதைத்தார் ஸ்ரீ நாராயண குருதேவர்.

அன்னாரின் ஜாதிக் கொள்கை பொன்மொழி வாயிலாக சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டு மனிதர்களில் சமத்துவம் ஏற்படவேண்டும் என்பது மனித உள்ளத்தில் தளிர்விடும் எண்ணங்களுக்கு உகந்ததாகும்.

தனி மனிதனின் மனத்திலுள்ள உணர்வுகள் தூய்மையானதாகும்போது அவனது வாழ்கையும், அவன் சார்ந்துள்ள சமூகமும் தூய்மை அடையும். ஒரு சமூகத்தில் அநாகரிகச் செயல்கள் நிழலாடுகிறதென்றால் அதற்கு காரணம் மனித மனங்களில் வேரூன்றியுள்ள தீய எண்ணங்களாகும். மனிதனின் மனத்தால் ஏற்படும் எண்ணங்களுக்கேற்ப, உருவாகும் செயல்களுக்கு மட்டும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒருவனின் சிறுமை அல்லது பெருமையை நிர்ணயிப்பது அவனது செயல்களாகும். அறியாமையினால் ஏறபடும் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக செயற்கையாக உருவாக்கப்பட்ட ஜாதியை நாம் அரவணைக்க கூடாது. மாறாக மனிதனின் விசேஷ கர்மத்தின் மூலமாக அவன் பெற்ற பெறுதற்கரிய மனிதத் தன்மையை போற்றவேண்டும்.

இவ்வாறு சமத்துவமின்மையை குறித்து தம்மை உணர்ந்திருந்த குருதேவர் இவ்வாறு கற்பித்தார்: ''ஜாதி இல்லை. ஜாதி இருக்கிறது என்ற எண்ணம் மனிதனிடமிருந்து மாறவேண்டும். ஜாதியைக் குறிப்பிடும் பெயர்கள் பயன்படுத்தக் கூடாது. அதைத் தவிர நற்பெயர்கள் ஏராளம் உண்டல்லவா'' ஒருவன் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் வழங்க வேண்டும்.

இவ்வாறு கண்டு, தீவிரமாக யோசனை செய்து மன உறுதியுடன் ''மனிதன் ''ஜாதியைக் கேட்கக் கூடாது, ஜாதியை சிந்தனை செய்யக் கூடாது, ஜாதியைச் சொல்லக் கூடாது'' என குருதேவர் அருளினார். பின்னர்

தெரிந்து கொளளள வேண்டியது யாது? ஒருவருடைய பெயரும், ஊரும் தொழிலும் கேட்கலாம், ஜாதியை கேட்கக் கூடாது. ஒருவன் எந்த இனம் அல்லது ஜாதி என்பது அவனது உடம்பு தத்ரூபமாக காண்பிக்கிறது. அதனால் சிந்தனைத்திறனும் பார்வைத்திறனும் உள்ள எவருமே ஜாதியை கேட்கமாட்டார்கள். இதுபோன்ற போதனைகளை குருதேவரின் கவிதைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

பக்தியுள்ள எவருமே இறைவனை வழிபடலாம். அங்கு ஜாதி தேவையில்லை. ஏனெனில் இறைவன் அனைத்து ஜீவராசிகளிலும் சமபாவனையுடன் திகழ்கிறார். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என அங்கு வேறுபாடு இல்லை. எவர்கள் பக்தியுடன் இறைவனை வழிபடுகிறார்களோ அவர்களில் இறைவனும் இறைவன் அவர்களிலும் வாழ்கிறார் என்ற கீதை அருள்வாக்கு கவனத்தில் கொள்ள வேண்டும். அதைப்போன்று இறை சைதன்யம், புத்திக்கூர்மை பெற்றவர்களின் அறிவிலும் அருள் ஒளி வீசுபவர் ஒளியிலும் அனைத்து பூதராசிகளுடைய அழியா ஜோதியாகவும் ஒளிர்விடுகிறது. இந்த ஆத்ம உணர்வினை தனது அனுபவத்தில் தெரிந்த குருதேவர் துணிவுடன் அருவிப்புறத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்தபோது, நம்பூதிரிகளுக்கு அன்றி ஏனையோர்கு சிவபிரதிஷ்டை செய்ய உரிமை உண்டா? என கேட்டதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பதில் கூறியது, இந்த அனுபூதியை பெற்றதால் தான். இந்த அனுபவம் கர்மத்தினால் தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கச் செய்து அருட்சுடர் ஒளிர்விடும் ஜோதிஸ்வரூபமாக உருமாற்றம் பெற்று ''மனித சங்கமி தெண்ணுங்கால் ஒரே ஜாதியில் உள்ளதாம்'' என குருதேவர் அருளினார். அவ்வாறு மனித சங்கம் ஒரே ஜாதி எனவும் நாம் அனைவரும் அந்த ஜாதியில் உட்பட்ட சகோதரர்கள் எனவும் உள்ள

ஸ்ரீ நாராயண குருவின் ஏக ஜாதி அருட்போதனை, அனைத்துலக சகோதர உணர்வின் அடிப்படையில் அமைந்ததாகும்.

வேற்றியல்புள்ள இந்திய நாட்டிற்கு குருதேவரின் 'ஒரே ஜாதி' அறிவுரை ஆட்சி சம்பந்தமான அமைப்பினை உருவாக்க முற்றிலும் அடிப்படையாக திகழ்கிறது. இந்தியத் திருநாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பிறப்பால் சமபதவிக்கு உரிமை உள்ளவர் எனவும், அவர்கள் சுயேட்சையாக முன்னேறவும், வளரவும் நமது அரசியல் அமைப்பு உறுதி அளிக்கிறது என்றால் அதில் பொதிந்துள்ள தத்துவம் ஸ்ரீ நாராயண குருதேவரின் அனைத்துலக சகோதரத்துவத்தின் அடிப்படையாக இலங்கும் 'ஒரே ஜாதி' என்ற போதனையன்றி வேறு எதுவும் இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மனித மனத்தில் முளைவிட்ட இந்த தத்துவச்சுடர் காலப்போக்கில் சிந்திக்கும் திறன் படைத்தவர்களுக்கும், பெருந்தன்மை மனம் படைத்தவர்களுக்கும் ''ஒரே நாடு'' ''ஒரே மக்கள்'' என்ற சமதர்ம கொள்கையின் அடிப்படையில் ஒரு வருங்கால நாட்டினை உருவாக்க புத்துணர்ச்சி வழங்க வேண்டும் என விழைகிறோம்.

அதிகாரம் VIII

# குருதேவர் கண்ட ஒரே மதம்

மனிதனுக்கு மதநம்பிக்கை தேவையா? மதநம்பிக்கை இல்லையேல் வாழமுடியாதா? இதுபோன்ற கேள்விகள் மனித மனத்தில் எழுவதுண்டு. ஒரு நாட்டில் வாழும் மக்களின் முக்கியமான தேவைகள், உண்ண உணவு, உடுக்க உடை, படுக்க சொந்தமான ஒரு வீடு, சுதந்திரமாக கல்வி கற்க வசதிகள், தொழில் போன்றவைகளாகும். இவை அனைத்தும் அவ்வப்போது பெறமுடியாத நிலை மக்

களுககு ஏறபடின், அந்த நாடு அல்லது மக்கள் வறு மையை எதிர்கொள்ள வேண்டிவரும். மக்கள் தொகை பெருகுமளவிற்கு வாழ்கையின் தேவைகளும் பலவித மாக அதிகரிக்கும். அவற்றினை அடைய முடியாத சூழ் நிலை ஏற்பட்டால் மக்கள் மனஅமைதி அற்றவர்களாக காணப்படுவர். வாழ்கையின் அடிப்படைத்தேவைகளை அடையும் பொருட்டு அவர்கள் தங்கள் அன்றாட கடை மைகளில் கவனம் செலுத்துவார்கள். வாழ்க்கைக்கு பாதுகாப்பு இல்லாத மக்களுக்கு ஒரு போதும் நிம்மதி ஏற்படாது. அமைதி இழந்த மக்களிடம் மத தத்துவங் களைப் பற்றி சொன்னால் அவர்களுக்கு அது பலனளிக் காது.

மனிதனுக்கு மிகவும் முக்கியமானது அவனது வாழ்க்கை ஆகும். வாழ்க்கையின் அனைத்து முயற்சிகளிலும் ஓரள வாகிலும் திருப்தி ஏற்பட்டாலன்றி மனத்தில் ஏற்படும் குடும்ப அமைதியின்மைக்கு சாந்தி ஏற்படாது. அவ்வாறு மனிதனின் பிறப்பியல்புகளான திருப்தி, சமாதானம், அன்பு ஆகிய குணநலன்கள் அவனிடம் நிலை பெற்றி ருந்தால் மட்டுமே அவன் மனிதனின் சிறந்த பண்புகளை பற்றிப்படிப்பதற்கும் அவற்றிற்கேற்ப வாழவும் விரும்பு வான். விவகாரங்கள் நிறைந்த இந்த உலகில் திருப்தியும் சமாதானமும் கிடைக்க முடியாத மனிதனுக்கு எதற்கு இந்த மதநம்பிக்கை; மதநம்பிக்கை இல்லாமலும் வாழ முடியாதா? என எண்ணத்தோன்றும் அல்லவா?

அன்றாட வாழ்வின் பளுவை எளிதாக்குவதற்கு சக்தி யுள்ள ஒரு மனிதனுக்கு வாழ்க்கை இன்பத்தை அனுப விக்க சந்தர்பம் ஏற்படக்கூடும். மதம் மனிதனிடம் கேட் பதும் வாழ்க்கை வளமுடன் செழித்தோங்க வேண்டு மென்பதே. அதற்கு தேவையுள்ள வாழ்க்கை நடைமுறை களை போதிப்பதாகும், ஸ்ரீ நாராயண குருதேவரின் ''ஒரே மதம்'' என்ற தத்துவத்தின் சாராம்சம்.

இன்றைய சமூக வாழ்வில் வேரூன்றியுள்ள மத தத்து வங்களை பின்பற்றுகின்ற ஏராளமான மத விசுவாசி களை நாம் காணலாம். ஒவ்வொரு மதத்தை சார்ந்தவர் களுக்கும் தங்கள் மதமே சிறந்தது என்ற எண்ணம் மேலோங்கி இருக்கிறது. இந்துவிற்கு இந்து மதத்திடமும், முஸ்லீமிற்கு இஸ்லாம் மதத்திடமும், கிறிஸ்தவனுக்கு ந கிறிஸ்து மதத்திடமும், இதைப்போன்ற ஏனைய சம யத்தை சார்ந்தவர்களுக்கு அவரவர்கள் சமயத்திடமும் விசேட பற்றுதல் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். சந் தர்ப்பம ஏற்படும் போது மாற்றானின் மதத்தை விமரி சிப்பதை வழக்கமாக கொண்ட சில சமயவாதிகளும் உள் ளனர். இது உண்மையில் ஒவ்வொரு மதத்தையும் பற்றி ஊன்றி படித்தறியாததால் ஏற்படும் குறையாகும். அனைத்து சமயங்களின் பொருளும் கற்றறியும்போது. அவற்றின் நோக்கம் ஒன்றே என தெரிய வரும். அதுவே ஸ்ரீ நாராயண குருதேவரின் ''ஏக மத'' தத்துவத்தின் சாரம்

புத்தபிரானும், நபிகள் நாயகமும், கிறிஸ்து தேவனும் மத தத்துவங்களை கற்றறிந்த பின்புதானா சன்மார்க்க நெறிகளை அவரவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த மக் களுக்கு புகட்டினார்கள்? இல்லை, அந்த மகாத்மாக்கள் பிறந்து; வளர்ந்த தங்களது வாழ்க்கை அனுபவங்கள் வாயிலாகப் பெற்ற தத்துவங்களையும் அறநெறிகளையும் மக்களின் துன்பம் நீங்கவும் அவர்கள் ஆன்ம ஈடேற்றம் பெற்றிடவும் போதித்தார்கள்.

உயரமிக்க மலை உச்சிகளின் பல பகுதிகளினின்றும் ஆறுகள் உற்பவித்து வேற்றுமையான சீதோஷ்ண நிலை யிலுள்ள பிரதேசங்கள் வழியாக பாய்ந்து ஏற்றத்தாழ் வான பல இடங்களையும் கடந்து இறுதியில் எல்லா ஆறுகளும் சமுத்திரத்தில்தானே சங்கமம் ஆகிறது! அத வேற்றுமைகளிலிருந்து ஏற்படும் ஓர் ஒற்றுமையாகும். அதுபோன்று ஒவ்வொரு மதக்கில் போதிக்கப்பட்டுள்ள

தத்துவங்களும் அவ்வப்போது இருந்த கால சூழ்நிலைகளுக்கேற்ப மக்களை நல்வழிப்படுத்த கூறப்பட்டவையாகும் என்பதை நாம் உணர வேண்டும். அனைத்து சமய(மத)ங்களின் நோக்கமும் நன்மை அடைவதே எனவும், அந்த ஒரே நோக்கம் இறைவன் எனவும், நன்மையான வழியை பின்பற்றாத எந்த ஒரு மத விசுவாசிக்கும் அதனை அடைய முடியாது என்பதும் நிலையான உண்மையாகும். சமூகத்தில் வாழும் மனிதன், தனது வாழ்க்கைக்கான செயல்களை புரியும்போது, தீமைகளைக் களைந்து நன்மையை பெற்று முன்னேறுவதற்கான கர்ம நிலைகளை வழங்குவதே மதங்களின் நோக்கம். மதம் இறை அனுபூதிகள் உட்கொண்ட அறிவுச்சுரங்கம் எனவும், எல்லா மதங்களின் நோக்கமும் நல்வழியில் முன்னேறுகின்ற ஒரு மனிதனை கண்டு அடைவது.'' இதுவே தருதேவரின் ஏக மத தத்துவ போதனை ஆகும்.

சிந்திக்கும் இயல்புடைய மனிதன். அவனது வாழ்க்கை நலன்களுக்கு சீர்திருத்தங்கள் வாயிலாக ஏற்றம் பெறுவதற்கான அறிவியல் தத்துவங்களை மதங்கள் புகட்டுகின்றன. யுகங்கள் மாறி, மாறி வரும்போது யுக தர்மங்களுக்கும் மாற்றம் ஏற்படும். தர்மங்களுக்கு மாற்றம் ஏற்பட்டாலும், நோக்கம் நன்மை அடைவதே. அந்த உண்மைக்கு ஒருபோதும் மாற்றம் ஏற்படாது. நன்மைக்கு பாதகம் ஏற்பட்டால் மனிதன் தீமைச்செயலால் முரடனாக மாறுவான். அதன் முடிவு நாசம் மட்டும்தான். அதற்கு இந்த இயற்கை இடம் கொடுக்காது. காலப் போக்கில் வாழ்வின் அனுபவங்கள் வாயிலாக அவனுக்கு தண்டனையும் மீட்பும் வழங்கி மனமாற்றங்கள் ஏற்பட முயன்று கொண்டிருக்கும். மனிதனை மிருக குணங்களிலிருந்து மீட்டு மனிதத் தன்மைக்கு இட்டுச் செல்வதே எல்லா மதத்தத்துவங்களும் கூறுவது. அதற்குரிய தூண்டுதல் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து அவன்தானே பெறவேண்டும். அந்த தூண்டுதல் பெற்று

விட்டால் பெருணமையை அவன் அடைவான். எனவேதான் "சத்தியத்தை கண்டடைவதற்கு நமக்கு உதவி புரியும் வழிகாட்டிகளே மதங்கள். சூஷ்மம் (சத்யம்) தெரிந்தவனுக்கு மதம் பிரமாணமல்ல. மதத்திற்கு அவனே பிரமாணமாக இருப்பான்" என ஸ்ரீ நாராயண குருதேவர் மததத்துவங்களுக்கு சூஷ்ம அறிவை போதித்துள்ளார்.

நன்மையே உண்மையான பலம். தீமையின் பலவீனங்கள் நன்மையைப் பற்றி சிந்திப்பதற்கு மனிதனுக்கு தூண்டுதல் அளிக்கிறது. தீமைகள் பாவச்செயல்கள் நிறைந்தவையாகும். குற்றங்கள் அறியாமையின் செல்வங்களே.

அறியாமை அகன்றால் ஏற்படக்கூடிய குற்றங்களும் மனிதனிடமிருந்து விலகிவிடும். குற்றச் செயல்களுக்காக வருந்தும் மனிதன், தீமையிலிருந்து நன்மையை கண்டடைவான். அதற்கு உதவிபுரியும் அறிவுச் சுடர்களே மத தத்துவங்கள். அதற்கான சக்தி கிடைப்பதற்கு மனிதனின் உள்ளத்திலும், வெளியிலும் இருவகையான மாற்றங்கள் தேவை என குருதேவர் உணர்ந்தார்.

தம்மைச் சுற்றியுள்ள மக்களை நாகரீகமுள்ளவர்களாக மாற்றுவதற்கு முதலாவதாக வெளிப்புற மாற்றம் வேண்டும் என் குருதேவர் விரும்பினார். அங்குதான் ஸ்ரீ நாராயண குருதேவரின் தர்ம பஞ்சகம் மற்றும் சுத்தி பஞ்சகம் அகியவற்றின் மகிமையை காண்கிறோம்.

"அகிம்ஸா ஸத்யமஸ்தைய
தந்தவரிவியபசாரிதா
மத்யஸ வர்ஜனம் சைவம்:
பஞ்ச தர்மாஸ்ஸ மாஸ்தக'

அகிம்சை, உண்மை, திருடாமை, விபசாரம் செய்யாமை, மது அருந்தாமை போன்ற ஐந்து தர்மங்களை கடைப்பிடிக்க வேண்டும் எனவும்.

''காய வாக் சேதஸாம் சுத்தி:
இந்திரியாணாம் கிரஹஸ்யச
ஸம்ஷே பான்மர்த்தியா வர்கஸ்ய
பஞ்சைதா: சுத்தயா: ஸ்மிருதா!''

மனம், வாக்கு, செயல்களையும், புலன்கள், நாம் வாழும் வீடு ஆகியவற்றையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமெனவும், இவை அனைத்தும் பின்பற்றினால் இறைவனைப் பற்றிய உணர்வு தானே வந்து சேரும் எனவும் குருதேவர் கற்பித்தார். அவற்றுக்காக இறைவனை நினைவு கூர்வதற்கு உகந்த தூய்மையான இடங்களில் கோயில்கள் அமைத்து இறைவழிபாடு நடத்துவதற்கு தேவையான வழிமுறைகளை மக்களுக்கு வழங்கினார். கேரளாவிலும், வெளியிலும் கோவில்கள் அமைத்து இறைவனை வழிபட மக்களுக்கு அறைகூவல் வழங்கினார் என்றாலும், அடிப்படையான மாற்றங்கள் ஏற்படாவிடின் நிரந்தரமான மாறுதல்கள் ஏற்படாது என அவர் உணர்ந்தார். பிறப்பால் எந்த மதத்தைத் சேர்ந்தவனாக இருந்தாலும், மனிதன் தாமே சிந்திக்க முடிந்தவனாக இருத்தால் அவன் உள்ளத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

மத நம்பிக்கை ஏற்பட்டிருப்பினும், அனைத்து மதங்களின் விசுவாசிகளுக்கிடையே ஒருவருக்கொருவர் மத ஒற்றுமை ஏற்படுத்தி உலக சகோதரத்துவத்தை உருவாக்கத் தேவையானது என்ன? என்பதை குருதேவர் யோசனை செய்தார். அதன் பலனாக ''மதம் எதுவாயினும் மனிதன் முன்னேறினால் போதும்'' என்ற அனைத்துலக சகோதரத்துவ தத்துவத்தை — மனித சமூகத்தின் ஐக்கியமும், நன்மையும் ஏற்பட வழங்கினார். இந்த தத்துவத்தில் பொதிந்துள்ள உண்மை என்ன? இன்று உலகில் உள்ள எந்த மதத்திலும் நாம் நம்பிக்கை கொள்ளலாம். அனைத்து மதங்களின் நோக்கமும் ஒன்

றாகையால், எந்த மதவழிபாட்டிலும் தீவிர கவனம் செலுத்தி வாழ்க்கை முன்னேற்றம் பெறலாம். அனால் அதன் நோக்கமும் வழியும் நன்மை பெறுவதாக இருக்க வேண்டும். நன்மையான வழியில் மனத்தாலும், வார்த்தையினாலும், கர்மத்தாலும் செயல்படுபவன் எந்த மதத்தைத் சார்ந்தவனாக இருந்தாலும் வாழ்வில் தூய்மை பெறுவான். அந்த உண்மையான தத்துவத்தை உணர்ந்து தான் குருதேவர், ''பலமத சாரம்ஏகம்'' ' என அருளினார். உலக மக்கள் அனைவரும் ஒரு மதத்தை மட்டும் பின்பற்றவேண்டும் என்றார். அவற்றின் ஆசார ஆனுஷ்டானங்களில் மாற்றங்கள் இருப்பினும் அவை ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்றோ குருதேவர் விரும்பவில்லை. சமூக வாழ்க்கையில் ஆற்றவேண்டிய கடமைகளை வேற்றுமைகள் மறந்து தோளோடு தோள் சேர்ந்து அனைவரும் ஒற்றுமையுடன் நிறைவேற்றி, நன்மையின் மூலம் கர்மத்திற்கு மெருகூட்ட மனிதர்களை நாம் மறக்கலாகாது என குருதேவர் விரும்பினார். பாமரர்கள் மதங்களைப் பற்றி பலவிதமான கருத்துக்களை கூறி, மத போதனைகளைக் களங்கம் கற்பிக்க முயல்வர். ஆனால் அறிவுள்ளவர்கள் அதனைப் பொருட்படுத்தமாட்டார்கள். பூவுலகில் வாழ்கின்ற மனிதர்கள் எல்லா மதங்களின் சாரமும் ஒன்றுதான் என தெரிந்து கொள்ளும் வரை என்ன செய்வது என்றறியாமல் சித்தபிரமை பிடித்தவர்கள் போன்று இருப்பார்கள். ''தரையிலிதன் ரகசியமொன்றுதான் என்றறிகூறவும் பிரமை என்றறிந்திடல் வேண்டும்'' என ஸ்ரீ நாராயண குரு தெளிவாக்கினார்.

மத நம்பிக்கை உள்ளவர்கள் எதற்காக பள்ளிக்கூடங்களும், கோவில்களும், ஆசிரமங்களும் நடத்துகிறார்கள்? அவை அனைத்தும் வழிபடுவதற்கான தூய்மையான இடங்களாகும். வழிபடுதல் (பிரார்த்தனை) அனைத்து மதங்களுக்கும் வேண்டும் என வற்புறுத்துகின்றன அல்

லவா! எதற்காக இந்த வழிபாடு? உலக விவகாரங்களில் மூழ்கியுள்ள மக்க ள் எண்ணங்கள் — சுயநல நோக்குடையதாக இருக்கும். சுயநலம் களங்கத்தை உருவாக்கும். இந்த கறையை மனத்தினின்று மாய்ப்பதற்கு பிரார்த்தனை ஒரு நல்ல வழியாகும். பிரார்த்தனை மனத்தூய்மை ஏற்படுத்துகிறது. அதுபோல, உடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென எல்லா மதத் தத்துவங்களும் உபதேசிக்கின்றன. அன்னியரின் பொருளை திருடக் கூடாது எனவும், கருமம், நீதி மற்றும் தர்மத்தில் நிலை பெற்றிருக்க வேண்டுமெனவும், விபசாரமும், பொய்மை உரைத்தலும் மனித வாழ்வின் சமூக பாதுகாப்புக்கு கேடுவிளைவிக்குமென்பதால் மனிதன் அதனை அறவே பின்பற்றலாகாது எனவும் எல்லா மத உபதேசங்களிலிருந்தும் நாம் அறிந்து கொள்கிறோம். மதங்கள் யாவும் மாறுபட்ட காலங்களில் தோன்றினாலும், அவற்றின் எல்லா தார்மீக தத்துவங்களும், மனிதன் ஒரே இனமாக வாழ்வதற்குத் தேவையான அனுஷ்டான உபாயங்களின் கூட்டுமொத்தமாகும். மனித குணநலன்கள் என்ற மூசை புனல் மூலமாக ஒரு சிறந்த இதயத்தை வார்த்தெடுத்து, மனித தத்துவத்தின் உயர்ந்த குணங்களுக்கு இருப்பிடமான நன்மையில் ஒளிர்விடுவதே ஸ்ரீ நாராயண குருதேவரின் ''ஏக மதம்'' கூறும்.

மதம் எதுவாயினும் மனிதன் முன்னேறினால் போதும்'' எனும் தத்துவக் கொள்கை ஆகும்.

அதிகாரம் IX

# குருதேவர் கண்ட ஒரே கடவுள்

கேரளாவிலும், அயல் நாடுகளிலும் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஏராளமான கோவில்கள் நிர் மாணித்து அவைகளில் இறைவனை தியானித்து ஏராள மான இறை பிரதிஷ்டைகள் நடத்திய ஸ்ரீ நாராயண குரு விற்கு இந்த ''ஒரே கடவுள்'' என்ற நம்பிக்கை எப்படி ஏற்பட்டது? சாதாரண மக்களுக்கு கூட மனத்தில் குழப் பம் ஏற்படும் கேள்வியாகும் இது. ஒரு சமூக சீர்திருத்த நாயகனாக திகழ்ந்த குருதேவர், கோவில்களில் இறை பிரதிஷ்டைகள் வாயிலாக சமூகத்தின் படிப்படியான முன்னேற்றத்தை எந்த நிலையில் எதிர்கொள்ள வேண்டு மென்பதை நமக்கு காண்பித்து தருகிறார்.

ஒரு குழந்தைக்கு கல்வி புகட்ட ஆசைப்படும் தந்தை, முதலில் குழந்தைக்கு எழுத்துக்களையும், வார்த்தை களையும், வாக்கியங்களையும் படிக்கவும், தவறின்றி எழுதவும் பழக்காமல், சிறு புத்தகங்களையோ அறிவைப் புகட்டக்கூடிய காப்பியங்களையோ படிப்பிக்க இய லாது. காலப் போக்கில் சூழ்நிலையும் விருப்பமும் கொண்டு அந்த குழந்தை ஒரு விஞ்ஞானியாகவும் திகழ லாம்.

சவர்ணர்களின் அடக்கு முறை மற்றும் அகந்தை என்ற இருளில் சிக்கித்தவித்த மக்கள் கூட்டத்தை முதலில் சுத்த மாக இருக்க வேண்டிய அறிவினை புகட்டுவதற்காக செய்த முயற்சியில் முதற்படியாக இருந்தது குருதேவரின் கோவில் நிர்மாணமும் இறை பிரதிஷ்டையும்தான்.

காலப்போக்கில் மக்களிடம் இறைவனைப் பற்றிய எண்ணத்தை ஏற்படுத்தி, இறைவழிபாடுகள் வாயிலாக மனதில் ஏற்பட்ட கறைகளை நீக்கி அறிவொளி பரப்பச் செய்தார். இவ்வாறு அடிமைத் தனத்திலிருந்து விடு தலைப் பெற்று சுதந்திரத்தைச் சுவைத்த ஒரு மக்கள் சமூ கத்தை குருதேவர் கண்டார். பல கோவில்களிலும் இறை பிரதிஷ்டை நடத்திய குருதேவர், பிற்காலங்களில் தேவதை பிரதிஷ்டைக்குப் பதிலாக நிலைக் கண்ணா டியை பிரதிஷ்டை செய்தார். இதற்கு என்ன காரணம்? கண்ணாடி பிரதிஷ்டை நடத்திய கோவில் முன் இறை தரிசனத்திற்காகவும், வழிபாட்டிற்காகவும் வருகை தரும் பக்தர்கள் இரு கரங்களும் கூப்பி இறைவனை எண்ணித் தொழுகை செய்யும்போது, அவர்கள் காண்பதென்ன? இரு கைகளையும் கூப்பி இறைவனை வழிபடும் பக்தர் களின் கண்ணாடியினின்று ஏற்படும் பிரதிபலன்கள் அல்லவா? இவ்வாறான ஆராதனையிலிருந்து குருதேவர் பக்தப் பெருமக்களுக்கு என்ன கற்பித்தார்?

குருதேவரின் ''பக்தி தரிசன''த்தில் இவ்வாறு கூறு கிறார். ''நான் ஆனந்தமாக இருக்கிறேன். நான் பிரம் மமாக இருக்கிறேன். நான் ஆத்மாவாக இருக்கிறேன். ''இந்த ரூப பாவனையைத்தான் தனது கர்மத்தின் மூல மாக முகக்கண்ணாடியில் பிரகாசிக்கச் செய்தார். ஒரு மனிதனிடம் குடிகொண்டுள்ள மனிதத் தன்மை வளர்ந்து மகிமையான ரூபம் அடைவதற்கு சில அனுஷ்டானங் களும், பயிற்சிகளும், ஆராதனா மார்கங்களும் பின்பற்ற வேண்டும். அந்த மாற்றங்களின் தொடக்கமே கோவில் அமைக்கும் இறை சங்கற்பங்களும் ஆகும்.

மேற்கூறிய கோவிலில் வழிபாடு நடத்த வருகை தரும் பக்தப் பெருமக்கள் ஆராதனை செய்யும்போது, இறை வனைப் பற்றிய நினைவு ஏற்படுவது தேவனில் அல்ல.

மாறாக அந்த ஆராதனை நடத்தும் பக்தனிலதான். அவனது இதயத்தில் ஏற்படும் சங்கற்பமும், இறை நாட்டமும் படிப்படியாக வளரச் செய்தால் அவரவர்களின் மனதில் மாற்றம் ஏற்படும். இந்த அறிவுச்சுடர் ஒரு பக்தனிடம் தூய்மையான நிலையில் ஒளிர்விடும்போது, அவன் அவனிடத்தில் இறைவனைக் காணத் தொடங்குவான். அதுவே ''தத்துவமசி'' (பிரம்மம் நீயாக இருக்கிறாய்) ஸ்ரீ நாராயண குருதேவரின் கண்ணாடி பிரதிஷ்டையில் இந்த பேருண்மையின் மகத்துவத்தைப் புரிந்து கொள் ளலாம்.

யார் இந்த பக்தன்? பக்தியில்லாமல் வாழ முடியாதா? வாழலாம். மனிதன் அப்படியும் வாழ்கின்றான். ஒரு மனிதனின் ஆசைகள்தான் அவனை வழிநடத்துகிறது. ஒருவற்கு ஏற்படும் இன்ப துன்பங்கள் அவரின் இச்சை யையும், கர்மத்தயையும் சார்ந்திருக்கிறது. பண்பாடு இல் லாத மனிதனின் ஆசைகள் சில வேளைகளில் பேரா சையாகவோ, கெட்ட வாஞ்சைகளாகவோ மாறக்கூடும். மனிதனின் மூளையானது ஏராளமான மன சக்திகளின் மையமாகும். மூளை மற்றும் நாடி நரம்புகளின் விரிவு, உடலுணர்விலிருந்து சூட்சும உணர்வினுக்கு வளர்ந்து வரும்போது அதிலிருந்து உற்பத்தியாகும் சைதன்ய பாவ னைக்கு விஷேச ஒளி பெருகிவரும். ஒரு மனிதனுக்கு சுவைக்கேற்ப தன் மூளையில் எந்தப் பகுதிக்கு விரிவு ஏற்படுகிதோ அதற்கேற்ப அவனது எண்ணங்களும், கர் மங்களுக்கும் தூண்டுதல் கிடைக்கும். அவ்வாறு கர்மங் கள் ஏற்றம் பெறும்போது அயலானுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணங்கள், அன்பு, பரிவு, மனசாட் சிக்கு கட்டுப்பட்டு கடமை புரிதல் என்ற உயர்ந்த குண நலன்களை மனிதனிடம் உருவாக்க உதவி புரியும். ஆனால் மூளையின் அதிர்வுகள் பின்னடைவதாக இருப் பின் மேற்கூறிய விசேஷ குணங்களுக்கு எதிரிடையான அனுபவங்கள் தோன்றும். யோகாசனங்களின் அனுஷ்

டான மகிமையை இங்கு காணலாம். ஒரு உண்மை பக்தனிடம் மேற்கூறப்பட்ட குணநலன்கள் இருப்பதற்குக் காரணம், அவனுடைய உடலையும், மனத்தையும் அந்த அளவிற்கு பக்குவப்படுத்துவதற்கு தேவையான சூழ்நிலையும், சான்றோர்களிடம் தொடர்பும் ஏற்பட்டால் தான். உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் இது போன்ற நிலை ஏற்படும் எனக் கூறுவதற்கில்லை.

எத்தனையோ மனிதர்களிடையே ஒருவர் மட்டுமே ஆத்ம ஞான சித்தி பெருவதற்கு முற்படுகிறார். அவர்களில் அபூர்வமாக சில வேளையில் ஒருவர் மட்டுமே பேருண்மைத் தத்துவத்தை அறிய முடிகிறது என்ற கீதையின் வாக்கியம் நினைவிற்கொள்ள வேண்டும். அனைத்தும் கவரும் சக்தி உடையதே. உலகின் போக்கு மாறுபட்ட விருப்பு உணர்வுகளைக் கொண்டதாகும். இந்த விவகார உலகம் அவ்வாறே இயங்க வேண்டும். எல்லோரும் ஒரே மாதிரி அல்லாமல் வித்தியாசமான இச்சைகளை நிறைவேற்றும் பொருட்டு உழைக்கவும் இறைவழிபாடு நடத்தவும் செய்கிறார்கள். அவர்கள் யார்? கொடிய நோய் முதலியவற்றால் தாக்குண்டவர்கள், ஆத்ம ஞானத்தை சென்றடைய ஆசைப்படுபவன், பணத்தில் பற்றுள்ளவன், பிரம்ம ஞானி போன்றவர்கள் என பகவத்கீதையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எனின் ஒரு உண்மையான பக்தன் அல்லது பிரம்மஞானி எப்படிப்பட்ட குணநலன்களைக் கொண்டவனாக இருக்க வேண்டும் என்று குருதேவர் தனது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

ஆத்மாவை இடைவிடாது தியானிப்பதே பக்தி. ஆத்ம ஞானியின் மனம் ஆனந்தமயமாகையால் அவன் மனதில் எப்பொழுதும் ஆத்மாவை தியானித்துக் கொண்டிருப்பான். அந்த தியானம் படிப்படியாக பிரணவமாக

உயர்ந்து ''அஹம் ஆனந்த: அஸ்மி'' (நான் ஆனந்தமாகும்) ''அஹம் பிரம்மாஸ்மி'' (நான் பிரம்மமாகும்) ''அஹம் ஆத்மா அஸ்மி'' (நான் ஆத்மாவாகும்.) என்ற எண்ணத்தில் மனப்பக்குவம் நிரந்தரமாக ஏற்படும் சமயம் முதல் அவன் புகழ்பெற்ற பக்தனாகத் திகழ்வான். மனம் கொண்டு ஒரு வேள்வியை ஒரு பக்தன் இங்கு நடத்த வேண்டியுள்ளது. மனித வாழ்க்கையில் கிடைப்பதற்கரிய இதுபோன்ற மனகுண நலன்கள் — நற்குணங்கள் பெற்ற ஒரு பக்தனுக்குக் கிடைக்க வேண்டிய அருட்கொடையாகும். இது அறிவுபெற்ற பக்தனின் அனுபூதி விஷேசமாகும். துன்பத்தினை விழைபவன் தரமான குண பிரதானி எனவும் பொருட்செல்வத்தை மோகிப்பவன் ப்ரஜாகுண பிரதானி எனவும் அறிவுச் செல்வத்தை நாடுகிறவன் சத்வகுண பிரதானி எனவும் ஒரு ஞானி இவர்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் எனவும் போற்றப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது குணநலன்களுக்கும், உணர்ச்சி வேற்றுமைகளுக்கும் ஏற்ப வழிபாடு கர்மங்கள் மாறியிருக்கும். குருதேவரின் ''ஒரே கடவுள்'' என்ற தத்துவம் அத்வைத (எதுவும் இரண்டல்ல, ஒன்றே) சித்தியாகும்.

அத்வைதமாக இருக்கும் பிரம்மம் ஒன்றுமட்டுமே உள்ளது. வேறில்லை. இதில் சந்தேகம் தேவையில்லை. இதற்கு குருதேவரின் அருள்வாக்கான ''ஒரே ஜாதி, ஒரே மதம், ஒரே கடவுள் — மனிதருக்கு'' என்ற தத்துவத்தின் மூலமாக கடவுள் ஒன்றே என விளக்குகிறார். இந்த நம்பிக்கை அறியாமையினால் ஏற்படும் துன்பத்திலிருந்து விமோசனம் வழங்கும்.

மேற்கூறிய கொள்கைகள் நாம் சொல்கிறோம் என்றாலும் அவற்றை செயல் வடிவில் அனுஷ்டிக்கும்போது, பலருக்கும் தோல்வி ஏற்படுகிறது என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மையாகும். இந்த பூவுலகில்

இயற்கையின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக மனிதன் இருக்கின்றான். அவனிடத்திலும் இயற்கையின் மூன்று குணங்களும் அவரவர் குணங்களுக்கேற்ப மாறுபட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனினும் இது அனைத்தும் இயற்கையின் குணத்தில் ஏற்படும் வேறு பட்ட உணர்வுகளாகும். அவை அதிர்வடையும் தன்மை யுடையனவாகும். மாற்றத்திற்கு உட்பட்டவையுமாகும். ''கர்ம தரிசனத்தில்'' குருதேவர் இவ்வாறு கூறுகிறார்.

ஆத்மாவின் சுயரூபம் அழிவற்றதாகும். அதன் குண நலன்கள் ஆறுவகையானதாகும். உண்மை நிலை, பிறப்பு, வளர்ச்சி, மாற்றம், நலிவு, அழிவு ஆகிய ஆறுவகை உணர்ச்சிகள் உண்மையில் இல்லாதவை இருப்பதாகத் தோற்றுவிப்பதும் உணர்வுகளை அடைவதாக தோற்று விப்பதும் ஆத்மாவின் பரபிரம்ம ஸ்வரூபம் என்றென் றும் அழிவற்றதாக இருப்பதால்தான். மூன்று குணநலன் களுக்கு மனிதனும் அடிமைப்பட்டுள்ளான்.

மேற்கூறிய வழிபாடுகளினின்றும் மனிதன் வளர்ந்து தமோ குணத்திலிருந்து ரஜோ குணத்திற்கும், அங்கிருந்து சத்துவ குணம் வழியாக குணங்களுக்கு அப்பாற்பட்ட நிலைக்கு வந்து சேரும்போது அவன் பரபிரம்ம ஸ்வரூப மாக மாறுவான். அங்குதான் ஸ்ரீநாராயண குருதேவரின் தத்துவ மகிமையில் உதித்த ''ஒரே கடவுள்'' என்ற பர பிரம்ம ஸ்வரூபத்தை அவரது எளிய நடையில் விளக்கு கிறார்.

''நீயல்லோ சிருஷ்டியும் சிருஷ்டா
வாயதும் சிருஷ்டி ஜாலவும்
நீயல்லோ தைவமே சிருஷ்டி
க்குள்ள சாமிக்கிரியை யாயதும்

நீயல்லோ மாயயும் மாயா
வியும் மாயா வினோதனும்

*நீயல்லோ மாயயே நீக்கி*
*ஸாயூஜியம் நல்குமாரியனும் ம்*

*நீ சத்தியம் ஞானமானந்தம்*
*நீ தன்னே வர்த்தமானவும்*
*பூதவும் பாவியும் வெறி*
*ல்லோதும் மொழியுமோற்கில் நீ.''*

'தைவதசகத்'தின் கவிதைப் பகுதிகளில் பரபிரம்மத்தின் அகண்ட உலகளாவிய மகத்துவத்தினை குருதேவர் விளக்குகிறார். இந்த பரபிரம்மம்தான் ஸ்ரீ நாராயண குருதேவரின் 'ஒரே கடவுள்' அது உண்மை, ஞானம், ஆனந்தம் இவற்றின் ஸ்வரூபமாக விளங்குகிறது.

அதிகாரம் X

# குருதேவரின் தர்ம உபதேசங்கள்

வாழ்க்கை என்பது என்ன? அதன் நோக்கமும், அந்த நோக்கத்தை சென்றடைவதற்கான வழியும் என்ன?

சென்ற காலங்களில் பல அவதார புருஷர்களும், கவிஞர்களும் இதற்கு விடை காண முற்பட்டனர். வேத சாஸ்திரங்கள் படைத்த சான்றோர்கள், வாழ்க்கையின் உண்மை நிலையை அறிய சோதனைகள் நடத்தினார்கள். குருமார்கள் மனக்கட்டுப்பாட்டுடன் ஆத்ம சோதனை செய்தனர், வாழ்க்கை என்னவென்று அறிய. அறிவாற்றலால் அதற்கான சரியான பதில் இன்னாள் வரையிலும் கிடைக்காதா என்பது சந்தேகத்திற்குரியதாகும். சட்ட திட்டங்களுக்குட்படாததும் எதிர்பாராததுமான ஏராளமான செயல்களின் சங்கமமே வாழ்க்கை. நமது விருப்

பங்கள் நாம் எதிர்பார்த்த சந்தாபபங்களில் நிறைவேற வும் செய்யலாம், இல்லாமலும் போகலாம். சில சமயம் எதிர்பாராத நிகழ்ச்சிகள் மனிதனை சிந்தனை செய் வதற்கும், சிரிக்க வைக்கவும், அழுகையை ஏற்படுத்தவும் செய்யலாம். அதனால் தான் வாழ்க்கை, சட்ட திட்டங் களுக்குட்பட்டதல்ல; முடிவற்றது/ அதன் பலாபலன்கள் தெரிந்து கொள்ள முடியாது என கூறப்படுவது. இப்படி யெல்லாம் இருந்தபோதிலும்; மனிதன் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறான். அவன் வாழ்க்கையை விரும்புகிறான். இனிய எதிர்பார்ப்புகளின் சங்கமம்தான் வாழ்க்கை.

மனிதன் வாழவேண்டும்; எவ்வாறு? இந்தப் பிரச் னைக்குப் பதில் காண முற்படும்போது தான் அவன் ஆற்ற வேண்டிய தர்மங்களைப் பற்றி யோசனை செய்கிறான். தினசரி வாழ்க்கையில் ஒருவன் எதிர்கொள்ளும் பிரச்னை களுக்கு பரிகாரம் தேடவும் அவன் முயற்சிக்கிறான். ஆனால் மனிதனால் எப்படிப்பட்ட கடமையை நிறை வேற்ற முற்பட்டாலும் அதனைப் பற்றி நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். அதனை மனப்பூர்வமாக செய்து முடிக்க கடமைப்பட்டவன் என்ற உணர்வும், அவனிடத் தில் உள்ள தர்ம சிந்தனையும் இதை உணர்த்துகிறது. இவ்வாறான சிந்தைகளும் இதற்கான அனுஷ்டானங் களும் எவ்வாறு அமையப்பெற வேண்டும் என்பதற்கு ஸ்ரீ நாராயண குருதேவரின் தர்ம உபதேசங்கள் வழி காட்டி நெறிகளாக திகழ்கின்றன. குருதேவரின் தர்ம நெறிகள் அனைத்தும் அகிம்சையில் வேரூன்றியவை யாகும். மனிதர்கள் எந்த வேலைகள் புரிந்தாலும் அவை மற்றவர்களுக்கு ஒருபோதும் மனத்தாலும், வாக்கினா லும், கர்மத்தாலும் துன்பம் ஏற்படுத்தக்கூடாது. அதற்குத் தான்,

''எல்லாவருமாத்ம சகோதரரெ
ந்நல்லே பறயேண்டதி
தோற்கில் நாம்''

சமப்பார்வை வாயிலாக ஆத்ம சகோதரர் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். அயலான் நம்மிடம் செய்யும் செயல் களில் நாம் விரும்பாதது இருந்தால் பதிலுக்கு நாம் அவ னுக்கு அதைச் செய்யக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அகிம்சையின் மகிமையை குரு தேவர் இவ்வாறு காண்கிறார்.

''கொல்லாய்கிலவன் குணமுள்ள புமான்
அல்லாகில் மிருகத்தொடு துல்யனவன்
கொல்லுந்நவனல்ல சரண்யதம —
ற்றெல்லாவக நன்மையு மார்நிடலும்.''

ஒருவன் நற்குணவானாகி வளர்ச்சி அடைவதற்கும், நலி வுற்று வீழ்ச்சி பெறுவதற்கும் காரணம் அவன் செய்யும் செயல்களாகும். எந்த செயலின் மகிமையும், தர்மம் அதர்மம் என்று பகுத்தறிவதில் அடங்கியுள்ளது. அகிம் சையை பின்பற்றும் ஒருவன், தயவு, கருணை, எத்துணை யையும் பேதம் இன்றி எவ்வுயிர்க்கும் தன்னுயிர் போன் றது என எண்ணும் பாங்கு ஆகிய நற்பண்புகளுக்கு உறைவிடமாக் திகழ்வான். இந்த கருத்தினை கீதையிலும் நாம் காணலாம்.

''உத்தரே தாத்ம நாத்மானம்
நாமா த்மான மவசாதயேத்
ஆத்மைவ ஹியாமனோ பந்து
ராத்மைவ ரிபுராத்மனா:''

நமது கர்மங்கள் தான், நமது ஆத்மாவிற்கு நட்பும், பகை யும் ஏற்படுத்துகிறது. கர்மம் புரியாமல் நாம் இப்பூவுல கில் வாழ்வது சிரமமாகும். அதனால் நாம் கடமைகளை ஆற்றும்போது, மிகவும் கூர்ந்து கவனித்து செய்ய வேண்டும். எதற்காக?

''அருளில்ல யதெங்கில ஸ்திதோல்
ஸிர நாறுந் நொருடம்பு தானவன்
மருவல் பிரவிஹிக்கு மம்புவ —
ப்புருஷன் நிஷ்பல கந்த புஷ்பமாம்.

இந்த இயற்கையிலிருந்து உருப்பெற்ற நமக்குப் புலப் படாத ஒரு சக்தி, நமது எல்லா செயல்களுக்கும் அடிப் படையாக நிலை கொண்டுள்ளது. அதனால் நாம் அய லானுக்குச் செய்யும் கருமங்கள் அன்பும், பரிவும் உடை யதாக இருக்க வேண்டும். அதற்கு இயலாத மனிதன், இரத்த மாமிச நரம்புகளால் உருவாக்கப்பட்ட உடலை மட்டும் சுமந்து நடப்பவன் ஆவான். அவன் மணமில்லாத பூவைப்போல், பயனற்றவனாக இருப்பான். ஒரு பரி வுள்ளம் கொண்ட மனிதன் ஆற்ற வேண்டிய கடமை எவ் வாறு இருக்க வேண்டும் என குருதேவர் சுட்டியுள்ளார். ரீதேவர் சுட்டியுள்ளார்.

''அபரனு வேண்டியஹர்நிசம் பிரயத்னம்
கிருபணத விட்டு கிருபாலுசெய்திடுன்னு
கிருபண நதோமுகணாய் கிடன்னு செய்யு —
ன்ன பஜய கர்ம மவன்னு வேண்டி மாத்ரம்''

தனது சொந்த வேலையை மட்டும் செய்பவன் சுயநலம் படைத்தவனாவான். முடிவிலா இந்த வாழ்க்கைப் பாதையில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு மனப்பான்மையின்றி வாழ்வது கடினம். ஒரு மனிதனின் செயல்கள் அவனது நன்மையை மட்டும் நோக்கமாகக் கொண்டதாக இருக்கக் கூடாது. அது அயலானின் முன் னேற்றத்திற்கும், நன்மைக்கும் பயன்பட வேண்டும். அவ் வாறு செய்பவனைத்தான் குருதேவர் இங்கு ''கிருபாலு'' (கருணை உள்ளம் படைத்தவன்) என வழங்குகிறார். எஞ்சிய செயல்கள் அனைத்தும் நன்மை பயக்காதவை யாகும்.

''அகிலருமாத்ம சுகத்தினாய் பிரயத்னம்
சகலவுமிங்கு சதாபிசெய்திடுன்னு''

அனைவரும் சுகமாக வாழவேண்டும் என்றே விரும்பு கிறார்கள். உணர்ச்சி வயப்படும் மனிதன், செயல்கள் புரிந்த பின்னரே சிந்திக்கிறான். 'சிந்தனை ஜீவி' இதற்கு மாறாக இருக்கிறான். அவன் சிந்தனை செய்தபின்தான் செயல்படுகிறான். நமது செயல்களே நமக்கு பலன்களை அளிக்கின்றன. ஒருவனது தீய எண்ணங்கள் அவனுக்கு துன்பமயமான வாழ்க்கையையும், தூய்மையான சிந் தனைகள் இன்பமயமான வாழ்க்கையையும் ஈட்டித் தரு கின்றன. இவையனைத்தும் மனிதனின் அனுபவப் பாடங்கள் அல்லவா! மனிதன் அனைவரின் நோக்கமும் இன்ப வாழ்க்கை எனில், நாம் ஒவ்வொருவரும் நம்மை அன்பு செலுத்துவதுபோல், அயலாரையும் நாம் நேசிக்க வேண்டும். சுருங்கச் சொல்லின் நமது சுகத்தையும் நன் மையையும் எண்ணி அன்னியருக்கு நன்மை செய்ய விரும்ப வேண்டும். இந்த வாழ்க்கை ரகசியங்கள்தான் குருதேவரின் கவிதைகளின் அழியாக் கருத்துக்கள்.

''அவனிவனென்னறி யுன்ன தொக்கை யோர்த்தா —
லவனியிலாதிம மாயொராத்மரூபம்
அவன வனாத்ம சுகத்திநா சரிக்கு
ன்னவ, யபரன்னு சுகத்திநாய் வரேணம்.''

அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாக உள்ள சக்தி, உண்மை இறைவனின் ஆத்ம ஸ்வரூபமானது. ஒரு வன் தனது நலனை எண்ணி செய்யும் கருமம், அன்னி யனின் குணமும், நலமும் ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாத மனிதன், சமூகத்திலி ருந்து ஒதுக்கப்பட்டு தனியாக நிற்பதைக் காணலாம். இதை மேலும் தெளிவுபடுத்துகிறார் குருதேவர்.

''ஒருவனு நல்லது மன்னிய நல்ல ல்லம்சே —
ற்ப்பொரு தொழிலாத்ம விரோதி யோர்த்திடேணம்
பரனு பரம் பரிதாப மேகிடுன்னோ
ரெரீ நரகா ப்தியில் வீணெரிஞ்ஞீடுன்னு.''

ஒருவனது வினையின் பயன் அவனுக்கு மாத்திரம் குணத்தையும், அயலானுக்கு தீமையையும் தோற்றுவிப்ப தாக இருப்பின், அது ஆத்ம விரோதத்தை ஏற்படுத்தும். மற்றவர்களை துன்பப்படுத்துபவர் எப்பொழுதும் நரகத் தீயில் வெந்துகொண்டிருப்பார்கள். நமது அனைத்துச் செயல்களும், நன்மையானாலும், தீமையானாலும் அதற்கு ஒரு பிரதிபல்ன் இயற்கை நமக்கு வழங்குகிறது. இந்த பலன் நமது செயலைப் பொறுத்திருக்கும். இதை நன்குணர்ந்த எந்த மனிதனும், துரோகச் செயல்கள் செய்ய ஒருபோதும் முற்படமாட்டான். அவன் ஆத்ம அறிவைப் பெற்றவனாக இருப்பான். ஆத்ம அறிவு பெறாதவன் செயல் எவ்வாறு இருக்கும்?

''யதாத்ம வித்யா சங்கோச
ஸ்ததா வித்யா பயம்கரம்
நாம ரூபாத்மனா நியர்த்தம்
விபாதீக பிசாசவத்.''

எப்போது ஒருவனுக்கு ஆத்ம ஞானம் ஏற்படவில் லையோ, அப்போது அவன் மனம் கடிவாளம் இல்லாத குதிரையைப் போல எங்கு வேண்டுமானாலும் சென்று எந்தவிதச் செயல்களும் செய்கிறான். ஒரு சாத்தானைப் போல மிகக் கொடிய செயல்கூட சில வேளையில் செய் ய்க்கூடும். ஒருவருக்கும் தீங்கிழைக்காத மனித வாழ்க் கைத்தான அகிம்சா வழியை பின்பற்றுவதாக இருக்கும். ஆசை மிகுதியாகுமளவிற்கு தேவைகளும் அதிகரிக்கும். அவைகளை நிறைவேற்ற வழிகள் இல்லாமல் போனால் நெறி தவறிய வழியை சுயநலத்திற்காக பின்பற்ற வேண்டி

வரும். இது வாழ்க்கையை சீரிய முறையில் திட்டமிடப் படாததால் ஏற்படும் விளைவு ஆகும். அதனால் மனக் கட்டுப்பாட்டுடன் ஆசைகளை தெளிவுறத் தெரிந்து நிறைவேற்ற மனிதன் முற்படவேண்டும்.

ஒரு மனிதனின் உண்மையான வாழ்க்கையின் நோக்கம், சத்தியத்திற்கு சான்று பகருதல் ஆகும். அவ்வாறு உண்மைக்கு சாட்சியம் கூறுபவன் என்ன சொன்னாலும், செய்தாலும் அதற்குரிய நற்பயனை கண்டடைவான். அவன் பொருள் ஆசை இல்லாதவனாக இருப்பான். அன்னியனின் பொருளை திருடவேண்டும் என்ற எண்ணமோ, அந்த செயலோ அவனிடம் இராது. மனித மனம் மிக உயர்ந்த மகிமை உள்ளதாகும். அது அபார சக்தியின் இருப்பிடமாகும். அதனை சீர்கெட வைப்பது மது அருந்துவதாலும், விபச்சாரம் செய்வதாலும் ஆகும். மதுவும், அதுபோன்று போதையை உருவாக்கும் எந்த பொருளும் பயன்படுத்தக் கூடாது. மனத்தின் நற்குணங்களுக்கு அது தீங்கு ஏற்படுத்தும். மேலும் அது நெறி தவறிய செயல்களுக்கும் மாபாதகங்களுக்கும் வழி வகுக்கும்.

அதுபோன்று ஒரு ஈனச்செயல் விபச்சாரம் ஆகும். ஒருவனின் அனைத்து குணங்களையும் சீர்குலைத்து ஆபத்தை ஏற்படுத்த இந்த செயல் வழிவகுக்கும். இது ஒருவரது தன்மானம், அந்தஸ்து, அறிவு, கௌரவம் ஆகிய அனைத்து நற்பண்புகளையும் நாசம் ஏற்படுத்துவது மட்டுமின்றி சரீரத்தையும் சீர்கெடச் செய்கிறது. இவ்வாறு அகிம்சை, உண்மை, பிறர் பொருள் மீது ஆசையில்லாமை, மது அருந்தாமை, விபச்சாரம் செய்யாமை ஆகிய ஐந்து தர்மங்கள் மனித வாழ்வின் தர்ம நெறிகளாகும் என குருதேவர் அருளினார்.

வாழ்க்கையின் நோக்கம் என்றால் என்ன? அதைப் பற்றி யோசனை செய்பவர் உண்டா என சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. பிறந்து விட்டோம். உயிர் இருப்ப தால் வாழ்கிறோம். காலங்கள் சென்றபின் வாழ்க்கை மரணத்தில் முடிகிறது. இந்தக் காலத்திற்குள் எதற்காக வாழ்ந்தோம் என்றோ, மரணம் என்றால் என்ன வென்றோ, தெரிந்த பின் மண்ணில் மறைந்தவர்கள் எத் தனை பேர் என்றோ சந்தேகிக்க வேண்டியுள்ளது. ஒரு வனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் உள்ள அவனது வாழ்க்கை ஏடுகளைப் புரட்டினால், கர்மங்கள் வாயி லாக அவனிடமிருந்து ஏற்பட்ட நன்மை, தீமைகளை அறியலாம். அவற்றில் நற்செயல்களால் மனநிம்மதியும், அமைதியும் பெரும் மனிதன் பேறு பெற்றவன் ஆவான். திருப்தியும், அமைதியும் பெற்ற ஒரு வாழ்க்கைக்கு ஆதா ரமாக இருப்பது கடினமாக உழைத்து கடமை ஆற்று வதற்கான துணிவும் அதற்கான சூழ்நிலையை சந்தர்ப் பத்திற்கேற்ப உருவாக்குதலும் ஆகும். சொந்தக் கடமை களைச் செய்வதற்கான மனவலிமையும், திறமையையும் படைத்த ஒருவன் அஞ்ஞா நெஞ்சம் படைத்தவனாக இருப்பான். வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு முனைப் புடன் செயல்படுமாறு குருதேவர் அழைக்கிறார்.

அஞ்சா நெஞ்சம் ஒரு வீரனின் லட்சணமாகும். எத னால் நமக்கு அச்சம் ஏற்படுகிறது? எல்லாம் ''இண்டு என்ற எண்ணம் ஏற்படுவதால்தான்.'' மனிதர் அத்வைத (இரண்டல்லாது ஒன்று) த்திலிருந்து தொய்தத் (இரண்டு) திற்கு தாண்டிச் செல்லும்போதுதான் அச்ச உணர்வு ஏற் படுகிறது. நாம் எல்லோரும் ஒரே ஆத்ம சகோதரர்கள் என எண்ணினால், பின் மற்றொருவனை அன்னியன் என்ற எண்ணம் ஏற்படாது. இந்த இரண்டு என்ற உணர்வு தான் 'போதாது' என்ற நிலைக்கும், 'அமைதி' யற்ற நிலைக்கும் காரணமாக இருப்பது. மரணத்தை எண்ணி அச்சம் கொள்ளாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். வாழ்க்கையின் பால் ஏற்படும் அதிகமான பற்றுதான் மனிதனுக்கு மரணபயத்தை ஏற்படுத்துகிறது.

*''மரணவு் மில்லா பிறப்புமில்லா வாழ்வும்*
*நர சுரராதியுமில்லா: நாமரூபம்*
*மருவில மர்ந்த மரீசிநீருபோல் நீ —*
*ல்பொரு பொருளாம் பொருளில்லிதோர்த்*
*திடேணம்''*

குருதேவரின் போதனைகளை நம்பினால் அச்சம் ஏற்படுவதில்லை. இங்கு ஒரு புவியியல் ஞானியாக திகழ்கிறார் குருதேவர். இப்பூவுலகில் உள்ள எல்லாமே மாற்றம் ஏற்படும் தன்மையுடையதாகும். எவற்றிற்கும் மரணமோ, பிறப்போ ஏற்படவில்லை. அப்படி ஏற்படுவதாகத் தோன்றுவது எல்லாம் பாலைவனத்தில் கானல் நீர் உண்டெனத் தோன்றுவதுபோல, தற்காலிக நிகழ்ச்சி தான் என குருதேவர் நினைவூட்டுகிறார். இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனிதன் பின்னர் ஏன் பயந்து வாழவேண்டும்? ''மனிதன் அச்சமின்றி வாழ வேண்டும். உலகத்தின் போக்கையும், சூழ்நிலையும் தெரிந்து கொண்டு வாழ்க்கையை அமைப்பவனாக இருக்க வேண்டும். கடின உழைப்பு அவமானமல்ல. அயலானை நம்பி வாழ்வதுதான் பாவமாகும். ஆத்ம கௌரவத்தை கடைப்பிடிப்பவன் அயலானை நம்பி வாழ்வதை விரும்பமாட்டான். கல்வியால் அறிவும், கடின உழைப்பால் பொருளும் ஈட்டி சுதந்திரமாக வாழுங்கள்'' என்ற குருதேவர் உபதேசம் மானிட வாழ்வின் கடமை நெறிகளை நமக்கு புகட்டுகிறது.

மனிதன் தினசரி வாழ்க்கையில் பிரார்த்தனைக்கு தனிச் சிறப்பு உண்டு. ஸ்ரீ நாராயண குருதேவரின் பெரும்பாலான கவிதைகள், பிரார்த்தனை வடிவில் வரையப் பெற்றவையாகும். மனத்தில் ஏற்பட்டுள்ள மாசினை களைவதற்கு பிரார்த்தனையால் முடிகிறது. உலகில் உள்ள மத உபதேசங்கள் அனைத்தும் பிரார்த்தனையுடன் கூடிய தினசரி வாழ்க்கைக்கு முக்கியத்துவம்

அளிக்கிறது. ஸ்ரீ நாராயண குருதேவரின் தர்மநெறிகளும் அதற்கு மாறுபட்டதல்ல. இறைவழிபாடு (பிரார்த் தனை) எல்லா இல்லங்களிலும், எல்லா இதயங்களிலும் நடைபெற வேண்டும் என்ற குருதேவரின் வசனங்கள் நினைவிற்கொள்ள வேண்டியதாகும்.

ஸ்ரீ நாராயண குருவின் தர்மபோதனைகளால் கவர்ந்து ஈர்க்கப்பட்ட மக்கள் குருதேவரின் முதல் பிரதிஷ்டை இடமான அருவிப்புரம் கோவிலை மையமாகக் கொண்டு ஒரு சங்கத்தை கோவில் நிர்வாகத்திற்காக அமைத்தார்கள். இந்த கோவில் சங்கம் அமைத்ததன் நோக்கத்தை மேலும் விரிவடையச் செய்து மதத்திற்கும், சமூகத்திற்கும் பயன் ஏற்படும் வகையில் திருத்தி அமைக்க குருதேவர் விரும் பினார்.

இதன் பயனாக 1903-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்ரீ நா ராயண தர்ம பரிபாலன யோகம் (S.N.D.P.) நிறுவப்பட்டது. இதன் மூலமாக, குருதேவரின் அறநெறித் தத்துவங்கள், வாழ்க்கையில் பின்பற்றுவதில் அன்றும், இன்றும் வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டு என்றும் நினை வில் கொள்ளும்படியான மாறுதல்களை மனித சமூகத் தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

மனித பண்புகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வழங்கப்பட்ட இத்தகு அறநெறித் தத்துவங்கள்தான், குருதேவரிடமிருந்து நமக்கு கிடைக்கப்பெற்ற பேறுகள் ஆகும்.

## அத்தியாயம் XI

### மகா சமாதி

1855-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ம் நாள் சதயம் நட்சத்திரத்தில் கேரள மாநிலம் செம்பழந்தியிலுள்ள ஒரு சிறு வீட்டில் உதயம் பெற்ற இந்தப் புனித ஜோதி, இடைவிடாது கர்ம நிஷ்டைகள் புரிந்து நறுமணம் கமழும் பூப் போன்று அருள்மணம் பரப்பியது. அந்த அழிவற்ற பூவின் நறுமணம் உலகம் முழுவதும் பரவி, அதன் புனிதமும் இயற்கைக்கு அப்பாற்பட்டதுமான அபார சக்தியும், வாய்ந்த திவ்விய தேனமுதின் தீஞ்சுவையைப் பருகி மகிழ்வதற்கு வருகை அளித்தவர்கள் பலர்; அன்று பாரத நாட்டின் புகழ் ஈட்டி இருந்த உலக மகாகவி ரவீந்திரநாத் தாகூரும், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளும் குருதேவரிடம் வருகை தந்தவர்களில் முக்கியப் பிரமுகர்கள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் 73 ஆண்டு காலம் அருட்செல்வத்தை அகிலமெல்லாம் பரப்பிய அந்த புனிதரின் வாழ்க்கைச் சம்பவங்கள், மனிதர்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. குழந்தைப் பருவம் முதல் படிப்படியாக வளர்ந்து யோக நிஷ்டை மூலமாக ஞானஒளி பரப்பி, பின்னர் உலக உய்வுக்கான வழிகளை ஆராய்ந்தறிந்து ஆத்ம சக்தியின் மூலமாக தமது வாழ்வைப் பிறருக்கு பலிப்பொருளாக காணிக்கை வைத்த ஒரு தியாகச் செம்மலின் வாழ்வினை, ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கை வரலாற்று அதிகாரங்களில் நாம் பார்க்கக் காண்கிறோம். அன்னாரின் 'தரிசனமால'யிலுள்ள நிர்வாண தரிசனத்தில், பல உண்மைகளை நமக்கு உணர்த்துகிறார்.

காணககூடிய தத்துவங்களைத் தனது வாழ்வின் மூல மாக பிரதிபலிக்கச் செய்கிறார் ஸ்ரீ நாராயண குருதேவர். அனைத்து ஜீவராசிகளுக்கும் ஜீவனாக விளங்குகின்ற பரப்பிரம்மத்தில் ஞானஸ்வரூபமாக உள்ள ஜீவுன் முக்தியே பிரம்ம வித்து. அந்த பிரம்ம வித்தானது ஞானத்தீயில் அனைத்தையும் தகனம் செய்கிறது. தாமே இறை அனுபூதி வாயிலாக தெரிந்து ஜீவராசிகளின் நன் மையை எண்ணி கர்மங்கள் புரிந்து வந்த ஒரு மகாத்மா வாக இருந்தார் ஸ்ரீ நாராயண குருதேவர்.

ஒருவன் தனது வாழ் நாளில் மனித நன்மைக்காக தன் னலம் கருதாமல் சேவை புரிந்தால் அவனுடைய வாழ் நாளுக்குப் பின்னரும் அவன் மனித மனங்களில் குடி கொண்டிருப்பதைக் காணலாம். மரணத்திற்கு மாற்று மருந்து மகத்துவமிக்க மனித ராசியுடன் ஐக்கியமாகு தலாகும். உலக வரலாற்றை புரட்டிப் பார்த்தால், மிக சில மகான்கள் மட்டுமே அவ்வாறு பெற்றுள்ளனர். குரு தேவரின் ஜீவகாருண்யம் மற்றும் அன்னியருக்கு உதவி புரியும் செயல்கள் அனைத்தும் பிரதிபலனை இச்சி யாமல் உள்ள நிஷ்காம கர்மத்தில் வேரூன்றியவை களாகும். எனவேதான் அந்த புனிதர் இன்றும் வருங் காலத்திலும் ஏன் காலம் உள்ளளவும் மனித மனத்தில் வழிபடும் தெய்வமாகத் திகழ்கின்றார் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

குருதேவரின் பிறப்பும் அன்னாரின் வாழ்க்கையில் ஏற்பட்ட விசேட அனுபவங்களும் மனிதனுக்கு அப்பாற் பட்ட திவ்விய ஜோதியின் சுடரொளிகளாக திகழ் கின்றன. இன்றும் பிறந்த பின் செய்த விரதானுஷ்டங்கள் தவநிஷ்டைகள் வாயிலாக இப்பூவுலகில் புனித கருமங் கள் ஆற்றிய பின், அந்த திவ்விய ஆத்மாவின் வாழ்விற்கு முடிவுக்கான காலம் நெருங்கியது.

வாழ்வின் முடிவு என்றால் என்ன? ஒரு இல்லறவாசி யின் வாழ்க்கையின் முடிவு மரணமாக இருந்தால், ஒரு ஞானியான மகாத்மாவிற்கோ அது 'நிர்வாண'மோ, 'முக்தியோ' ஆக இருக்கும் அஷ்டாங்க யோக நிஷ்டை கள் மூலமாக முதிர்ச்சி அடையும் ஒரு யோகீஸ்வரரின் முடிவு பற்றி தனது 'நிர்வாண தர்சன'த்தில் குருதேவர் கூறுகிறார்.

நாம் காணும் இந்த பிரபஞ்சம், ஆத்மாவினால் தன் னைத்தானே ஒளிமயமாக்குவதாகும். அதனால் ஒதுக் கப்படுபவர்கள் என்றோ, ஏற்றுக் கொள்ளப்படுபவர் கள் என்றோ இல்லை. இந்த உண்மையை மனதிற் கொண்டு தியான சம்பந்தமான எல்லா கர்மங்களி லிருந்தும் ஓய்வு பெற்று நிர்வாணத்தை அடைய வேண்டும்.

ஒரு இல்லறவாசியான மனிதனுக்கு இவ்வுலகில் பல வற்றையும் ஏற்கவும், துறக்கவும் சந்தர்ப்பம் ஏற்படும் போது, ஒரு ஞானி ''பிரம்மம், சத்யம், ஜெகன்மித்யா'' (பிரம்மம் உண்மை, உலகம் மாயை) எனத் தெரிந்து கொண்டால், பின்னர் ஏற்கவும், துறக்கவும் எதுவு மில்லை. ஆத்மா மட்டுமே உண்மையானது என்ற அசை யாத மன உணர்வு ஏற்பட வேண்டும். இப்பூவுலகம் முழு வதும் ஆத்மா அல்லது இறைவனின் பிரதிபலிப்பு மட் டுமே என தியானத்தில் உள்ளுணர்வு உறுதியாக ஏற்பட வேண்டும். ஆத்மாவின் உண்மை தரிசனம் புலப்படாமல் இருப்பதால், ஐம்புலன்கள் அதனை தெரிவதில்லை. எனினும், பார்வையாலும், ஸ்பரிசத்தாலும் தெரிந்து கொள்ள முடியாத உப்பு, தண்ணீரில் இரண்டறக் கலந் திருக்கிறது என நாவினால் தெரிந்து கொள்வதுபோல, இந்த பூத உடலில் உள்ள சத் அல்லது ஆத்ம உணர் வினை ஒரு ஞானி, மனத்தின் அனுபூதியினால் தெரிந்து கொள்ள முடியும். அந்த அனுபூதி விஷேச மகிமை உடையது.

''நிர்வாண தர்சனத்தில்'' குருதேவர் கடைசியாக அருளியிருக்கிறார். பிரம்மம் ஒன்றுமட்டுமே உள்ளது. மற்ற் எதுவுமே இல்லை. சஞ்சலமற்ற சிந்தனையில் இந்த உண்மையை மனத்தில் உறுதியுடன் நிலைப்பெறச் செய்த அறிஞரான பிரம்ம ஞானி தொய்த்ததில் (எத்வும் இரு வகை என்ற உணர்வு) இருந்து விடுதலைப் பெற்று நிர்வாண நிலையை அடைய வேண்டும். இந்த ஆற்றல் மிக்க பெறுதற்கரிய நிலையைத்தான் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையின் முடிவில் காண்கிறோம்.

1928-ம் ஆண்டில் குருதேவர் உடல்வலிமை குன்றி படுக்கையில் கழித்தார். முக்குணங்களால் கட்டுப்படுத் தப்பட்டது இந்த உடல். இந்த குணங்கள் சம அளவில் நிலை கொள்ளும்போது, சரீரம் வலிமை உள்ளதாக இருக்கும். இதன் சமநிலையில் மாற்றம் வரும்போது, உடல் வலிமை குன்றி நலிவுற்ற நிலை ஏற்படும். இயற் கையின் கால நிலைகளுக்கேற்ப, எந்த உடல் நலமும் மாற்றத்திற்கு ஆட்படுத்தப்படுவதால் நடப்பது நடந்தே தீரும் என்ற உண்மையை குருதேவர் பாடல்வழி கூறினாா. கூறினார்.

இதற்கு முன் பலமுறை உடல்நலம் பாதித்திருந்த போதிலும் ஒருபோதும் கவலைப்படும்படியாக எதுவும் குருதேவருக்கு ஏற்படவில்லை. ஆனால் இந்தக் கால கட் டத்தில் குருதேவரின் நிலைமை கவலைக்கிடமாக இருந் தது. அடிக்கடி எற்பட்ட மூலநோய் கடுமையாகி துன் பத்தை ஏற்படுத்தியது. சீடர்களின் எண்ணப்படி போதிய மருந்துகள் அருந்திய பின்னரும் நோயின் நிலையில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அவ்வாறு இருந்த போதிலும் உடல் நோயை மறந்து உலக நன் மையை எண்ணி தமது சீட சிரோன்மணிகளிடம் சகஜமான முறையில் அறிவுரைகளையும், உபதேசங்களையும் அருளிக்கொண்டேயிருந்தார். மனித சமூகத்தில் ஜாதிக்

கொடுமை அறவே அகன்று எல்லா மனிதர்களும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் என்ற உணர்வு பெற்று வாழ்ந்து, ''ஒரே உலகம், ஒரே மக்கள், ஒரே நாடு'' என்ற சமத்துவ உணர்வின் அடிப்படையில் உலகம் உய்ய வேண்டும் என்ற எண்ணம் திருவடிகளின் இதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது என்பதை அன்னாரின் உரையாடல்கள் தெளிவுபடுத்து கிறது.

இதுபோன்ற எண்ணங்கள் ஒரு பக்கம் ஏற்படுகையில், மறுபக்கம் பூத உடல் நோயினால் பீடிக்கப்பட்டு நலிவு ஏற்படுத்திக் கொண்டிருந்தது. சீடர்களின் எண்ணங் களுக்கு ஏற்ப குருதேவர் நோயினின்றும் நிவாரணம் பெற கொஞ்ச நாட்கள் பாலக்காட்டிலும், பின்னர் சில நாட்கள் சென்னையிலும் தங்கினார்கள். அப்போது இருந்த டாக்டர் சோதனைகள் பல செய்து இயன்ற அளவு சிகிச்சை அளித்த பின்பும், நாட்கள் செல்லச் செல்ல நோய் அதிகரித்தது. சிகிச்சை பலனளிக்காத நிலையில் ஸ்வாமிஜியை சிவகிரிக்கு மீண்டும் அழைத்து வர வேண்டியதாயிற்று.

இந்த நாட்களிலும், அந்த பெருந்தகையின் கருணை உள்ளம் என்றும் நினைவிற்கொள்ள வேண்டியதாக இருந்தது. 1929-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ம் நாள் கடைக்காவூர் அருகாமையிலுள்ள வைக்கம் என்ற ஊரி லிருந்து ஊமையாக பேயினால் பாதிக்கப்பட்டு உடல் நலிவு ஏற்பட்டு நடப்பதற்கு கூட முடியாமல் அவதியுற்ற ஒரு வாலிபப் பெண்மணியை நோய் குணமடைந்து உடல் நலம் பெற குருதேவர் சன்னிதியில் கொண்டுவந்திருந் தனர். 15 வயது மட்டும் அடைந்திருந்த பாகீரதி என்ற பெயருடைய அந்தக் குழந்தையின் தந்தையான திரு. மார்த்தாண்டன் மற்றும் அவரது உறவினர்களும், குரு தேவரின் ஆசிபெற்றால் குழந்தைக்கு உடலில் தோன்றிய

நோய் குணமாகும் என்று உறுதியான நம்பிக்கையுடன் வந்திருந்தனர். குழந்தையைப் பார்த்த உடனேயே குரு தேவர் அவளை எழுந்து நடப்பதற்கு அருளினார். குரு தேவரின் அருள்மொழியைக் கேட்டவுடனேயே தனக்கு ஏற்பட்ட பலவீனம் அகன்று அந்த குழந்தை எழுந்து நடந்தது. குருதேவருக்கு கண்ணீர் மல்க நன்றி வணக்கம் செலுத்திய பின் உறவினர்களுடன் ஊர் திரும்பியது. தனது வாழ்நாளின் கடைசி நேரத்தில் கூட, உடல்நலம் குன்றியிருந்த போதிலும் குருதேவரின் ஆத்ம நலம் சைதன்ய பூர்ணமாகவும், அபாரமான சக்தியுடனும், சாந்திப் பொலிவுடனும் விளங்கி இருந்தது என்பதற்கு வேறு சான்று எதுவும் தேவையில்லை.

இவ்வாறு நாட்கள் சென்றன. ஆனால் குருதேவரின் நோய் மட்டும் தணியாமல் அதிகரித்தது. குருதேவரின் துயரமான இந்த நிலையைக் கண்டு கண்கலங்கிய சீடர் களின் முகத்தோற்றத்தைக் கண்டு அவர்களுக்கு இவ் வாறு ஆறுதல் வார்த்தைகள் கூறினார். நமக்கு நோய் எதுவும் இல்லை. எவருக்கும் கிடைக்க முடியாத ஆறு தலும், ஆனந்தமும் தோன்றுகிறது. நாம் அழிவதில்லை. இது அழியும் அல்லவா என உடம்பைப் பற்றிக் கூறியிருந் தார். உயிரால் இழப்பு ஏற்படுத்தப்பட்ட இந்த உடலுக்கு மட்டுமே மரணம் ஏற்படுகிறது. ஜீவன் மரிப்பதில்லை என்ற சாந்த்தோக்யோப நிஷத்திலுள்ள மந்திரத்தின் பொருளை குருதேவர் தெளிவுபடுத்துவதாக இருந்தது. குருதேவரின் ஆத்மோபதேச சதகத்திலும் கூறியிருப்பது நினைவிற் கொள்ள வேண்டியதாகும். அந்த நாட்களில் குருதேவரின் உடம்பு சுமார் 9 மாத காலமாக மிகவும் இளைத்திருந்தது. இவ்வாறு இருப்பினும் திவ்விய ஜோதிச் சுடர் விடும் குருதேவரின் முக அருட்பார்வையில் எவ்வித குறைபாடும் இன்றி முன் எப்போதும் இருந்ததை விட இப்போது அந்த அற்புதப் பேரொளி புதுப்பொலிவுடன்

பிரகாசித்திருந்தது. ஒரு வருட யோகியிடம் சுடர்விடும் ஆத்ம சைதன்யமும் கண்களின் கலங்கமற்ற ஒளியும், பார்வையும் எவ்வித 'வீரமனம்' படைத்தவனையும் தம் வசம் ஈர்க்கும் வலிமையுள்ளது. முகக் கமலமும் எப்பொழுதும் பிரகாசித்திருந்தது.

சமாதி அடைவதற்குச் சில நாட்களுக்கு முன் குருதேவரிடம் எந்த நோயும், தொந்தரவும் தென்படவில்லை. ஒருவனுக்கு மரண வேளை நெருங்கும்போது, வார்த்தை மனதிலும், மனது பிராணனிலும், பிராணன் தேஜஸிலும், தேஜஸ் தேவதையிலும் நிலைகொள்ள வேண்டும் என உபநிடதத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீ நாராயண குருதேவர் சமாதி அடைவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்புதான் பேசும் சக்தியை இழந்திருந்தார். பெருமைவாய்ந்த அந்த முடிவு நெருங்கியது. 1928-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் நாள் வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்க தியானத்தில் மூழ்கிய நிலையில் குருதேவர் வர்க்கலை சிவகிரி மடத்திலுள்ள வைதீக மடத்தில் வைத்து மகா சமாதி எய்தினார்.

ஆத்ம ஞானியாகத் திகழ்ந்த ஸ்ரீ நாராயண குருதேவர் சித்தி பெற்றபின் எஞ்சிய காலங்களில் தன்னலமின்றி மனித சமுதாயத்தின் நன்மைக்காக தத்துவ சிந்தனைகள் மற்றும் புனிதமான வாழ்க்கையால் கர்மம் புரிந்து தம்மை மனிதர்களின் அன்புக்கு காணிக்கையாக்கினார். தாம் போதித்த தத்துவ சிந்தனைகளை புத்தக வடிவில் வழங்கி வருங்கால தலைமுறைக்கு பயன்படுவதற்கு தர்ம சங்கத்தை உருவாக்கினார்.

குருதேவர் சமாதி எய்திய அன்று சன்யாசிகளும், பிரம்மச்சாரிகளும் உணவும், தூக்கமும் துறந்து உபநிடதம், பகவத்கீதை ஆகியவை பாராயணம் செய்து பிரார்த்தனையில் கழித்தனர். பூஜை ஆராதனையும் மேற்கொண்டனர்.

மறுநாள் பிற்பகல் ஒரு மணிக்கு அபிஷேகம் செய்த தற்குப் பின் அன்று மாலை ஐந்து மணிக்கு சிவகிரி குன் றின் மீது சாஸ்திர விதிகளின்படி தயார் செய்யப்பட் டிருந்த குழியில் சமாதி விதிகளின்படியான கர்மங்களுக் குப்பின் ஏராளமான மக்களும், துறவிகளும், பிரம்மச் சாரிகளும் சூழ ஒருமித்த இறை கீதங்கள் பாட வாத்திய இசை முழங்க சமாதி மிகுந்த பக்திப் பரவசத்துடன் நிகழ்த் தப்பட்டது. இறுதியாக மூடிக்கல் ஸ்தாபிக்கும் வரையில் குருதேவரின் பூதவுடலின் தலைப்பகுதியை பக்தப் பெரு மக்கள் தரிசிக்க முடிந்திருந்தது. பின்னர் பிரம்ம முகூர்த் தத்தில் ஆராதனைகளுடன் மூடிக்கல் ஸ்தாபிக்கப் பட்டது. தொடர்ந்து பூஜையும், பிரார்த்தனையும் நடத் தத் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் சிவகிரியில் ஸ்ரீ நாராயண குருதேவரின் சமாதி யில் நிலைப்பெற்றிருந்த தற்காலிக மண்டபத்தை அகற்றி இப்போது, மிகவும் எழில் வாய்ந்த கண்கவர் கலை நுணுக்கங்களுடன் அபார சாதனையோடு வடிவமைத்து சாந்தியை அள்ளி வழங்கும் புனிதமான ஒரு மஹா சமாதி மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிரந்தர ஞாபகார்த்தமாக இலங்கும் இந்த மஹா சமாதி மண்ட பத்தில் மகாத்மாவாக விளங்கிய ஸ்ரீ நாராயண குரு தேவரின் பூதவுடல் நிரந்தர அமைதி கொள்கிறது. ஞான ஜோதியாக விளங்கிய குருதேவரின் வாழ்க்கையும் அன் னாரின் போதனைகளும், தத்துவச் சுடர்களும் அறிவாற் றல் படைத்த மனிதர்களின் ஏற்றமிகு வாழ்க்கைக்கும், புதுமைக்கும், புரட்சிமிக்க மாற்றங்களை மனித சமு தாயத்திற்கும், உலகிற்கும வழங்கும் கலங்கரை விளக்கங் களாக திகழ்ந்து வருகின்றன என்பதில் ஐயமில்லை.

''அஸதோமா ஸத்கமயா
தமஸோ மா ஜோதிர்க்கமயா
மிருத்யோர்மா அமிர்தம் கமயா
லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து.''

ஓம்

பூர்ணமத; பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்சியதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ணமேவா வசிஷ்யதே
ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி

## குரு தேவரின் பொன்மொழிகள்

1. ஒரே ஜாதி, ஒரே மதம், ஒரே கடவுள் மனிதருக்கு. மதம் எதுவாயினும் மனிதன் முன்னேறினால் போதும். எல்லா மதங்களின் உயிர்சத்தும் ஒன்றே.

2. ஜாதியைப் பேசாதே. ஜாதியை கேட்காதே. ஜாதியை நினைக்காதே.

3. ஒருவர் செய்யும் கருமம் மாற்றார் நன்மையை நோக்கமாக இருத்தல் வேண்டும்.

4. மது — அது விஷம். அதைத் தயாரிக்கவோ, விற்கவோ, அருந்தவோ கூடாது.

5. சங்கம் அமைத்து சக்தி பெறுங்கள். கல்வியால் விழிப்படையுங்கள்.

6. தொழில் செய்து முன்னேறுங்கள். நாம் அனைவரும் ஆத்ம சகோதரர்களே.

7. குறித்த காலத்தை கடைப்பிடிக்கப் பழகுங்கள்.

8. நற்செயல்கள் செய்து வருங்காலத்தைப் படையுங்கள்.

9. நீங்கள்தான் ஆத்மாவென நம்புங்கள்.

10. கர்மம் புரிவது உங்கள் புலன்களே, ஆத்மா அதற்கு சாட்சியாக இருந்து பலன் வழங்குகிறது.

11. ஐம்புலன்கள் பலவீனப்படும் போது, அழிவது உடல் மட்டுமே. ஆத்மாவிற்கு அழிவு இல்லை என நம்புங்கள்.

12. ஆத்மாவைத் தாங்கும் ஊர்தியான உடம்பைப் பேணுங்கள்.

13. மரணத்தைக் கண்டு பயப்படாதீர்கள்.

14. நமது பெருமைக்கும் சிறுமைக்கும் காரணம் நம் செயல்களே.

15. எப்போதும் உலகைப் படைத்த இறைவனை எண்ணி வழிபடுங்கள்.

16. உடையாலும், சமயத்தாலும் வேறுபாடு இருக்கலாம். ஆனால் இறைவன் படைப்பில் நாம் அனைவரும் சமமே.

## அதிகாரம் XIV

## குருதேவரின் வாழ்க்கைக் குறிப்புகள்

1. அவதாரம்
கேரளாவில் உள்ள
திருவனந்தபுரம் அருகில்
உள்ள செம்பழந்தி எனும் — 28.8.1855
கிராமத்தில். தாய் — செவ்வாய்
குட்டியம்மை. தந்தை மாடன் — கிழமை காலை
ஆசான். — 6.15 மணிக்கு

2. கல்வி
சமஸ்கிருதம், தமிழ்,
மலையாளம் ஆகிய
மொழிகளில் புலமை.
புதர்களில் தனிமையில்

| | |
|---|---|
| தியானித்தல். சமஸ்கிருதம் மற்றும் வேதாந்தக் கல்வி வாரணப்பள்ளியில் குன்னம் பள்ளிராமன் பிள்ளையிடம் | *1860 - 1880* |
| 3. கல்விச்சாலை அமைப்பு நாணு அசான் எனப் பெயர் சூட்டி செம்பழந்தி, அஞ்சு, தெங்கு ஆகிய ஊர்களில் கல்விச்சாலை அமைத்தல். | *1881-1882* |
| 4. துறவு குடும்பத்தைத் துறந்து துறவியாக புண்ணிய இடங்கள், கோவில்கள் தரிசித்தல் | *1882-1883* |
| 5. தவம் புகழ் பெற்ற யோகீஸ்வரர் தைக்காட்டு ஐயாவு அவர்களை சந்தித்து யோகப் பயிற்சி மற்றும் கன்னியாகுமரியிலுள்ள மருத்துமலையில் தவம் புரிதல். அருவிப்புரம் குகைளில் தவம் புரிதல். ஸ்ரீமத் சிவலிங்க சுவாமிகள் சீடராதல் | *1884-1887* |
| 6. சிவலிங்க பிரதிஷ்டை அருவிப்புரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை . சிவராத்திரியில் அங்கு சமஸ்கிருத பாடசாலை அமைத்தல். | *1888* பிப்ரவரி |

எட்டு கோவில்கள் மற்றும்
பள்ளிக்கூடங்கள் அமைத்தல். 1888-1895

7. சீடர்
குமாரன் ஆசான் சீடர் ஆதல்.
கோவளம் அருகில் உள்ள
முட்டக்காட்டில் கோவில்
அமைத்தல். 1891

8. கவிதா நலம்
'அதமோபதேச சதகம.' என்ற
கவிதை இயற்றுதல் 1897

9. குருதேவரை சமய மற்றும்
சமூக சீர்திருத்தச் செம்மல்
என அரசு அறிவித்தல். 1901
ஸ்ரீ நாராயண தர்ம
பரிபாலன யோகம்
உருவாக்குதல 1903

10. மாநாடு
நீதிமன்றங்களில் குருதேவர்
செல்ல வேண்டாம் என
அரசு அறிவித்தல் — சமய
சமூக சீர்திருத்த மாநாடு —
பரவூர் அய்யங்காளி மற்றும்
தலைவர்கள் குருதேவரின்
ஆசிபெறுதல்! 1904

11. தலைமை பீடப்பணி
வர்கலையில் சிவகிரி மடம்
நிறுவுதல். 1904

12. கோவில் நிர்மாணம்
கண்ணனூர், தலச்சேரி,
கோழிக்கோடு ஆகிய

| | | |
|---|---|---|
| | ஊர்களில் கோவில்கள் அமைத்து பிரதிஷ்டை செய்தல் | 1908, 1909, 1912 |
| 13. | திருமடம் சிவகிரியில் சாரதாமடம் நிறுவுதல் | 1912 |
| 14. | சீடர்கள் ஸ்ரீ மத் போதானந்த ஸ்வாமிகள், ஸ்ரீ மத் கோவிந்தானந்த ஸ்வாமிகள், ஸ்வாமி அனுமந்த கிரி, ஸ்வாமி கிருஷ்ணானந்தா, ஸ்வாமி சங்கரானந்தா, ஸ்வாமி வித்யானந்தா ஆகியோர் குருதேவரின் சீடர்களாதல். | 1914 |
| 15. | ஆலுவாயில் அத்வைதா ஆசிரமம் அமைத்தல் | ஏப்ரல் 1914 |
| 16. | சமஸ்கிருத மொழியில் 'தர்சனமாலா' சமைத்தல் | 1916 |
| 17. | காஞ்சிபுரம், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் மடங்கள் அமைத்தல். | 1916-1928 |
| 18. | இலங்கைக்கு விஜயம் செய்தல். | செப்டம்பர் 1918 |
| 19. | திருச்சூர் அருகாமையில் கரமுக்கு என்ற இடத்தில் | |

(ஜோதி தீபம்) பிரதிஷ்டை செய்தல். 12.5.1920

20. சமஸ்த கேரள சகோதர சம்மேளனம், ஆல்வாய். 1921

21. ''ஒரே ஜாதி, ஒரே மதம், ஒரே கடவுள் மனிதர்க்கு'' என்ற அறைகூவல் முழக்கம். மதுவிலக்கு அமல்படுத்தக் கோருதல். 28.8.1921

22. உலக கவி ஸ்ரீ இரவீந்திரநாத் தாகூர், திரு. சி.எப். ஆண்ரோஸ் ஆகியோர் குருதேவரை சிவகிரியில் தரிசித்தல். 22.11.1922

23. ஆலவாயில் அத்வைத கிராமத்தில் ஆசியாவில் முதல் சமய மாநாடு நடத்துதல் — சிவகிரியில் பிரம்ம வித்யாலயம் அமைக்கக் கோருதல். பிப்ரவரி 1924

24. பிரம்ம வித்யாலயாவிற்கு கால்கோல் விழா நிகழ்த்துதல், 17.10.1925

25. வைக்கம் அறப்போராட்டம் — சிவகிரி மடத்தில் ஆச்சாரியா விநோப பாவே குருதேவரை தரிசித்தல். மார்ச் 1924

26. தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகள், திரு. சி.

| | | |
|---|---|---|
| | ராஜகோபாலாச்சாரி, தந்தை பெரியார் ஆகியோர் குருதேவரை தரிசித்தல் | *11.3.1925* |
| *27.* | ஸ்ரீமத் போதானந்த ஸ்வாமிகளை வாரிசாக நியமித்தல் | செப்டம்பர் *1925* |
| *28.* | குருதேவரின் பிரதம சீடர்களில் ஒருவரான சத்தியவிரத ஸ்வாமிகள் சமாதி அடைதல். கோயம்புத்தூர், நீலகிரி, குற்றாலம், மதுரை, பழனி ஆகிய ஊர்களுக்கு பயணம் மேற்கொள்ளல். | *1926* |
| *29.* | இலங்கைக்கு இரண்டாவது தடவை பயணம். | *30.9.1926* |
| *30.* | பிரணவப் பிரதிஷ்டை — கலவம்கோடம் கோவில் (கண்ணாடியில் ஓம் சாந்தி) | *1927* |
| *31.* | ஸ்ரீ நாராயண தர்மசங்கம் டிரஸ்டு அமைத்தல் | *9.1.1928* |
| *32.* | சிவகிரி புனித யாத்திரைக்கு அனுமதி அளித்தல். | *1928* |
| *33.* | மேற்கு நாடுகளுக்கு சீடரான நடராஜ குருவை மேற் படிப்புக்கு அனுப்புதல். | மே *1928* |
| *34.* | ஸ்வாமி ஆனந்த தீர்த்த குருதேவரின் சீடராதல் | ஜூலை *1928* |
| *35.* | சிவகிரி மடத்தில் மஹா சமாதி அடைதல் | *20.9.1928* செப்டம்பர் மாலை *3.30* |

அதிகாரம் XII

# குருதேவரின் அற்புதங்கள்

ஒரு யோகீஸ்வரன் தனது யோகப் பயிற்சியால் மனத்தை தன் வசப்படுத்துகிறான். மனத்தை தனது கட்டுபபாட்டில் கொண்டுவரும்போது, பல விசேஷ சித்திகளை பெறுகிறான். அப்படி பெற்ற சக்திகள்தாம், அற்புதமிக்க சித்திகள் ஆகும்.

இத்தகு சித்திகள் ஏற்படும்போது, சாதாரண மக்கள் வியப்பு அடைவர். இராஜ யோகிகளோ சித்திகளை செய்ய விரும்பமாட்டார்கள்; ஹடயோகிகளோ சித்திகள் செய்து பொருள் ஈட்டுவர்.

தெய்வீக சிந்தனைகளை ஊக்குவிக்க இராஜயோக பயிற்சியால் பெற்ற சித்திகளை, மற்றவர்களுக்கு காண்பித்து அதுவழியாக ஏதாவது பிரதிபலன் பெற யோகி பயன்படுத்துவதில்லை. குருதேவர் தனக்கு ஏதாவது சித்திகள் செய்ய இயலுமென ஒருபோதும் கூறியதில்லை. அதை மெய்பிக்க அற்புதங்கள் எதுவும் செய்து காண்பிக்கவுமில்லை. பக்தர்களின் நம்பிக்கையால்தான் எல்லாம் ஏற்படுகிறது என குருதேவர் சிலரிடம் கூறியிருந்தார். குருதேவரின் மகிமையை அறிந்திருந்த பலரும் அதனால் ஆச்சரியப்படவில்லை. காரணம், குருதேவரால் முடியாதது எதுவுமில்லை என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டிருந்தது.

மஹாகவி குமாரன் ஆசான் குருதேவரின் அற்புத சித்திகளை பற்றிக் கூறுவது வருமாறு:

'குருதேவரின் உறுதியான பிரமசரிய நிஷ்டையும் தவ வலிமையும், யோகப்பயிற்சியும் அற்புதமான பயிற்சிகளை வெளிப்படுத்தத் தொடங்கின. சென்ற இடங்களி

லெல்லாம் தொழுநோய் போன்ற கொடிய வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள், குருதேவரின் தரிசனம் பெற வருகை தந்தனர். பச்சிலை மூலிகையோ அல்லது புசிப் பதற்கு ஏதாவது பண்டமோ அவர்கள் திருக்கரங்களால் கொடுக்கையில், நோய் நீங்கி நலம் பெற்று சென்றனர்.

காக்கா வலிப்பு போன்ற நோயினால் தாக்குண்டவர் கள், குருதேவரின் அருள்பார்வை பெற்ற உடனேயே குணம் பெற்று திரும்பினர். பேய், பிசாசு தொல்லை ஏற் பட்ட ஏராளமான நோயாளிகளை, குருதேவர் குணப் படுத்தி இருக்கிறார். குழந்தைச் செல்வம் இல்லாத பெரிய குடும்பத்தைச் சார்ந்த பலர் குருதேவரை தரிசித்து அவரின் திருக்கரத்திலிருந்து ஏதாவது பழம் பெற்று புசித்தோ அல்லது அருள்வார்த்தை கேட்டோ விரைவில் கருத்தரித்து குழந்தைகள் பெற்றனர்.

மது அருந்தி பழக்கப்பட்டவர்கள் அவற்றிலிருந்து விடுதலை பெற்றனர். குருதேவரின் அறிவுரைகளையும் மீறி பலர் மது அருந்தியபோது வாந்தி எடுத்தனர்.

நீதிபதி திரு என். கோவிந்தன் பி.ஏ., பி.எல். அவர்கள் அனுபவமொழி:

ஒருநாள் நெய்யாற்றின் கரையிலிருந்து 6 கிலோ மீட்டர் தென்கிழக்கில் உள்ள ரோட்டில் சுமார் 70 வயது நிரம்பிய காவி உடை அணிந்த ஒரு வயோதிகர் இந்த செய்தியை என்னிடம் சொன்னார்:

''கொஞ்ச நாட்கள் அவர் திருவனந்தபுரம் பொது மருத்துவமனையில் உடல் நலமின்றி அனுமதிக்கப்பட் டிருந்தார். டாக்டர் மாதவன் பிள்ளை எம்.எல்.ஸி. அப் போது அங்கு மருத்துவராக இருந்தார். அந்த நோயாளி தன் தாயிடம் மிகுந்த பற்று வைத்திருந்தார். தன் தாயின் மரணம் தனது மடியில் வைத்துதான் ஏற்பட வேண்டும் என அவர் விரும்பினார்.

தாயின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என அவருக்கு தகவல் கிடைத்தது. நோயாளிக்கு வாத நோய் காரணமாக கொஞ்சமும் நடக்க முடியவில்லை. தாயைக் காண ஆர்வம். கை ஊன்றி கால்கள் தரையில் இழுத்து ஊர்ந்து செல்ல தீர்மானித்து ஆஸ்பத்திரி வாசல் வரை சென்றார்.

அப்போது குருதேவர் சில சீடர்களுடன் அங்கு வருவதைக் கண்டார். குருதேவரிடம் தன்னைக் காப்பாற்ற குரல் கொடுத்து வேண்டினார். விவரத்தைக் கேட்டறிந்த பின்னர், குருதேவர் அருகில் நின்ற ஒருவரிடமிருந்து ஊன்றுகோலைப் பெற்று அந்த நோயாளியிடம் கொடுத்து அதனை ஊன்றி நடக்கச் சொன்னார். அதனைப் பெற்ற அந்த நோயாளி நடந்து சென்றார். அந்த நடையில் புதிய தெம்பும், வேகமும் மிளிர்ந்தன.

ஒரு நாள் குருதேவர் கூறியது:

ஒரு நாள் இரவு நேரம் நாம் ஆசிரமத்தில் இருக்கும் போது ஒரு கருந்தேள் வந்து காலில் கொட்டியது. அந்த நிமிடத்தில் கால் முதல் தலை வரை தீப்பிடித்தது போன்று தாங்க முடியாத வலி ஏற்பட்டது. அப்போது நமது மனத்தில் இவ்வாறு தோன்றியது.

நாம் இந்த ஜென்மத்தில் எந்த பிராணிக்கும் துன்பம் ஏற்படுத்தவில்லையே! முன் ஜென்மத்திலும் இவ்வாறு இருக்க நீ நம்மை ஏன் துன்புறுத்தினாய்? இவ்வாறு எண்ணி அந்த பிராணியை நன்றாகப் பார்த்தார். உடனே அந்த ஜீவி இறந்துவிட்டது. அப்போது நாம் தெரியாமலேயே இவ்வாறு கூறினோம். ''அய்யோ கஷ்டம். உன்னுடைய கொடுமையினால் உனக்கு இவ்வாறு நேர்ந்தது. நாம் எதுவும் செய்யவில்லை. எனவே சண்டை செய்யாதவனிடம் சண்டையிட்டால் சண்டை

செய்பவன் அழிவான்'' என தெளிவுபடுத்தினார். மறு நாள் காலையில் இறந்துபோன தேளை சந்தன விறகினால் தகனம் செய்து அந்த சாம்பலை ஸ்வாமிகள் கையில் எடுத்துக்கொண்டு ஆற்றில் கரைத்தார் எனக் கூறப்படுகிறது.

''ஒரு நாள் குருதேவர் அருவிப்புரம் மலை உச்சியில் இருந்தபோது, மழையின்றி மக்கள் துன்புறுவதை பக்தர்கள் சென்று வருத்தத்துடன் கூறினார். அப்போது குருதேவர் மழை பெய்ய ஐந்து ஸ்லோகங்கள் சமைத்து வழங்கினார்கள். சில பக்தர்கள் குளித்து தூய்மையாக இந்தப் பாடல்களை பக்தியுடன் பாடினார்கள். உடனே நல்ல மழை பெய்தது.''

**ஸ்ரீமத் கோவிந்தானந்த ஸ்வாமிகள் கண்ட அற்புதம்:**

''1916-ம் ஆண்டில் குருதேவர் காஞ்சிபுரத்தில் சில சீடர்களுடன் சென்று கொண்டிருந்தார். அவருடன் நானும் இருந்தேன். கொஞ்ச தூரம் சென்றபோது, குருதேவர் ஒரு கோவிலை கண்ணுற்றார். கோவிலுக்குள் சென்று தரிசிக்க வேண்டும் என விரும்பினார். பூஜை முடிந்து கோவிலை தாள் இட்டு பூட்டி ஐயர் சென்றுவிட்டார். ஐயரிடம் கோவில் சாவியை எடுத்து வருமாறு சொல்ல விரைந்தேன்.

இதற்கிடையே குருதேவர் கோவில் வாசலுக்குச் சென்று கதவைத் தொட்டவுடன் அது திறந்து கொண்டது. குருதேவர் விரும்பியபடி உள்ளே சென்றார். ஐயர் சாவியுடன் வந்தபோது, கோவில் கதவு திறந்திருப்பதைக் கண்டு வியந்தார். ''இது எப்படி ஏற்பட்டது'' எனக் கேட்டார். 'பூட்டிட மறந்திருக்கலாம்' என்று மட்டும் குருதேவர் பதிலுரைத்தார். இந்த கோவில் காஞ்சியில் பெயர் பெற்ற ஏகாம்பர நாதர் கோவிலாகும். குருதேவர்

கோவிலுக்குள் சென்றபோது அங்குள்ள தொன்மை வாய்ந்த மாமரத்தைப் பார்த்து அதனடியில் சற்று நேரம் அமர்ந்தார். அப்போது மாமரத்தில் கனிகள் எதுவும் இல்லாத காலம். நமக்கு ஒரு மாம்பழம் கிடைத்தால் நன்று என அருளினார். உடனே அந்த மரத்திலிருந்து ஒரு கனி தனது அருகில் விழுந்தது. குருதேவரின் இந்த அற் புதத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

வக்கத்து வாசியான வேலாயுதன் என்பவர் வயிற்றுப் பொறுமல் மற்றும் காலில் வீக்கமும் ஏற்பட்டு அவதிப் பட்டார். அந்த நபர் தனது நோயை குருதேவரிடம் தெரி வித்தார். அதற்கு குருதேவர், வாழைக்கிழங்கு சாப்பிடு மாறு நோயாளியிடம் கூறினார். அவ்வாறு வாழைக் கிழங்கு சாப்பிட, நீரும் வீக்கமும் அகன்றன வேலாயுதன் பின்னர் வெகு காலம் வாழ்ந்திருந்ததாக திரு. எஸ். நாராயணன் வைத்தியர் கூறுகிறார். ஸ்வாமிகள் வழங்கி குணம் ஏற்பட்ட மருந்துகள், வைத்தியர்கள் கொடுத்தால் நோய் குணம் ஏற்படவில்லை. இதைத் தெரிந்து கொண்ட ஒருவர், குருதேவரிடம் இவ்வாறு ஏற்படக் காரணமென்ன ? என்று வினவினார். அதற்கு அவர் சொன்ன பதில: ''அது எல்லாம் முகூர்த்த சிகிச்சைகள் ஆகும்.''

**ஸ்ரீமத் வித்யானந்த ஸ்வாமிகள் கூறியது:**

சிவகிரியிலும், ஆலுவாயிலும் ஓய்வெடுக்கும் வேளை யில் எவ்வளவோ பைத்தியம் பிடித்தவர்களை பல இடங்களிலிருந்து குருதேவர்முன் கொண்டு வந்தனர். அவர்களை வார்த்தையால் மட்டும் குருதேவர் குணப் படுத்தி அனுப்பினார்.

ஈரோடு நகரில் பவானி என்ற இடத்தில் விக்னேஸ் வரர் பிரதிஷ்டைக்காக ஸ்வாமிகளை சில பக்தர்கள்

அழைத்து வந்தனர். அப்போது எல்லோரும் வியப்படையும் வகையில் ஒருவரது பைத்தியத்தை குருதேவர் குணப்படுத்தினார். அந்த பைத்தியக்காரன் வாலிபனும் பலவானுமாக இருந்தான். அவனை நெருங்க மக்கள் பயப்பட்டனர். அவன் தொல்லை தாங்கமுடியாமல் கால் கைகள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கட்டுண்டு கிடந்தான். பலவருடங்களாக பலவித சிகிச்சை அளித்த பின்பும் குணம் பெறவில்லை. ஐந்து எட்டு நபர்கள் சேர்ந்து சங்கிலியுடன் அந்த பைத்தியத்தை குருதேவர் முன் கொண்டுவந்து நிறுத்தினர். அவனைப் பார்த்தவுடன் குருதேவருக்கு அவன்பால் பரிதாபம் ஏற்பட்டது.

''அய்யோ, பாவம்! அவிழ்த்து விடுங்கள்'' என ஆணையிட்டார். கூடியிருந்தவர்கள் சற்று தயங்கினார்கள். ஸ்வாமிகளின் கண்டிப்பான ஆணையைத் தொடர்ந்து இரும்பு சங்கிலியை அகற்றினர். அவனுக்கு எதுவுமில்லையே! அவன் நம்மோடு இருக்கட்டும் என குருதேவர் சொல்லி பைத்தியக்காரனை நிற்கச் சொல்லி மற்றவர்களை திரும்பிப் போக கட்டளையிட்டார். அப்போது முதல் அவனது பைத்தியம் குறையத் தொடங்கியது. பின்னர் அது அறவே நீங்கியது. பலமுறை அவனது பைத்தியத்தைப் பற்றி நாங்கள் அக்கறையுடன் விசாரித்ததுண்டு. பின்னர் ஒருபோதும் அவனுக்கு பைத்திய ஏற்படவில்லை.

ஒருதடவை குருதேவர் மதுரையில் ஓரிடத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அங்கு ஐயங்கார் வகுப்பைச் சார்ந்த ஒருவருக்கு பைத்தியம் பிடித்திருந்தது. சிகிச்சைகள் பல செய்தும் பயன் ஏற்படவில்லை. இறுதியில் அந்த பைத்தியத்தை குருதேவர் முன் கூட்டி வந்தார்கள். குருதேவர் ஒரு பழத்தை அவனிடம் கொடுத்து, ''இதை சாப்பிடு; குணமாகும்'' என்றார். அத்துடன் அவனது பைத்தியம் தீர்ந்தது. பல மாதங்கள் கழித்து குருதேவர் கொழும்புவிற்கு பயணம்

மேற்கொள்ள மதுரையில் வந்து இதை மனதில் எண்ணி அங்கு ஓய்வெடுத்தார். அப்போது பைத்தியக்காரனாக இருந்த ஐயங்காரின் தந்தையும் மற்றும் பலரும் காணிக்கைப் பொருட்களுடன் குருதேவரை தரிசிக்க வந்தனர். குருதேவரின் ஆசிபெற்ற பின் அவனுக்குபின்னர் ஒருபோதும் பைத்தியம் ஏற்படவில்லை. அவன் தொலைவில் பணிபுரிந்ததால் அன்று குருதேவரை வந்து பார்க்க முடியவில்லை எனக் கூறினார்கள்.

அம்பாசமுத்திரம் திரு. அ. வேலாயுதம் அவர்கள் தெரிவித்த செய்தி:

கேரளாவின் தலைநகரமான திருவனந்தபுரம் அருகில் உள்ள பேட்டை என்ற இடத்தில் ஒரு செல்வந்தர் 70 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. வயது 10 ஆகியும் பேச முடியாத ஊமையாக இருந்தான். பையனை வாய் பேச வைப்பதற்காக பல மருத்துவ வல்லுனர்களை அணுகி சிகிச்சை அளித்தனர். எவ்வளவோ முயன்றும் குழந்தை வாய் பேசவில்லை.

ஸ்ரீநாராயண குருதேவரின் அற்புத சித்திகள் திக்கெட்டும் பரவி இருந்த காலம் அது. முடிவில் அந்த ஊமைப் பையனை குருதேவரிடம் அழைந்து வந்தனர். பையனின் தந்தையும் உறவினர்களும் பழங்கள் மற்றும் காணிக்கைப் பொருட்களும் கொண்டுவந்து குருதேவர் பாதங்களில் வைத்து வணங்கி தங்கள் ஏக்கத்தைத் தெரிவித்தனர். குருதேவர் அந்த வாய் பேசாத பையனை தன் அருகில் அழைத்து சிறிது தூரம் கூட்டிச் சென்றார். தன் கையில் இருந்த எலுமிச்சம்பழத்தை ஊமைப்பையனிடம் காட்டி ''இது என்ன சொல்'' எனக் கேட்டார். ''எலுமிச்சம்பழம்'' என அழகாகக் கூறினான். வேறு பல பொருட்களையும் அவனிடம் காட்டியபோது, எல்லா

வற்றிற்கும் சரியான பதில் சொன்னான். தனது தந்தையைப் பார்த்து ''அப்பா'' என அழைத்தான். அப்போது அந்த பையனின் தந்தைக்கு ஏற்பட்ட ஆனந்தம் அளவிட முடியாதது. கண்ணீர் மல்க, திருவடிகளில் வீழ்ந்து வணங்கி குருதேவருக்கு நன்றி தெரிவித்து திரும்பினார்கள். இந்த அற்புத புதுமையை நேரில் பார்த்த அம்பை திரு. அ. வேலாயுதம் வழங்கிய செய்தி இது.

குருதேவர் தமிழ்நாட்டிலுள்ள நாகர்கோவில் அருகிலுள்ள கோட்டாறு என்னுமிடத்தில் தங்கி இருந்த போது, சங்கிலியால் கட்டப்பட்ட பைத்தியம் பிடித்தவனை அழைத்து வந்தார்கள். டாக்டர்கள் பலர் முயன்றும் குணப்படுத்த முடியாத அந்த வியாதியை ஸ்வாமிகள் ஒரு கனியைக் கொடுத்து சாப்பிட வைத்து தன்னுடன் அவனை சிறிது நாள் தங்கி இருக்கச் செய்து பூரண குணம் ஏற்படச் செய்தார்.

1926-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மதுரைக்கு வருகை தந்தபோது, மழையின்றி வறட்சியால் வாடிய மக்கள் கூட்டம் குருதேவரிடம் வந்து வணக்கம் செலுத்தி மழை வேண்டி முறையிட்டனர். கருணைக் கடலான குருதேவர் அருகில் இருந்த ஒரு பிள்ளையார் கோவில் வெகு நாட்களாக வழிபாடு எதுவும் நடைபெறாமல் இருப்பதை தெரிந்து பிள்ளையாருக்கு தேங்காய் உடையுங்கள் என அருள் கூர்ந்தார். அப்படியே நடத்தினர். என்றுமே இல்லாத் அளவுக்கு பெருமழை பெய்தது. குருதேவரின் மகிமையை புகழ்ந்தனர். இந்த அற்புத செய்தி அக்காலச் செய்தித் தாளில் வெளிவந்திருந்தது.

இது போன்ற குருதேவரின் அற்புதச் செயல்கள் ஏராளம். விரிவஞ்சி, சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளோம்.

அத்தியாயம் XIII

# தமிழ்நாட்டில் குருதேவரின் தொண்டுகள்

உலக நாகரிகங்களுள் மிகவும் பழமையும் பெருமையும் நிறைந்த நாகரிகம், திராவிட நாகரிகம் ஆகும். உலக மக்களால் ஏத்திப் போற்றப்பட்டு, 'நனி நாகரிகர்' என்று இம்மக்கள் அழைக்கப்பட்டனர்.

அகத்தியர், திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், சுந்தரர், ஆதிசங்கரர், தாயுமானவர், சேக்கிழார், வள்ளலார், ரமண மகரிஷி முதலான மகா சித்தர்களான ஞானிகள் இத்திராவிட நாகரிகத்தின் நன்முத்துக்களாகத் திகழ்கிறார்கள். அவர்கள் நாட்டு மக்களுக்காக வழங்கிய படையல்கள் அனைத்தும், சைவ சமயத்தின் திண் தூண்களாக விளக்கம் தருகின்றன.

நமது குருதேவர், இளமை வயதிலேயே திராவிட நாகரிகத்தின் பால் மிகவும் ஈர்க்கப்பட்டவர். அதனால் அவர் சைவ ஆகமங்களிலும், சைவ சித்தாந்தத் தத்துவங்களிலும் தேர்ச்சி பெற முடிந்தது.

தமிழில் சிறந்த புலமை பெற்ற குருதேவர், ஒழுவில் ஒடுக்கம், திருக்குறள் முதலான தேனினும் இனிய நற்றமிழ் நூல்களை மலையாளத்தில் மொழியாக்கம் செய்தார். தேவாரம் பதிகங்களையும், நல்ல தமிழில் வடித்துள்ளார். அம்மாட்டோ!

தமிழ் நாட்டின் புனிதத் தலங்களான பழனி, இராமேசுவரம், திருச்செந்தூர், மதுரை, காஞ்சிபுரம், சென்னை முதலான பல்வேறு இடங்களுக்குச் சென்று, தங்கி தியா

னம் செய்து புனிதம் பெருக்கியுள்ளார் குருதேவர். ஆங் காங்கு உள்ள தமிழ்ச் சித்தர்களையும் தரிசித்த அவர், உவப்பிலா ஆனந்தம் எய்தினார்.

அதே சமயம், தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் மூடப்பழக்க வழக்கங்களும் சாதிக் கொடுமைகளும் குரு தேவருக்கு விளங்காமல் இல்லை. குருதேவர், சீடர் களுடன் கேரளத்தில் செய்த சீர்திருத்தங்களைப் போல் தமிழ் நாட்டிலும் செய்திட விழைந்தார்; தமிழ் நாட்டின் முக்கியப் பகுதிகளுக்கு அவர் சுற்றுப் பயணம் மேற் கொள்ள விரைந்தார்.

**கோட்டாற்றுக் கோவில்களில்:**

தமிழ் நாட்டின் தென்கோடியை சேர்ந்த கோட்டாறில் உள்ள கடுக்கை என்னும் இடத்தில் நயினார் தோப்புத் தெரு மேற்கே இல்லத்துப் பிள்ளைமார் வகையைச் சார்ந்த ஒரு சமாதி கோவிலுக்கு சென்றார் குருதேவர். அங்கு ஆடு, கோழிகளை பலி கொடுத்தும், கள், சாரா யம் போன்றவற்றைப் படைத்தும் வழிபட்டு வந்த மூட பழக்க வழக்கங்களை மாற்றி, சாத்வீக பூசையை ஏற்படுத் தினார். இங்குள்ள 8 தெருக்களில் 42 விக்ரகங்களை அகற்றி, ஒரு பிள்ளையாரை மட்டும் பிரதிஷ்டை செய் தார்.

குருதேவரின் அறிவுரைப்படி அங்கு ஏற்படுத்திய பள் ளிக்கூடம் ஸ்ரீநாராயண குரு சென்ட்ரல் ஸ்கூல் எனும் பெயரில் இப்போது சிறப்பாக நடந்து வருகிறது.

பிள்ளைமார் சமூகத்தினரிடையே இருந்த கோஷ்டிப் பூசலை அகற்றி ஒற்றுமையுடன் வாழ வழி ஏற்படுத்தி னார் குருதேவர்.

**ஈரோடில் சீர்திருத்தம்:**

ஈரோடு, பவானி ஆகிய இடங்களுக்கு குருதேவர் சென்றார். அங்கு நிலவிய தீய பழக்கங்களையும் சாதி சமயப் பூசல்களையும் கண்டு மனம் வருந்தினார். அவ்வூர் மக்களை அழைத்து நல்வழிப்படுத்தி, ஒரு பிள்ளையார் கோவிலையும் கட்டினார். தனது சீடர்களுள் ஒருவரான யாழ்பாணம் ஸ்வாமி அவர்களை நியமித்து மக்களுக்கு கல்வி புகட்ட வழிவகை செய்தார்.

குருதேவர் ஒரு கனியைக் கொடுத்து பைத்தியம் பிடித்தவனை தன்னுடன் சிலநாள் தங்கி இருக்கச் செய்து குணம் அடையச் செய்தார்.

**சேலத்தில் சாதனை:**

குருதேவர் சேலத்திலும் சில நாள் தங்கி தொண்டாற்றினார். தனது சீடர்களுள் ஒருவரான தவத்திரு சாந்தலிங்க ஸ்வாமி மூலம் சேலத்தில் ஒரு ஆசிரமத்தைத் தொடங்கினார். அங்கு மக்களுக்கு அறிவுரைகள் கூறவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி புகட்டவும் ஏற்பாடு செய்தார்.

**மதுரையில் மக்கட்பணி:**

1914-ல் மதுரை திருப்பரங்குன்றம் முருகர் சன்னிதிக்கு அருகில் உள்ள மடத்தில் குருதேவர் தங்கி இருந்து நாட்டுக்கோட்டை செட்டியார், முதலியார், பிள்ளைமார், ஐயங்கார் முதலிய சமூகத்தினருக்கு அருளாசி வழங்கினார்.

தேவகோட்டை ஜமீன்தார் சர். அருணாச்சலம் செட்டியார் இல்லத்தில் ஏற்பட்டிருந்த துன்பங்களைப் போக்கி மனச் சாந்தியை உண்டாக்கினார் குருதேவர்.

1926 அக்டோபர் திங்களன்று...

மழைவளம் குன்றி, மக்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த காலம். குருதேவரிடம் மக்கள் முறையிட்டனர். குருதேவர் கருணை கூர்ந்தார். அன்று முழுதும் மழை பெய்தது. அற்புதத்தைக் கண்டனர் மக்கள்.

**இலவச வைத்தியப் பணி:**

மதுரையில் குருதேவருடன் தவத்திரு சாந்தலிங்க ஸ்வாமி, தவத்திரு ஹனுமான்கிரி ஸ்வாமி, தவத்திரு சுகுணானந்தகிரி ஸ்வாமிகள் ஆகியோரும் தங்கி இருந்து தொண்டு செய்தனர். தவத்திரு ஹனுமான்கிரி ஸ்வாமி குருதேவரின் கட்டளைப்படி ஒரு வைத்திய சாலையை நிறுவி மாட்டு வண்டியில் மருத்துகளை ஏற்றி கிராமம் கிராமமாகச் சென்று ஏழை எளிய மக்களுக்கு இலவச வைத்தியப்பணி செய்தார்.

திருப்பரங்குன்றம் அருகில் முட்டையரசி என்னும் இடத்தில் குருதேவர் தங்கி இருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கையில் மங்களப் பொருள்களுடன் மனம் மகிழ்ந்து ஸ்வாமிகளை காணச் சென்றனர். அவர்களுக்கு ஆசி வழங்கி 'இது ஒரு தொழிற்பயிற்சிக் கல்லூரிக்கு ஏற்ற இடம். இங்கு ஒரு நாள் அந்த கல்லூரி வரும்' என்று மொழிந்தார். அதனை மெய்ப்பிக்கும் வகையில் இப் போது இங்கு தொழிற் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

மதுரையில் டாக்டர் திரு. சங்கர்ராம் தலைமையில் தமிழ் நாடு ஸ்ரீநாராயணகுரு டிரஸ்ட்' தொடங்கப் பட்டு, ஸ்ரீநாராயண தொழிற் பயிற்சிப் பள்ளி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மதுரை அழகரடியில் குருதேவர் தியானத்தில் இருப்பது போன்ற சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு தினசரி வழிபாடு நடந்து வருகிறது. நாராயணகுரு நற்பணி இயக்கமும் நன்கு செயல்பட்டு வருகிறது.

1926 அக்டோபர் திங்கள் குருதேவர் சீடர்களான தவத்திரு ஹனுமான்கிரி ஸ்வாமி, தவத்திரு சங்கீத ஸ்வாமி. தவத்திரு. சாந்தலிங்க ஸ்வாமி, ஸ்ரீசங்கு பக்தன் ஆகியோருடன் அம்பா சமுத்திரம், பாபநாசம், விக்கிரம சிங்கபுரம் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து தாமிர வருணி நதிக்கரையில் உள்ள ஒரு மடத்தில் தங்கி இருந்தார்.

இராமசாமிப் பிள்ளை, என்ற பக்தர் குருதேவரை திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றார்.

''விவசாயம் செய்ய வேண்டும்; தொழில் செய்து முன்னேற வேண்டும்; அடிமைத் தொழில் செய்யக் கூடாது; கல்வியைக் கற்க வேண்டும்; சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று குருதேவர் பக்தர்களிடம் உபதேசித்தார்.

பின்னர் தூத்துக்குடி, சிதம்பரம், குற்றாலம், தென்காசி, பொள்ளாச்சி, திருச்சி, கோயம்புத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய இடங்களுக்கும் அவர் அடிக்கடி சென்று பக்தர்களுக்கு தமது ஆத்மவிடத்தை நல்கி தொண்டாற்றி வந்தார்.

**திருக்கோவில்களில் வரவேற்பு:**

1915-ம் ஆண்டு பழனி தண்டாயுதபாணி கோவிலில் குருதேவருக்கு விசேஷ பூஜை வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருச்சி, திருவரங்கம் கோவிலிலும் அவருக்கு நல்வரவேற்பு.

1920-ம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகத்தான வரவேற்பு.

1926-ம் ஆண்டு இராமநாதபுரம் ராஜாவின் சிறப்பு விருந்தினராக தங்கினார் குருதேவர்.

**குருதேவரைக் கவர்ந்த காஞ்சி:**

முத்தி தரும் நகரேழுள் முக்கியமானது என்று போற் றப்படுவதும், கலை வளர்த்து நிலை பெற்றதும் ஆகிய காஞ்சிபுரம், ஆழ்வார்களின் மங்களாசாசனங்களையும், நாயன்மார்களின் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்ற கோவில்கள் நிறைந்த பெரு நகரம் ஆகும். பற்பல சமயத்தலைவர்கள் ஞானம் முழுமை பெற இந்நகரத்தை நாடி வந்துள்ளார்கள்.

கல்விச் செல்வம், பொருட்செல்வங்களில் சி றப்புற்று விளங்கிய இந்நகரம், ஞானத் தபோதனர்களை வா என்று அழைத்து பாரெலாம் ஞானச் செல்வத்தை வழங்கி வந்து இருக்கிறது.

1915-ம் ஆண்டு முதலாம் உலகப்போரின் போது, இந்த நகரம். கவின் குறைந்து காணப்பட்டது.

காரணம் கண்ட குருதேவர் துணுக்குற்றார். மனம் வருந்தினார். உடனடியாக தமது சீடர் தவத்திரு கோவிந் தானந்த ஸ்வாமியை காஞ்சிக்கு அனுப்பி வைத்தார்.

தவத்திரு கோவிந்தானந்தர், கொச்சியில் கலை நலம் மலிந்த குடும்பத்தில் தோன்றி, ஆங்கிலக் கல்வி பெற்று, சமஸ்தானத்தில் பிராஸிகியூடிவ் இன்ஸ்பெக்டராக பதவி வகித்து வந்தவர்.

குருதேவரின் மகிமையால் ஈர்க்கப்பட்டவர்; பதவி யைத் தூக்கி எறிந்து, குருதேவரின் சீடர் ஸ்வாமி போதா னந்தரிடம் இருந்து கஷாய உடை பெற்று துறவியானவர்.

இந்தியாவின் புண்ணிய நகரங்களை தரிசித்த அவர் தூரக்கிழக்கு நாடுகளான மலேயா, கோவா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் சென்று பிரசாரம் செய்து வந் தார்.

மலேயாவில் உள்ள டைப்பிங் என்னும் இடத்தில் புதுக்கோட்டை, கீழைசேவற்பட்டி திரு. சோமசுந்தரம் செட்டியார் அவரின் அணுக்கச் சீடரானார்.

தவத்திரு கோவிந்தானந்தர் காஞ்சி நகருக்கு வந்த போது கண்டது என்ன?

இன்புளுவென்சா, காலரா, பிளேக் முதலான கொடிய நோய்கள் பரவி ஏழை எளிய மக்களை வெகுவாக வாட்டி வதைத்தன; பலியானோர் பலர்; பரிதவித்தோர் பலப்பலர்.

இந்த இழிநிலையில், தவத்திரு கோவிந்தானந்தர் மிகுந்த தீரத்துடன் மக்கள் துன்பத்தை துடைக்க முன் வந்தார். அவர் கொடுத்த மருந்துகள் விரைந்து குணமளித்தன.

எனினும் கொடு நோயால் வருந்துவோர்க்கு சத்துணவு தேவைப்பட்டது. பசி அவர்களின் உயிரைப் பதைக்க வைத்தது. என்செய்வார் ஸ்வாமி?

கையில் பொருள் இல்லாத தவத்திரு கோவிந்தானந்தர், துணிவுடன் பலரிடமும் சென்று பிச்சையேற்று, பல்லுயிர் ஓம்பி வந்தார்.

**ஆசிரம வாழ்க்கை:**

தவத்திரு கோவிந்தானந்தரின் கருணை மிகுந்த தொண்டுக்கு ஆதரவு பெருகியது. அவருக்கு உணவும், உறையுளும் தந்து ஆதரிக்கும் அன்பர்கள் பலர் ஏற்பட்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திரு. எம்.கே. இராமநாத சர்மா ஆவார். சிகிச்சை இல்லத்தில் திரு. இ.எஸ். கோபால அய்யர், திரு. பி. ஆர். ரகுராமன் ஆகிய டாக்டர்கள் தொண்டுபுரிய முன் வந்தனர்.

கோவிந்தானந்தரின் சீடர் திரு. சோமசுந்தரம் செட்டியார் கருணை உள்ளத்தோடு இப்போதுள்ள ஆசிரம இடத்தை 1915-ம் ஆண்டு கிரயம் வாங்கி உபகரித்தார். கூடமும், அறைகளும், சமையற்கட்டும், தியான மண்டபமும் கட்டப்பட்டு படிப்படியாக ஆசிரமம் வளர்ச்சி அடைந்தது.

அதில் பிள்ளையார் பாளையம் திரு. மாசிலாமணி முதலியார், செட்டி நாட்டுச் செல்வியர் திருமதி உண்ணாமலை ஆச்சியார், ஓக்கூர் திருமதி வள்ளியம்மாள் ஆச்சியார் மற்றும் பொதுமக்களின் பங்குடன் ஆசிரமம் பாங்கு பெற்றது.

**காஞ்சியும் அற்புத மாங்கனியும்:**

1916-ம் ஆண்டு காஞ்சிக்கு வருகை தந்தார் குருதேவர். ஏழை, எளிய மக்களின் நலனை கருத்திற் கொண்டு தர்ம வைத்தியசாலையைத் தொடங்கி வைத்தார். அது இன்றும் சேவா மனப்பான்மையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. வலிப்பு, வாதம், குட்டம், ஆஸ்துமா, காசம், பாரிச வாயு முதலான தீராத பல நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

குருதேவர் காஞ்சியில் புகழ் வாய்ந்த ஏகாம்பரநாதர் கோயிலுக்குச் சென்றார். அங்குள்ள மாவடி மகிமையை கேள்வியுற்றார். இந்த மாவடியில் பட்டினத்தார், ஐயடிகள், காடவர், கோன் நாயனார் முதலான தவச் சீலர்கள் தவம் நோற்றிருக்கிறார்கள். 2000 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த இந்த மாமரம் நான்கு வேதத்தை நினைவுபடுத்தும் வகையில் நான்கு கிளைகளாக வளர்ந்து வேத மாமரமாக திகழ்கிறது.

அன்னை உமாதேவி இந்த ஒற்றை மாவடியின் கீழிருந்துதான் தவம் நோற்று இறைவனை வழிபட்டும் பேறு பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. இந்த இடத்தில்

குருதேவர் சிறிது நேரம் தியானம் செய்தார்.

இந்த அற்புதமான மாமரத்திலிருந்து ஒரு மாங்கனி கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று சீடர்களிடம் மொழிந்தார். என்ன ஆச்சரியம்!

அப்போது ஒரு மாங்கனி அவர் அருகில் விழுந்தது. மாமரத்தில் மாங்கனி காய்ப்பில்லாத காலம் அது.

**தவத்திரு ஆத்மானந்தர் பொற்காலம்:**

குருதேவர் நிறுவிய ஆல்வாய் அத்வைதாசிரமத்தைச் சார்ந்த சமஸ்கிருத கல்லூரியின் தலைவராக இருந்தவர் தவத்திரு ஆத்மானந்தர். இவர் தர்க்கம், இலக்கியம், அலங்காரம், சோதிடம் முதலான சாத்திரங்களைக் கற் றுத் தேர்ந்தவர். குருதேவரின் திருக்கரங்களாலேயே காஷாய உடை ஏற்ற பெருமை தவத்திரு ஆத்மானந்த ஸ்வாமிக்கு உரியது.

தவத்திரு கோவிந்தானந்தருக்குப் பிறகு காஞ்சி ஸ்ரீநா ராயண சேவா தலைவராக தவத்திரு ஆத்மானந்த ஸ்வாமி பொறுப்பேற்றார். அவரது வியத்தகு கல்வித் திறமையும் ஆன்றவிந்தடங்கிய அடக்கமும் பணிவும் போற்றுதற்குரியன.

காஞ்சி ஆசிரம வரலாற்றில் தவத்திரு ஆத்மானந் தரின் அருளாட்சிக்காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

இங்கு நடைபெறும் தைத் திங்கள் (ஜனவரி — பிப்ர வரி) குருபூஜை விழா சிறப்பு வாய்ந்தது. மூன்று நாள் விழா நாட்களிலும், எவ்வித வேறுபாடும் இன்றி ஆயி ரக்கணக்கான மக்களுக்கு அன்னம் பாலிப்பும், கலைஞர் களுக்கும், அறிஞர்களும், இசைவாணர்களும் அளிக்கும் செவி விருந்து.

**பேரறிஞர் அண்ணாவுக்கு வைத்தியம்:**

கைதேர்ந்த மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட பக்க வாதம், குஷ்டம், இழுப்பு நோய் முதலியவை தவத்திரு ஆத்மானந்த ஸ்வாமி திறமையால் வெற்றியுடன் குண மாக்கப்பட்டன.

தமிழ்நாட்டு அரசியலில் விழிப்பை — பண்பை — பாசத்தை நாட்டு மக்களிடையே மறுமலர்ச்சியை உண் டாக்கிய முன்னாள் முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தோள்வலிக்கு இந்த ஆசிரமத்திற்கு வந்து ஆயுர்வேத சிகிச்சை பெற்றுள்ளார். தவத்திரு ஆத் மானந்த ஸ்வாமி நேர்பார்வையில் திறமைமிகு வைத்தி யர்களால் அவருக்கு 'இராஜ வைத்திய' சிகிச்சை அளிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் ப. நடராஜன், கவிஞர் கண்ண தாசன் முதலான அறிஞர் பெருமக்களும், தொழில் அதி பர்களும் இவண் போந்து உடல் பிணிக்கும், உளப் பிணிக்கும் தகுந்த சிகிச்சை பெற்று சென்றுள்ளனர்.

**சென்னைக்கு வருகை:**

சென்னை வேப்பேரி ஹண்டர்சு ரோட்டில் அமைந் துள்ள ஸ்ரீநாராயண மந்திரம், மக்கள் அனைவரும் வேறுபாடின்றி வழிபட்டு மனச்சாந்தி பெறும் நல்லிட மாகத் திகழ்கிறது.

குருதேவர் இந்த மந்திரத்தில் அநேக நாட்கள் தங்கி உபதேசம் செய்துள்ளார். 'ஒரே ஜாதி; ஒரே மதம்; ஒரே கடவுள் மனிதருக்கு!' என்னும் மகத்தான தாரக மந்தி ரத்தை உபதேசித்து அவர், மனித சமுதாயம் மேம்பட அவருடைய அறிவுரைகள் நல்கியுள்ளார்.

'இந்த இடம், ஆசிரமம் அமைக்க ஏற்புடையது' என்று அவர் திருவாய் மலர்ந்த போது, உடனிருந்த அவருடைய சீடர் திரு. ஆலும் மூட்டில் கோவிந்ததாஸ் எனும் பெரியார் 1913-ல் இந்த இடத்தையும் கட்டிடத்தையும் கிரயம் பெற்று, காணிக்கை ஆக்கினார்.

1926-ல் குருதேவரின் சீடர்களுள் ஒருவரான ஸ்ரீ குருப்பிரசாத சுவாமிகள் தலைமையில் இங்கு இரவுப் பள்ளியும் மதப் பிரசார வகுப்புகளும் நடைபெற்றன.

சென்னை உயர்நீதி மன்ற முதன்மை நீதிபதி ஜஸ்டிஸ் திரு. டி. சதாசிவ அய்யர், ஜஸ்டிஸ். திரு. கிருஷ்ணன் முதலான பெருமக்கள் குருதேவரின் கொள்கைகளைப் பின்பற்றிப் பரப்பியுள்ளனர்.

காஞ்சி ஸ்ரீநாராயண சேவாசிரமத்தின் தவத்திரு ஆத்மானந்த ஸ்வாமி 1969-ம் ஆண்டு இங்கு எழுந்தருளி ஸ்ரீநாராயண மந்திரத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

**குருதேவர் தோற்றப்பொலிவு:**

1971-ல் குருதேவரின் முழு திருவுருவச் சிலை இந்த மந்திரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. குருதேவர் உயிர்ப்புடன் அமர்ந்து சாந்தம் தவழும் கண்களால் அனைவரையும் ஆகர்ஷிப்பது போன்ற தெய்விகத் திருவுருவப் பொலிவே பொலிவு!

எளிமையின் ஏற்றத்தை அன்பின் இன்பப் பெருக்கை ஆத்ம விசேடத்தின் அற்புத மகிமையை — ஆனந்த அருள் பெருக்கை குருதேவர் வாரி வாரி வழங்குகிறார் இங்கே!

இந்த மந்திரத்தில் தினம் தினம் மக்கள் வந்து குருதேவரை தரிசித்து சாந்தியும், மன அமைதியும் மட்டில்லா மகிழ்ச்சியும் பெறுகின்றனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே உலக அரங்கில் அன்பின் ஆழத்தையும் பண்பின் பேராற்றலையும் கலை கலாச்சாரத்தின் நுட்பத்தையும் முரசறைந்து வந்திட்ட தமிழகத்தின் இதயத் தானமாக விளங்கும் சென்னை மாநகரின் சிறப்பினை எவரே எடுத்துரைக்க வல்லார்!

இந்நகரின் எழிலுக்கு எழில் சேர்த்தாற் போல வேப் பேரி ஹண்டர்சு சாலையில் ஸ்ரீநாராயண மந்திரம் அமைந்து, குருதேவரின் அருள் தோய்ந்த சிந்தனை களைப் பாரெல்லாம் பட்டொளி வீசிடப் பரப்பி வரு கிறது.

**குருதேவரை வணங்குவோம்:**

மகாகவி பாரதியார், பகுத்தறிவுத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தமிழகத்துத் தலைவர்களால் கவ ரப்பட்ட குருதேவர், செயல் செயல் என்று செய்து காட் டிய சீர்திருத்தங்கள் ஏராளம்! ஏராளம்! போதனை களையே சாதனைகளாக மாற்றிய இந்த மகத்தான மா மனிதரை-ஸ்ரீநாராயண குருதேவரை வணங்குவோம்.

அவர் வழங்கிய கருத்துக் கருவூலங்கள் மனித குலம் ஆக்க ரீதியான முன்னேற்றப் பாதையில், செல்ல வழி வகுக்கட்டும்.

வாழ்க குருதேவர் புகழ்! வெல்க அவரது செந்நெறிச் சாதனைகள்!



காஞ்சிபுரம் ஸ்ரீ நாராயண சேவாஸ்ரமத்தில் ஆசிரமத் தலைவர் தவத்திரு ஆத்மரனந்த சுவாமி நேர் பார்வையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தோள்வலிக்காக ஆயுர்வேத சிகிச்சை பெறுகிறார்.



# ஸ்ரீ நாராயண குருதேவரின் மகா சமாதி மந்திரம்

சிவகிரி — வர்க்கலை

கேரளா